ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 1. | ஹிஜ்ரி 1348 துல் ஹஜ்ஜு மீ 1930 மே மீ | இதழ் 4

உள்ளடக்கம் பக்கம்

1. முஅவ்விதத்தைனி ... 145
2. நாயக வாக்கியம் ... 149
3. சாரதா சட்டம் ... 151
4. கஃபத்துல்லா ... 153
5. ஹஜ்ஜு ... 160
6. நம்மவர் முன்னேறும் மார்க்கம் ... 163
7. இஸ்லாமும் பெண்களும் ... 164
8. ஹிந்துராணிக்கு முஸ்லிம்சோதரன் ... 166
9. குர்பானி ... 168
10. உலுஹிய்யா ... 171
11. ஈதுல்அல்ஹா ... 174
12. சிறுபான்மையாரின் உரிமை ... 176
13. இஸ்லாமும் மேனாட்டு உடையும் ... 177
14. நிருபசாரம் ... 190
15. சமாசாரத்திரட்டு ... 193
16. ஆராய்ச்சிமேடை ... 166
17. முஸ்லிம்களின் பேரூழியம் ... 188
18. ஆசிரியர் குறிப்புகள் ... 190

OFFICE OF THE REG... 21 JUL 1930

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	...	,,	4	0	0
தனிப் பிரதி	...	,,	0	4	0

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

விளம்பர விகிதம்

ஒரு பக்கத்திற்கு	ஒரு மாதத்திற்கு	..	ரூபா	12	0	0
அரைப் பக்கத்திற்கு	,,	...	,,	7	0	0
கால் பக்கத்திற்கு	,,	...	,,	4	0	0

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

حفاظة الاسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ S. S. முஹம்மது அப்துல் காதிர் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 1	ஹிஜ்ரி 1348 துல் ஹஜ்ஜு மீ 1930 ஷு மே மீ	இதழ் 4

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS 21 JUL 1930

முஅவ்விதத் தைனி

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (நாம் இதை ஆரம்பிக்கின்றோம்)

ஸூறத்துல் பலக்

1. வைகறையின் றப்பினிடத்தில் நான் காவல் தேடுகின்றேன் என்று கூறுக.

2. அவன் படைத்த ஒவ் வொன்றின் தீங்கைவிட்டும்,

3. இன்னும், இருள்மூடும்போது இருண்ட இரவின் தீங்கைவிட்டும்,

4. முடிச்சுகளில் ஊதுபவர்களின் தீங்கை விட்டும்,

5. பொறாமைக்காரர் பொறாமை கொள்ளும்போது அவர்களின் தீங்கைவிட்டும்(நான் காவல் தேடுகிறேன் என்று கூறுவீராக).

வைகறையின் றப்பாகிய ஆண்டவன் படைத்த ஒவ்வொன்றின் தீங்கையும், இருண்ட இரவின் தீங்கையும், முடிச்சுகளில் ஊதுபவர்களின் தீங்கையும், பொறாமைக்காரர் பொறாமை கொள்ளும்போது அவர்களால் ஏற்படும் தீங்கையும் விட்டு, நான் அவனிடத்தில் காவல் தேடுகிறேன் என்று பிரார்த்திக்குமாறு நபியே நீர் ஜனங்களுக்குக் கூறுவீராக, என்பது இதன் பொழிப்புரையாகும்.

ஸூறத்துன்னாஸ்

1. மனிதர்களின் றப்பினிடத்தில் நான் காவல் தேடுகின்றேன் என்று (பிரார்த்திக்குமாறு ஜனங்களுக்கு நீர்) கூறுவீராக.

2. (அந்தறப்புதான் உண்மையில்) மனிதர்களுக்கு அரசன்.

3. (இன்னும் அந்த றப்புதான்) மனிதர்களுக்கு நாயன்.

4. (மனதில் தோன்றும்) ஊசாட்டங்களின் தீமையை விட்டு (பின்னால் விலகி இருந்துகொண்டு தீமை விளைவிப்பனாகிய) கன்னாஸ் (எத்தகையோனாகில்),

5. அவன்தான் ஜனங்களின் இருதயங்களில் ஊசாட்டங்களை உண்டாக்குகின்றான்.

6. (அவன்) ஜின்களிலும் மனிதர்களிலும் 'உள்ளவனே'

மனதில் பலவிதமாகத் தோன்றும் கெட்ட ஊசாட்டங்களின் தீமையை விட்டு மனிதர்களுக்கு றப்பாகவும் அரசனுகவும் நாயகனுகவுமிருக்கிற அவனிடத்திலேயே நான் காவல் தேடுகிறேன் என்று பிரார்த்திக்குமாறு நபியே நீர் ஜனங்களுக்குக் கூறுவீராக. பின்னுல் பதுங்கி இருந்துகொண்டு ஜனங்களைக் கெடுப்பவனுன கன்னுஸ்தான் ஜனங்களின் இருதயங்களில் மேற்கண்ட கெட்ட ஊசாட்டங்களை உற்பத்தி செய்கிறுன். இத்தகைய கன்னுஸ்கள் மனிதர்களிலும் ஜின்களிலும் இருக்கின்றனர் என்பது இதன் பொழிப்புரையாகும்.

இறைவனிடம் காவல் தேடும் விபரம் இவ்விரு அத்தியாயங்களில் கூறப்பட்டுள. ஆதலால், இவைகளுக்கு "முஅவ்விதத்தைனி" என்று பெயர். இவ்விரண்டும் திருக்குர் ஆனிலுள்ள கடைசி அத்தியாயங்களாகும். குர்ஆனிலுள்ள கடைசி ஜுஸ்விலுள்ள சிறு சிறு அத்தியாயங்களை நம்மவர் பெரும்பாலும் தொழுகைகளில் ஓதுவர்; ஆதலால் வாசகருக்கு அவைகளின் கருத்துக்கள் ஒருவாறு தெரியவேண்டும் என்பது நம் நோக்கம். அந் நன்னேக்கங்கொண்டு அவ்வைகளையே முதலில் கூறத் தீர்மானித்தனம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பனுஸுறைக் கோத்திரத்தைச் சேர்ந்த லபீதுப்னு அஃஸம் என்ற யூதன், செய்வினை செய்தனன்; அவ்வினை நீங்கும்பொருட்டு, இறைவன் இவ்விரு அத்தியாயங்களை நாயகமவர்களுக்கு வஹீமூலம் அறிவித்தான்; என்று தப்ஸீர்கள் கூறுகின்றன. லபீத் என்ற அந்த யூதனுக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருந்தன. இவர்களில் மூத்த பெண் வஞ்சனை, பில்லி, சூன்யம் செய்வதில் கெட்டிக்காரி. இவள் லபீதின் கட்டளைப்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்மீது சூன்யம் செய்தனள். இறைவன் கிருபையால் நபிகள் நாயகமவர்களுக்கு அச்சூனியம் பெருந் தீங்கொன்றும் விளைவிக்கவில்லை.

ஆனுல், "நாயகம் அவர்கள் அவ்வமயம் ஒரு காரியத்தைச் செய்யாமலிருக்க, அதை அவர்கள் செய்ததாக நினைத்துக்கொள்வார்கள்" என்று ஹஜ்றத் ஆயிஷா நாயகி அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறுர்கள். மேலும் நாயகமவர்கள் பெரும்பாலும் படுத்துக்கொண்டிருப்பார்களாம். ஒருநாள் படுத்துக்கொண் டிருக்கும்போது, "ஹஜ்றத் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், வேருெரு மலக்கும் நாயகமவர்களின் வலது பக்கமும் இடது பக்கமும் வந்து உட்கார்ந்ததுபோலும். லபீதுடைய மக்கள் சூன்யம் செய்து ஒரு கிணற்றினுள் வைத்திருப்பதாக அவர்கள் சம்பாஷிப்பது போலும் கண்டார்கள்.

உடனே நாயகமவர்கள், ஹஜ்றத் அலீகர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களை அழைத்து கிணற்றிற்குள் இருக்கும் சூன்யத்தை எடுத்து வருமாறு கட்டளையிட்டார்கள். அவ்விதமே எடுத்துவந்து பார்க்கையில், அதில் பதினேரு முடிச்சுகள் போடப்பட்டு இருந்தனவாம். அச்சமயத்தில் இறைவன் நாயகமவர்களுக்கு மேற்கூறிய அத்தியாயங்களை வஹியின் மூலமாக அறிவித்தான். இவ்விரு அத்தியாயங்களிலும் மொத்தம் 11 வசனங்களே உள. ஷை சூன்யத்திலும் 11 முடிச்சுகளே இருந்தன. ஆகவே ஒவ்வொரு முடிச்சுக்கும் ஒரொரு வசனத்தை ஓதி, முடிச்சுகள் எல்லாம் அவிழ்க்கப்பட்டன. நபிகள் நாயகமவர்களுக்கு இருந்த சொற்ப சங்கடமும் இறைவன் கிருபையால் நீங்கிற்று.

திருகுர் ஆனிலுள்ள பல அத்தியாயங்களும் வசனங்களும் அவ்விதம் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டு வெளியாக்கப்பட்டவை. தவிர, திருக் குர்ஆன் முழுவதும் ஒரே சமயத்தில் மொத்தமாக நாயகமவர்களுக்கு அருளப்படவில்லை; சமயத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் தகுந்தவாறு கொஞ்சங் கொஞ்சமாகவே அருளப்பட்டது. அவைகள் அருளப்பட்ட சமயத்தையும் சந்தர்ப்பத்தையும் கவனியாமல், அவைகளிலுள்ள கட்டளைகளைப் பின்பற்றி முஸ்லிம்கள் நடக்கவேண்டுமென இமாம்களும் குர்ஆன் வியாக்கியானிகளும் கூறியுள்ளர். இனி இவ் வத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள வசனங்களைப்பற்றி கவனிப்பதற்கு முன், சூன்யம், வஞ்சனை, பில்லி ஆகியவைகளைப்பற்றி திரு குர்ஆன் என்ன கூறுகிறது என்பதைப்பற்றி சிறிது விளக்குவாம்.

சூன்யம், பில்லி இவைகளுக்கு அறபிகள் தம் மொழியில் ஸிஹ்ர் எனக்கூறுவர். ஸிஹ்ருவைப்பற்றி திருக்குர்ஆனில் பல இடங்களிலும் பிரஸ்தாபம் உண்டு. இரண்டாவது அத்தியாயமாகிய ஸூறத்துல் பகறுவில் ஸுலைமான் அலைஹிஸ்ஸலா மவர்களைப்பற்றிய விபரத்தில் ஷைத்தான்கள் மனிதர்களுக்குச் சூன்யத்தைக் கற்றுக்கொடுத்து வந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இதுவுமல்லாமல், மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களைப் பற்றிய சரித்திரத்தில், எகிப்தில் இருந்த பிர்ஔன் என்னும் அரசன் தன் தேசத்திலுள்ள சூன்யக்காரர்களை எல்லாம்அழைத்து, ஹஜ்றத் மூஸா (அலை) அவர்களிடம் போட்டி போடச் செய்ததாகவும், அச்சூனியக்காரர் கயிற்றைப் பாம்பாக ஆக்கியதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் கவனிக்கும்பொழுது, சூன்யமென ஒன்று தொன்று தொட்டு இருந்து வந்ததாகவும், இதனுல் தீங்கு உண்டாகிறதென ஜனங்கள் நம்பி வந்ததாகவும் தெரியவருகிறது. இறைவனை அஞ்சி வணங்கி, அவன் கட்டளைப்படி நடப்பவர்களை அச்சூன்யம் ஒன்றுஞ் செய்யாது என்பதை இறைவன் மூஸா(அலை)அவர்களின் சரித்திரத்தில் விளக்கி இருக்கிறுன்.

மேலும் யார் யார் எதைதைச் செய்யினும் இறைவன் கட்டளைப்படியே எல்லாம் நடக்குமென்றும், சூன்யங்களால் மட்டும் எவருக்கும் யாராலும் தீங்கு இழைத்துவிட முடியாதென்றும், ஸூறத்துப் பகறுவில் 102-ம் வசனத்தில் இறைவன் தெளிவாகக் கூறி இருக்கிறுன். எனினும் வெகு காலமாக இருந்து வந்த ஒரு நம்பிக்கை திடீரென்று பொதுஜனங்களின் மனதைவிட்டு அடியுடன் நீங்குவது சிரமம். ஆதலால் இப்படிப்பட்ட நம்பிக்கையைப் பொதுஜனங்களிடமிருந்துப் போக்கி விடுவதற்கு ஹேதுவாக இருக்கும் பொருட்டு, இவ்விரு அத்தியாயங்களையும் இறைவன் மேற்கண்ட சந்தர்ப்பத்தில் வெளியாக்கி, சூன்யத்தைச் சூன்யமாக யாவரும் நன்கு உணரும்படி நபிகள் நாயகமவர்கள் மூலமாக நமக்குக் கற்பித்திருக்கிறுன் என்பதைத் தெரிந்துகொள்கிறேம்.

இனி இந்த அத்தியாயங்களிலுள்ள விஷயங்களைப்பற்றிக் கவனிப்போம். ஸூறத்துல் பலக்கின் முதல் வசனம் வைகறையின் றப்பினிடத்தில் காவல் தேடுகிறேன் என்பதாகும். உலகத்தைச் சூழ்ந்திருந்த இருளை நீக்கி அதில் வெளிச்சம் உண்டாகும்படி செய்யச் சக்தியுள்ள நாயன் தன்னுடைய பாதுகாப்பைத் தேடுபவர்களுக்கு அபயமளித்து அவர்களுக்கு எவ்வித தீங்கும் வராமற் காப்பாற்றும் சக்தியைப் பெற்றிருக்கிறுன் என்பதே அதன் கருத்தாகும்.

இரண்டாவது வசனம் அவன் படைத்த ஒவ்வொன்றின் தீங்கைவிட்டுக் காவல் தேடுகிறேன் என்பதாகும். நமக்குத் தீமை ஏற்படுவதெல்லாம் அவனது சிருஷ்டிகளாலேயே ஏற்படக்கூடும். இவ்வுலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும் மனிதனின் நன்மைக்காகப் படைக்கப்பட்டிருந்தாலும் அவைகள் எப்பொழுதும் எல்லோருக்கும் நன்மையையே பயக்கும் எனக் கொள்ள முடியாது. அவ்வஸ்துக்களில் சிலவற்றை நாம் வகை தெரியாமல் உபயோகித்து, அவைகளினுல் நன்மையை அடைவதற்குப் பதிலாக தீமையை அடையவும் கூடும். அப்பொழுது நாம் அத்தீமை இன்ன வஸ்துவினுல் உண்டாயிற்று எனத் தவறுக நினைத்துக் சொல்வோம். அத்தவறுன எண்ணமும் எடுபட்டுப் போவதற்காக "அவன் படைத்த ஒவ்வொன்றின் தீமையை விட்டுக் காவல்தேடுகிறேன்" என நாம் அவனைப் பிரார்த்திக்கின்றேம்.

மூன்றுவது வசனத்தில், இராக்காலங்களில் இருள் சூழ்ந்திருக்கும்போது அதனுலேற்படும் தீமையைவிட்டுக் காவல் தேடுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. உலகத்தில் நிகழக்கூடிய தீமைகள் பெரும்பாலும் இரவிலேயே நடைபெறும்; அதிலும் அதிக இருட்டாகவுள்ள சமயத்தில் தான் அவைகள் பெரும்பாலும் நிகழும். அதிலும் பில்லி, சூன்யம் செய்பவர்கள் பெரும்பாலும் அர்த்த ராத்திரியிலே மந்திரங்களை உச்சாடனம் செய்வர் என நாம் கேள்விப்பட் டிருக்கிறேம். ஆதலால், இரவினுல் தீங்கேற்படுகிறது என்ற எண்ணம் நீங்குவதற்காக இந்தப் பிரார்த்தனை கூறப்பட்டிருக்கிறது.

நான்காவது வசனத்தில், முடிச்சுகளில் ஊதுகிறவர்களின் தீமையினின்று காவல் தேடுகிறேன் எனக் கூறப்பட்டிருக்கிறது. பில்லி, சூன்யம் முதலியவைகள் பலவிதமாகவும் செய்யப்படுவதாகக் கூறுவர். ஆயினும்

அவைகளில் முடிச்சுப் போடுவது முக்கியமாகக் கருதப்பட்டுவருகிறது. ஆதலின், அத்தகைய முடிச்சுகளாலும் ஊதுபவர்களாலும் தீங்குகள் ஏற்படுகின்றன என்ற எண்ணமும் இப் பிரார்த்தனையால் நீங்கிவிடும்.

இவ்விதமான தீங்குகளெல்லாம் பெரும்பாலும் அழுக்காறு கொண்ட அறிவிலிகளாலேயே செய்யப்படும். ஒருவருக்கு ஒரு பாக்கியம் கிடைத்தால், அதைக்காணப் பொறாமைக்காரர்கள் மனம் பொறுப்பதில்லை. அதை அழிப்பதற்கான வேலையில் முனைந்துவிடுவர்; பாக்கியத்தைத் அழிக்க முடியாவிட்டால், பாக்கியசாலிகளையே தொலைத்துவிடவும், அவருக்குத் தீங்கிழைக்கவும் முற்படுவர். இது சகஜம். ஆதலால் தான், இறைவன் பொறாமைக்காரர்களின் தீங்குகளை விட்டுத் தன்னிடமே காவல் தேட வேண்டுமென்பதையும், தன்னிடமே காவல் தேடுபவருக்கு எப்பொழுதும் அபயம் உண்டு என்பதையும், இவ் ஐந்தாவது வசனத்தில் அறிவிக்கிறான்.

திருகுர் ஆனின் இறுதி அத்தியாயமாகிய ஸூறத்துன்னாஸானது இதற்கு முந்திய அத்தியாயத்துடன் நெருங்கிய சம்பந்தமுடையது. மேலும், இவ்விரண்டும் ஒரே காலத்தில் வெளியாக்கப்பட்டதாகவே இருக்கின்றன. உலகத்தில் நடக்கும் தீமைகள் யாவற்றிற்கும் தப்பு எண்ணமும், சந்தேகமும் பெரும்பாலும் அடிப்படையாம். ஆகவே, அவைகளுக்கு மனிதர்கள் இடங்கொடுக்கக் கூடாதென இறைவன் இவ்வத்தியாயத்தில் எச்சரிக்கை செய்திருக்கிறான். திருகுர் ஆனில் இன்னும் பலவிடங்களிலும் இதைப்பற்றிக் கூறி இருப்பதுடன், இத்தகைய தப்பு எண்ணங்களை ஆதாரமாகக்கொண்டு குற்றங்களைத் தேடித் திரியாதீர்கள் என்றும் விலக்கி இருக்கிறான்.

இந்த அத்தியாயத்தின் முதல் மூன்று வசனங்களிலும் முறையே மனிதர்களின் றப்பு என்றும், மனிதர்களின் அரசன் என்றும், மனிதர்களின் நாயன் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அல் இன்ஸான் அபீதுல் இஹ்ஸான் என்பது அறபி அமுத மொழி. அதாவது மனிதன் உபகாரத்திற்கு அடிமைப்பட்டவன் என்பதாகும். உலகத்தில் மனிதர்கள் மற்றவர்களுக்குப் பொருள் ஈந்து, உணவளித்துப் படிப்பிப்பதன் மூலமாகவும், பிறரால் கஷ்ட நஷ்டம் வராமல் பேணி நீதி செலுத்தி அரசுபுரிவதன் மூலமாகவும், மக்களைத் தமக்கு அடிமைப்படுத்தி ஆட்கொள்ள முடியும். இத்தியாதி உதவிகளைப் பிறரால் அடைபவர்கள் அவர்களையே தஞ்சமென அவர்களிடம் அண்டவும், அவர்களை வணங்கவுங் கூடும். இத்தகைய உதவிகளைப் புரிந்ததனுல் தான் பாபிலோன் பட்டணத்திலிருந்த நம்றூத் என்ற அரசன் தன் உருவச்சிலை ஒன்றைக் கோவிலில் நிறுத்தி, ஏக பரம்பொருளாகிய அந்த ஒரே ஆண்டவனை வணங்குவதற்குப் பதிலாகத் தன்னையே வணங்கும்படி கட்டளையிட்டான்.

அவனுடைய பிரஜைகளும் அவனுடைய உபகாரம் பெற்றதனுலும், அவனுடைய அதிகாரத்துக்குப் பயந்ததனுலும், அவ்வுருவச் சிலைக்கு ஆராதனை செய்ய ஆரம்பித்தனர். இஃதேபோல், எகிப்து பிர் ஔன் அரசனும் தனது பிரஜைகளிடம் தானே நாயன் எனக் கூறி வந்தனன். அல்லாஹூ தலா இதுபற்றி எச்சரிக்கும் பொருட்டு, இவ்வத்தியாயத்தின் முதல் மூன்று வசனங்களிலும், "மனிதர்களுக்கு உண்மையான றப்பு அவன்தான்; மனிதர்களுச்கு உண்மையான அரசன் அவன்தான்; மனிதர்களுக்கு உண்மையான ஆண்டவன் அவன்தான்" என்று அறிவித்து அவனையே வணங்குவதுடன் அவனிடத்திலேயே காவல் தேடவேண்டுமென்பதையும் வலியுறுத்திக் கூறி இருக்கிறான். ஆதலால் அவ்வுபகாரங்களை மனத்தில் பதித்து, வழிகெடுத்து மக்களை இம்மை மறுமைப் பேறில்லாமல் செய்யும் ஷைத்தானின் தீங்கைவிட்டுக் காவல் தேடும்படியாக ஜின்களுக்கும் மனிதர்களுக்கும் அறிவுறுத்தி இருக்கிறான். இத்தகைய எண்ணங்களை ஊட்டும் ஷைத்தான்கள் ஜின்களிலும், மனிதர்களிலும் இருப்பதாக இவ்விறுதி வாக்கியத்திலிருந்து விளங்கும்.

நாயக வாக்கியம்

"எவன் ஹஜ்ஜுச்செய்து என்னுடைய கப்றை ஜியாறத்துச் செய்யவில்லையோ அவன் எனக்கு அநியாயம் செய்தவனாவான்"; "எவன் என்னுடைய கப்றை ஜியாரத்துச் செய்கிறானோ, அவனுக்கு என்னுடைய ஷபாஅத்து வாஜிபாகிவிடும்"; என்னை ஜியாரத்துச் செய்பவர்களுக்கு சோர்க்கலோக முண்டு"

இத்திருவாக்குகள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் கூறப்பட்டவை; நபிகள் நாயகம்(ஸல்)அவர்களின் கப்றைஜியாரத்துச் செய்பவர்கள் அந்த நாயகமவர்களின் ஷபாஅத்துக்கும் சொர்க்கலோகத்திற்கும் அருகதையுள்ளவர் ஆவர் என்பதை மேற்கண்ட ஹதீதுகளால் தெரிந்துகொள்ளலாம். தவிர ஹஜ்ஜுக்குச் செல்வோர் நபிகள் நாயகமவர்களின் றௌலா ஷரீபை ஜியாரத்துச் செய்யாமல் வந்துவிடின், அவர்கள் நபிகள் நாயகமவர்களுக்கு அநியாயம் செய்தவர்களாவார்கள் என்பதும் மேற்கண்ட ஹதீதுகளிலிருந்து புலப்படும். இதனால்தான் நாயகமவர்களின் றௌலாவை ஜியாரத்துச்செய்தல், முஸ்தஹப்புகளில் (அப்லல்) வரிசையானதாகுமென்றும், வாஜிபுக்கு அடுத்தபடியாக உளது என்றும், இமாம்கள் இயம்பி இருக்கிறார்கள்.

இவ்வாறு ஜியாரத்துச் செய்வதால், யாது பயன் என்பதை நபிகள் நாயகமவர்களே கூறியுள்ளார்கள். நபிகள் நாயகமவர்கள் மக்காவுக்கும், மதீனாவுக்கும் இடையிலுள்ள தங்களின் தாயாரின் கப்றை ஜியாரத்துச் செய்தார்கள். அப்பொழுது நாயகமவர்களும் அழுதார்கள்; அவர்களைச் சுற்றி இருந்த மற்றவர்களையும் அழவைத்தார்கள். பின்பு நாயகமவர்கள் கூறியது........நான் என் தாயாரின் கப்றை ஜியாரத்துச் செய்ய அவனிடம் அனுமதி கேட்டேன். அதற்கவன் அனுமதி அளித்தான். ஆதலால் (முஸ்லிம்களே) நீங்கள் கப்றுகளை ஜியாரத்துச் செய்யுங்கள். ஏனெனில் அவைகள் உங்களுக்கு மரணத்தை ஞாபகமூட்டுகின்றன'' என நாயகமவர்கள் கூறியதாக அபூஹுறைரு (ரலி) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

இந்த ஹதீது இமாம்முஸ்லிமால் கூறப்பட்டது. இதில் சந்தேகம் கொள்வதற்கு இடமில்லை. இந்த ஹதீதிலிருந்து நபிகள் நாயகமவர்களே தங்கள் தாயார் கப்றை ஜியாரத்துச் செய்ததாகவும், கப்றுகளை ஜியாரத்துச் செய்ய மற்றவர்களை ஏவியதாகவும் தெரிந்துகொள்கிறோம். மேலும், அந்த நாயகமவர்களே கப்றுகளை ஜியாரத்துச் செய்வதனால், மரணத்தின் ஞாபகம் வருகிறதெனக் கூறியிருக்கின்றார்கள். தவிர, நபிகள் நாயகம் அவர்கள் மதீனாவிலுள்ள ஜன்னத்துல் பக்கீஃ என்ற கப்றுஸ்தானுக்கு அடிக்கடி சென்று, ஜியாரத்துச் செய்ததையும், அங்கு பல பிரார்த்தனைகள் புரிந்ததையும் பற்றிய பல ஹதீதுகள் இருக்கின்றன.

நாமும் ஒருநாள் மரிக்கவேண்டும் என்ற எண்ணம் ஒருவனுக்கு இருக்குமாயின், பாபமான காரியங்கள்செய்ய அவன் அஞ்சுவான். இது உலகறிந்த விஷயம். மக்களுக்கு நல்ல புத்திபுகட்டி,நேரான பாதையில் செலுத்துவதற்கு மரணத்தைப் பார்க்கிலும் மேலான உபதேசி கிடையாது. உலகத்தில் ஜனங்கள் ஒடி ஓடிப் பொருள் சம்பாதிப்பதும், மாட மாளிகை, தோட்டந் துறவு, ஏற்படுத்திக் கொள்வதும்; அதிகார ஆதிக்கங்கள் தேடுவதும், இவ்வுலகத்தில் கௌரவமாக வாழலாம், சௌகரியமாக இருக்கலாம் என்ற ஒரு எண்ணத்தினால்தான். இத்தகைய எண்ணம் ஒருவனுக்கு இல்லாமற்போமாயின், அவன் தன் சுகவாழ்வுக்கான காரியங்களைத் தேடுவதில் கண்ணுங் கருத்துமாக இருப்பதை விட்டொழித்து பரலோக வாழ்க்கைக்கான காரியங்களையே செய்ய முற்படுவான். அதனால் உலக மக்களுக்கு நீதியும் நியாயமும்,

பரோபகாரமும் அம் மனிதனுல் ஏற்படும். இதனுல் உலக நன்மைக்குவழி பிறக்கும். கப்றுகளை ஜியாரத்துச்செய்வதனுல் இரக்க சிந்தை உதிக்கும். கப்றுகளில் அடக்கம் செய்யப்பட் டிருப்பவரின் ஞாபகம் உண்டாகும். அவர்கள் செய்த பல நற்காரியங்கள் நம் ஞாபகத்திற்கு வரும். அப்போதும் நாமும் நற்கருமமே புரியவேண்டும் என்ற எண்ணம் உதிக்கும்.

இது நிற்க நபிகள் நாயகம்(ஸல்)அவர்களினுடையவும் இதர நபிமார்களினுடையவும் கப்றுகளைத்தவிர ஏனைய கப்றுகளை ஜியாரத்துச்செய்யச் சென்று சிலர் அவ்விடத்திலேயே சில்லா இருப்பதை புக்ஹாக்களில் பெரும்பாலர் மறுத்திருக்கின்றனர். ஆயினும் ஜியாரத்துச் செய்வதை மறுக்கவில்லை. ஸூபியாக்களும், சிறுபான்மையின ரான புக்ஹாக்களும் சில்லா இருப்பதை நல்லது என்றும், அந்த கப்றுகளில் அமைக்கப்பட் டிருப்பவர்களின் அர்வாஹுகளினுல் ஜியாரத்துச் செய்பவர்களுக்குப் பல நன்மைகள் ஏற்படுகின்றன வென்றும் கூறியிருக்கிருர்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சந்ததியில் வந்த ஹஜ்றத் மூஸல்காஸிம் (றஹ்) அவர்களின் கப்றுவானது துஆக்கள் கபூலாகுவதற்கு முஜர்ரபானது என்றும், ஜீவாம்ருதம் போன்றது என்றும், ஹஜ்றத் இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள் கூறி இருக்கிருர்கள். ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம்கஸ்ஸாலீ (றஹ்) அவர்களும் கூட கப்றுகளில் சில்லா இருப்பதை ஆதரித்திருக்கிருர்கள்.

இக்காலத்திலும் பொதுஜனங்களில் சிலர் ஜியாரத்துச் செய்கின்றனர். ஜியாரத்துச் செய்யும்போது, மதத்திற்கு ஒவ்வாத பல காரியங்களைச் செய்தும் விடுகின்றனர். முஜாவிர்கள் என்று சொல்லிக்கொள்வோர் அறியாத முஸ்லிம்களைக் கண்டால், அவர்களிடம் அநேக விஷயங்களைக்கூறி பல அடாத காரியங்களைச் செய்வித்து விடுகின்றனர். இத்தகைய துர்க்கிருத்தியங்கள் யாவும் கூடாது; அவைகளை எல்லாம் ஆங்காங்கு உள்ள செல்வாக்குள்ள தலைவர்கள் தடுத்து நிறுத்துவது அவசியமாகும். என்றுலும், சிலர் இதைத் தடுப்பதாக நினைத்துக்கொண்டு அளவுக்கதிகமாகச் சென்று ஜியாரத்துச் செய்வதையே அடியுடன் நிறுத்த முயலுவதும், ஜியாரத்துச் செய்வதை சமாதிபூஜை என்றும் கப்று வணக்கம்என்றும் பத்திரிகையில் பத்தி பத்தியாக எழுதுவதும் அவர்களின் அறியாமையேயாகும். ஆதலால், அல்லாஹுத ஆலா யாவருக்கும் கப்றுகளை சட்டமுறைப் படி ஜியாரத்துச்செய்யும்பாக்கியம் தந்தருளி, மதீனு வாழ் நாயகரான றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் ரௌலா ஷரீபை ஜியாரத்துச் செய்து அவர்களின் ஷபா அத்துக்கு உரித்தாகுமாறு செய்தருள்வானுக. ஆமீன் !

ஹஜறத் உமர் (றலி) அவர்களின் அமுத மொழிகள்

1. உங்களுக்கு யாரிடத்தில் வெறுப்பிருக்கிறதோ அவரை நீங்கள் அஞ்சுங்கள்.

2. தான் செய்யுங் காரியங்களுக்கு தக்க பொருள் கூறக்கூடியவனே மிகவும் புத்திசாலியாவன்.

3. தீங்கை இன்னதென்று அறியாதவன் தீங்கில் அகப்பட்டுக் கொள்வான்.

4. பாபம் செய்துவிட்டு அதற்குப் பரிகாரமாக தௌபாச் செய்வதைப் பார்க்கினும், அந்தப் பாபத்தையே செய்யாமலிருந்து விடுவது மிகவும் சுலபமாகும்.

حفاظة الإسلام مدراس

சாரதா சட்டம்

முஸ்லிம் மக்களுக்கு உயிரினும் சிறந்தது மார்க்கமே யாம். மதத்திற்குப் பங்கம் நேரின், எந்த முஸ்லிமும் வாளாவிருக்க இயலாது. நமது மத உரிமையில் தலையிடும் சாரதா சட்டம் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அமலுக்கு வந்து விட்டது. அது கண்டு நம்மவர் பரபரப்புக் கொண்டுளர். இதனை அரசாங்கம் எத்துணை தூரம் உணர்ந்திருக்கிறதோ அறியோம்.

ஸ்ரீ ஹரி விலாச சாரதா எனும் ஹிந்துக்கனவான் அச்சட்டத்தினைக் கொண்டு வந்தவர் ஆவார். அச்சட்டம் ஹிந்துக்களுக்கு மட்டுமே என்று ஆதியில் சொல்லினர்; அதன் மேல் நம்மவர் அவ்விஷயத்தில் மிக்க கவனம் செலுத்தவில்லை. ஆனால் இறுதியிலோ அச்சட்டம் முஸ்லிம்களையும் கட்டுப்படுத்துவதாக இருக்கிறது. நம்மவரைக் கட்டுப்படுத்தக் கூடாதென இந்தியா சட்டசபையில் உள்ள முஸ்லிம் அங்கத்தினரில் பலரும் வற்புறுத்தினர். அரசாங்கமும் அச்சமயம் ஆக்டிங் இராஜப்பிரதிநிதியாக இருந்த லார்டு கோஷனும் அதனைக் கவனிக்கவில்லை. ரஜாவிலிருந்த லார்டு இர்வின் பின்னர், அப்பதவியை ஏற்றுக் கொள்ளவே நம்மவரில் சிலர் இர்வின் பிரபுவினிடம் தூதுசென்று, சாரதா சட்டத்தினால் நம்மவருக்கு ஏற்படும் மார்க்க சம்பந்தமான தீமைகளை எடுத்துரைத்தனர்; முஸ்லிம்களைக் கட்டுப்படுத்தக் கூடாது என்றும் வற்புறுத்திச் சொல்லினர். நம்மவரின் தூதர் சொல்லியதை யெல்லாம் இர்வின்பிரபு காது கொடுத்துக் கேட்டார்; அவ்வளவு தான்; முஸ்லிம்களின் குறையைப் போக்க, கோரிக்கையை ஈடேற்ற, இசைந்தாரில்லை. தமக்குப் பதிலாக இராஜப்பிரதிநிதி பதவி வகித்த ஒருவரால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தை மாற்றக்கூடாது என்று அப்பிரபு கருதினார் போலும்!

இர்வின் பிரபுவின் பான்மையைக் கண்டதும், முஸ்லிம் மகாஜனங்கள் தேசமெங்கும் மகாநாடு கூட்டினர்; சாரதா சட்டம் தங்களுக்குத் தேவையில்லை, என்று தீர்மானித்தனர்; மத உரிமைகளில் தலையிடும் அச்சட்டம் அறவே ஒழியவேண்டும் என்று அழுத்தமாகப் பேசினர்; அங்ஙனமே இராஜப்பிரதிநிதிக்கும் தந்தி மூலம் அறிவித்தனர்; மேலும், மார்க்கப் பாதுகாப்புக் கமிட்டியொன்றை அகில இந்திய ஜமியத்துல் உலமா சபையினர் ஏற்படுத்தி, தக்க முயற்சியும் எடுத்துக் கொண்டனர்; எடுத்துக்கொண்டுமிருக்கின்றனர். அச் சட்ட அமலிலிருந்து முஸ்லிம்களை நீக்கிவிடவேண்டும் என்று அக் கமிட்டியார் எவ்வளவோ முயற்சி செய்தும் பலன் கிட்டவில்லை. மதப் பாதுகாப்பு கமிட்டியார் எங்ஙனம் சும்மா இருப்பர்? மகாஜனங்களின் ஆதரவை முன்னிட்டு, அச்சட்டத்தை எதிர்ப்பதற்குரிய நடவடிக்கைகளில் இறங்கலாயினர்.

அக் கமிட்டியின் தலைவரான மௌலானா கிபாயத்துல்லா சாகிப் அவர்கள் முன்னதாகவே லார்டு இர்வினுக்கு இறுதியான எச்சரிக்கைக் கடிதம் எழுதத் தவறவில்லை. முஸ்லிம்களை அச் சட்ட அமலிலிருந்து விலக்காவிடின், நம்மவர் சட்ட மறுப்பில் இறங்க

நேரும் என்று மௌலானா அவர்கள் எச்சரிக்கை கொடுத்தார். இதுவும் செவிடன் காதில் சங்கு ஊதியதுபோல் ஆயிற்று. ஆகவே, அமலில் வந்ததும், அச் சட்டத்தை மீறி, மத உரிமையை நிலைநாட்ட, நாடெங்கும் முயற்சிகள் செய்யப்பட்டன. அகில இந்திய ஜமிபத்துல் உலமா சபையின் தலைவரான மௌலானா கிபாயத்துல்லா சாகிப், காரியதரிசியான மௌலானா அஹ்மது ஸயீத் சாகிப், மௌலானா முகம்மது அலீசாகிப், மௌலானா ஹஸரத் மோகானி, மௌலானா ஷௌகத் அலீசாகிப், முதலிய பெரியார்களும், மார்க்கத்தலைவர்களும், சமூகப் பிரமுகர்களும் அச்சட்டத்தை மீறி, பால்ய விவாகங்களை நடத்தி வைத்துளர். அப்பெரியோர்களைத் தவிர, ஏராளமாக மகாஜனங்களும் அவ் விவாகங்களில் பிரசன்னமாயிருந்து, சாட்சிகளாக கையெழுத்துச் செய்திருக்கிறார்கள். கான்பூர், டில்லி, முதலிய முக்கிய நகரங்களில் அச்சட்டத்தை மீறிப் பல விவாகங்கள் நடந்துள; மீரட், கல்கத்தா, பம்பாய், லாகூர் முதலிய நகரங்களிலும் அச்சட்டத்தை மீறி விவாகங்கள் நடை பெற்றிருப்பதுடன் இன்னும் பல விவாகங்கள் நடைபெறப் போகின்றன.

இவ்விதம் நம்மவர் சட்ட மறுப்புச் செய்வதை அரசாங்கத்தின் இரகசியப் போலிஸ் அதிகாரிகள் கண் காணித்து வருகிறார்கள். நம்மவரோ அந்தரங்கமாக எதையும் செய்யவில்லை; பகிரங்கமாக மணங்கள் செய்வதோடு முன்னதாகவே அரசாங்கத்துக்கும் அறிவித்து வருகின்றனர். சட்டத்தை மீறி விவாகம் நடத்தியவர்கள் மீதும், அவ் விவாகங்களைக் கண்டு ஆதரவு தந்து சாட்சிக் கையெழுத்திட்ட நபர்கள் மீதும் இன்றளவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. சட்டத்தை மீறி விவாகம் நடத்துபவர்மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டாம் என ஜில்லா மாஜிஸ்டிரேட்களுக்கு கவர்ன்மெண்டார் அறிக்கை யிட்டிருப்பதாக அறிய வருகிறோம்.

சாரதா சட்டத்தை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளின், இச் சட்ட மறுப்பு இயக்கம் வலுக்கும், இன்றேல் இயக்கம் தானாகவே நின்றுவிடும், என்று அரசாங்கம் எண்ணிக் கிடக்கின்றது போலும். பின்னர், நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று அரசாங்கம் கருதி யிருக்கலாம். பொது ஜன உணர்ச்சியை அசட்டை செய்து நடப்பதும், அதிகார மமதைக்குப் பங்கம் வந்து விடும் என்ற அகம் பாவத்தினால் செய்த தவறைச் சரியெனச் சாதிப்பதும், அரசாங்கத்தின் இயற்கை வழக்கமாய்விட்டது. இதனால் அரசாங்கத்தின் மீது ஜனங்களுக்கு மனக் கசப்பும் வெறுப்பும் உண்டாவதை அரசாங்கம் உணர வில்லை. இது பொழுது சட்ட மறுப்பில் இறங்க முஸ்லிம்கள் கருதவில்லையாயினும், நமது மார்க்கத்திலே அரசாங்கம் தலையிட்டு, அச்சட்டத்தில் பிடிவாதமாக இருப்பதால், நம்மவர் சட்டமறுப்பில் இறங்க நேருகின்றது. இதற்கு அரசாங்கமே காரணம். நம்மவர்மீது குறை கூறுவதற்கில்லை.

சாரதா சட்டத்தை மட்டு மன்றி, இதன் பொருட்டு இன்னும் பல சட்டங்களையும் மீறி நடக்க வேண்டுமென இஸ்லாமிய மார்க்கப் பாதுகாப்புக் கமிட்டியார் முடிவு செய்திருக் கின்றனர். ஆதலின் சாரதா சட்ட அமலி லிருந்து விடுபடும் வரையில், இதர சட்டங்களையும் மீற முஸ்லிம்கள் முன் வருதல் கூடும். மதத்தைக் காக்கவேண்டி, எதனையும் தியாகம் செய்ய முஸ்லிம் சமுகம் பின்வாங்காது. ஆதலின் முஸ்லிம்களைச் சாந்தப் படுத்த அரசாங்கம் உடனே முயல வேண்டும்; அங்ஙனம் முயலாமல் அடக்கு முறையை அரசாங்கம் கையாளுமேயானால், முஸ்லிம்கள் அனைவரும் மதத்தைக் காப்பதற்காகச் சட்ட மறுப்பில் முனைந்து விட நேரும் என்பது திண்ணம். அப்போது அரசாங்கம் தனது அலட்சிய புத்திக்காக அதிகம் வருந்த நேரும். ஆதலின் அரசாங்கம் புத்திசாலித்தனங் காட்டி, முஸ்லிம்களிடம் அன்பு பூண்டு, மார்க்க உரிமையில் தலையிடுவதில்லை என்று உறுதி கூறி, சாரதா சட்ட அமலிலிருந்து முஸ்லிம்களை விலக்கி விடுவதே அரசாங்கத்துக்குச் சாலச் சிறந்த வழியாம்.



கஃபத்துல்லா

மேலும், இப்ருஹீமும் இஸ்மாயீலும் அவ் வீட்டின் அஸ்திவாரத்தை உயர்த்திய போது, எங்களுடைய றப்பே! (இவ் ஆலயத்தை) எங்களிலிருந்து ஏற்றுக்கொள்வாயாக! நிச்சயமாக நீ (எங்களுடையபிரார்த்தனையை) கேட்பவனுகவும், அறிபவனுகவு மிருக்கின்றாய் (என்று பிரார்த்தித்தார்கள்.) திருகுர்ஆன்.

திரு குர்ஆனில், இரண்டாவது அத்தியாயத்தில் சரித்திர விஷயங்களைக் கூறுமிடத்து இத் திருவசனம் கூறப்பட்டுளது. இதன் சரித்திர விவரத்தைப் பேசுமுன் இதன் பெயர்க்குரிய காரணத்தைச் சொல்வாம்.

அறபு பாஷையில் சதுரமான இடத்திற்கு முக்அப்(சதுரம்)என்று பெயர். திருமக்காவிலுள்ள புராதனமான இத் தேவாலயமும்சதுரமாக உளது.ஆதலால்இதற்கு "கஃபா" என்று பெயர் வந்தது. இந்தக் கஃபாவுக்கு "பைத்துல்லாஹ்" என்றும், கஃபதுல்லாஹ்" என்றும் "மஸ்ஜிதுல்ஹறும்" என்றும் "பைத்துல் கதீம்" என்றும் பல பெயர்கள் உண்டு. இறைவனை வணங்குவதற்காக இவ்வுலகில் முதல் முதலாகக் கட்டப்பட்ட ஆலயம் இக் கஃபா தான் என்று நமது திருமறை மொழிகிறது. எனவே, இத் தேவாலயம் மிகவும் புராதன மானது. சரித்திர நூல்களும் இந்த உண்மையை வலியுறுத்தும்.

இத் தேவாலயத்தை ஹஜ்றத் நபி ஆதம் (அலை) அவர்கள் கட்டினுர்கள். பின்னர் நூஹ் அலைஹிஸ் ஸலாமவர்கள் காலத்திலே ஏற்பட்ட பிரளயத்தில் இத்தேவாலயத்தின் சுவர்கள் இடிந்துவிட்டன. இதன் அஸ்திவாரம் மாத்திரம் சமசதுரமான தளத்தைப் போல் இருந்துவந்தது. இத்தகைய புராதன மான மாளிகையின் அருகேதான், ஹஜ்றத்

இப்ருஹீம் (அலை) அவர்கள் தமது செல்வக் குழவியாகிய ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களையும், தமது மனைவியாகிய எகிப்து தேசத்து இளவரசி ஹஜ்றத் ஹாஜரு அவர்களையும் இறைவன் கட்டளைப்படி கொண்டுவந்து குடியேற்றினார்கள். அக்காலத்தில் இந்த இடம் ஒரு பள்ளத்தாக்காக இருந்தது; இதில் கனிவர்க்கங்கள் இல்லை.

மேலும் இது வறண்ட பிரதேசமாக இருந்தது. அதனால் இது விவசாயத்திற்குத் தகுதியாக இருக்கவில்லை. ஹஜ்றத் இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது அருமை மனைவியையும் மைந்தனையும் விட்டு விட்டுத் திரும்புங்கால், "இந்த இடம் அபயமளிக்கும் அழகிய பட்டண மாதல்வேண்டும்; சகலவித மான கனிவர்க்கங்களும் இங்குள்ளாருக்குக் கிடைத்தல் வேண்டும்; பற்பல வளங்களும் இங்கே கொழித்தல்வேண்டும்'', என்று பலவாறு பிரார்த்தனை செய்தார்கள். அதன் பலனாக இவ்விடம் நாளடைவில் ஜனங்கள் நிரம்பிய பட்டணமாகி, பாரான் வனம் என்ற பெயர் மாறி, பக்கா என்ற பெயர்பெற்றது. இத் தேவாலயத்திற்கு மரியாதை காட்ட வேண்டும் எனும் நல்லெண்ணத்தால் முற்காலத்திலே அறபிகள் இந்த ஆலயத்தைச் சுற்றிக் கட்டிடங்கள் கட்டி வசிக்காமல் கூடாரங்களிலே வசித்துவந்தனர். பின்னர் ஸஈதுப்னு அம்று (அல்லது ஸஅ துப்னு அம்று) என்பவர் காலத்தில்தான், முதல் முதலாக ஜனங்கள் வீடுகட்டிக் கொள்ளத் தொடங்கினர்; நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திற்குச் சில தலைமுறைகளுக்கு முன்புதான் இந்த நகரத்தில் கட்டிடங்கள் ஏற்பட்டன என்று ஐரோப்பிய சரித்திர ஆசிரியர் செப்புவர். தற்சமயம் மக்கா என்று வழங்கும் பெயரும் ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்களுக்குப் பின்பு தான் ஏற்பட்ட தென்னலாம்.

எனவே இந்த நகரம் அறபிதேசத்திற்குப் பொதுவாகவும், ஹிஜாஸ் மாகாணத்திற்குச் சிறப்பாகவும் மிக மிகப் பழமையான நகரமாகும். ஆதலால்தான் இந் நகரத்திற்கு "உம்முல் குரா'' என்றும் ஒரு பெயர் ஏற்பட்டிருக்கிறது.

இனி இந்த இடத்தில் கஃபா என்ற தேவாலயம் மீண்டும் புதுப்பிக்கப்பெற்ற வரலாற்றைக் குறித்துச் சிறிது கூறுவோம்.

இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆறுயிரம் (6000) ஆண்டுகளுக்கு முன் பாபிலோன் என்ற பட்டணம் சிறப்புற்றோங்கிவிளங்கிற்று. அக்காலத்தில் அதனை ஆண்டுகொண்டிருந்த "நம்றூத்'' என்ற கொடுங்கோ லரசன் ஜனங்களைத் துன்புறுத்தித் தன்னையே தெய்வமாக வணங்கவேண்டு மென்று வற்புறுத்தினான். அரசனது ஆணைக்கு அஞ்சி அனேகர் அவ்விதமே வணங்கினர். அக்கொடியோனைச் சீர்திருத்துவதற்காக இறைவன், இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை நபியாக அனுப்பினான். இறைவன் கட்டளைப்படி தம்மாலியன்றவரை அவனுக்கும் பிரஜைகளுக்கும் இப்ருஹீம் (அலை) அவர்கள் நேரானவழியைக் காட்டினார்கள். அவ்வேந்தனோ இப்ருஹீம் (அலை) அவர்களை எதிர்த்துப் பற்பல துன்பங்களுக்குள்ளாக்கினான்.

இறுதியில் இப்ருஹீம் (அலை) அவர்கள் தமது மனைவியுடன் அத்தேசத்தை விட்டு மேற்குத் திசை நோக்கிச் சென்று, எகிப்து தேசம் சேர்ந்தார்கள். எகிப்தின் வேந்தன், இப்ருஹீம் (அலை) அவர்களை இன்னார் என முதலில் அறிந்துகொள்ளவில்லை. பின்னர் நன்கறிந்து அவர்களைக் கண்ணியப்படுத்தினான்; தன்னுடைய அருமைப் புதல்வியாகிய ஹாஜருவையும் அவர்களுடன் அனுப்பினான். இப்ருஹீம் (அலை) அவர்கள் தமது இல்லாள் சாரா அம்மாள் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, ஹாஜருவை இரண்டாவது மனைவியாக விவாகம் செய்துகொண்டார்கள். இதுவரை இப்ருஹீம் (அலை) அவர்களுக்குப் புத்திரபாக்கியம் இல்லாதிருந்தது. அல்லாஹ்வின் அருளால் அவர்களுக்கு பீபீ ஹாஜருவின் வயிற்றில் ஓர் ஆண்மகவு உதித்தது. அக்குழவிக்கு இஸ்மாயீல் என்று பெயர். மக்கட்பேறில்லாக் குடும்பத்தில், பிள்ளைபிறத்தல் பரமானந்தம் விளைக்கும் அல்லவா? நபி இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களும், பீபீ ஸாருவும் பிள்ளையையும் தள்ளையையும் பிரியமாகப் போஷித்துப் பாதுகாத்துவந்தனர். ஆயினும் இவ்விருவரை

யும் பாரான் வனத்தில் குடியேற்றிவிடுமாறு இறைவன் கட்டளையிட்டான்.

இறைவன் கட்டளையை இம்மியும் பிறழாமல் நிறைவேற்றும் இப்ருஹீம் (அலை) அவர்கள் தமது மனைவியையும் மைந்தரையும் "பாரான்" வனத்தில் கொண்டுபோய் விட்டு வந்தார்கள். ஆயினும், அவர்கள் அடிக்கடி போய்ப் பார்த்து வருவதுண்டு. இங்ஙனம் தண்ணீரில்லாத வறண்ட கானகமாக இருந்தாலும் நபியவர்களின் புதல்வராகவும், பிற்காலத்தில் இந்த இடம் உலகத்தில் முக்கிய ஸ்தானம் வகிப்பதாகவும் இருப்பதை முன்னிட்டு, இஸ்மாயீல் (அலை) அவர்கள் தண்ணீருக்குத் தட்டின்றி வாழ்வதற்காக இறைவன் ஒரு துறவை உற்பவித்தான். இப்ருஹீம் (அலை) அவர்கள் அத்துறவுக்கு ஸோபா எனப் பெயரிட்டனர். அதுதான் இது காலை "பீர்ஜம் ஜம்" (ஜம் ஜம் கிணறு) என்று விளங்குகிறது. இடைக்காலத்தில் இக்கிணறு தூர்ந்துபோயிற்று. அநேகருக்கு அக்கிணறு இருந்ததாகக் கூடத் தெரியாது; பல தலைமுறைகள் அவ்வாறே கழிந்தன. என்றாலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிபு என்ற பிரபு அதைப் புலம்விசாரித்து மறுபடியும் தோண்டிவைத்தார்; இரண்டாம் முறையாகத் தோன்றிய கிணறு தான் இப்பொழுதிருக்கும் ஜம் ஜம் கிணறு.

பின்பு இடிந்து போன கஃபாவின் அஸ்திவாரத்தை உயர்த்திக் கட்டுமாறு இப்ருஹீம் (அலை) அவர்களுக்கு இறைவன் கட்டளையிட்டான். உடனே அவர்கள் தமது அருமைப் பிள்ளையாகிய இஸ்மாயீல் (அலை) அவர்களைத் துணையாகக் கொண்டு, அதன் அஸ்திவாரத்தை எழுப்பிக் கட்டினார்கள். அதை தவாப் செய்பவர்கள் எந்த இடத்திலிருந்து தவாப் செய்ய வேண்டுமென்று அறிவிப்பதற் கடையாளமாக ஹஜ்றத் இப்ருஹீம் அலை ஹிஸ்ஸலாமவர்கள் தம் புதல்வரை ஒரு கல் எடுத்து வரச் செய்து, அதைச் சுவரின் ஒருபக்கத்தில் இணைத்துக் கட்டினார்கள். அந்தக் கல்லுக்குத்தான் ஹஜ்ருல் அஸ்வத் என்ற பெயர் வந்தது. அந்தக்கல் சொர்க்கத்துக் கல் என்றும் சொல்லப்படுகிறது. அக்காலத்தில் இந்தக் கட்டிடத்திற்கு மேற் கூறையோ, முகடோ, தலைவாசலோ, கதவோ யாதொன்றும் கிடையாது. நான்கு பக்கமும் ஒன்பது முழ உயரமுள்ள சுவர்கள் கட்டப் பட்டிருந்தன. அப்போது இந்தக் கட்டிடத்தின் நீளம் 32 முழம் என்றும், அகலம் 22 முழம் என்றும் சொல்லப்படுகிறது.

பின்பு, ஹஜ்றத் இப்ருஹீம்(அலை)அவர்கள் தமது புதல்வரான இஸ்மாயீல் (அலை) அவர்களை இந்த வீட்டிற்கு ஊழியக்காரராக இறைவனிடம் தத்தம் செய்து சென்று விட்டார்கள். இஸ்மாயீல் (அலை) அவர்கள் இந்த வீட்டைப் பாதுகாத்து இதற்குச் செய்ய வேண்டிய ஊழியங்களை அந்தந்த காலத்தில் செய்து வந்தார்கள் ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களுக்குப் பின், அவர்களது மூத்த புதல்வரான நாபித் என்பவர் இத் தேவாலயத்தின் பணியாளராக அமைந்து காரியங்களைக் கவத்துவந்தார். இவர் இறந்துபோகவே, இவருடைய தாய்வழிப் பாட்டனாரும், ஹஜ்றத் இஸ்மாயீல்(அலை)அவர்களுக்குப்பெண் கொடுத்த மாமனாருமாகிய மலால் என்பவர் கஃபாவின் காரியஸ்தரானார். இவ்விதம்இஸ்மாயீல்(அலை) அவர்களின் வம்சத்தை விட்டு ஜர்ஹம் கோத்திரத்து மலால் என்வரின் வம்சத்திலேயே கஃபாவின் மேல் பார்வை இருந்து வந்தது. பின்னர், றபீ இப்னு ஹாரிஸா என்பவர் ஜர்ஹம் கோத்திரத்தினருடன் சண்டை போட்டு, அவர்களை மக்காவைவிட்டு வெளியேற்றி, கஃபாவுக்குக் காரியஸ்தரானார். இவர் ஷாம் தேசத்திற்குச் சென்ற காலத்தில், அங்குள்ளவர்கள் விக்கிரக ஆராதனை செய்வதைப் பார்த்துத் தாமும் இரண்டு மூன்று விக்கிரகங்களை வாங்கி வந்து, கஃபாவில் வைத்தார். இதுதான் அறப் நாட்டில் விக்கிரக ஆராதனைக்கு முதல் அஸ்திவாரமாயிற்று. இவருடைய வம்சத்தினரில்தான் கஜா ஆ என்ற கோத்திரம் தோன்றிற்று.

அக்காலங்களில் ஹஜ்றத் இஸ்மாயீல்(அலை) அவர்களின் வம்சத்தினர் மக்காவில் இருந்தனராயினும், கஃபாவுக்கு ஊழியம் செய்யும் உரிமை தங்களுக்கேதான் இருக்க வேண்டுமென வற்புறுத்தவில்லை. பின்னர், குறைஷிகளில் உதித்த குஸ்ஸீயுப்னுகிலாப் என்பவர், கஃபாவின் காரியஸ்தரான ஹுலைல் என்பவரின் மகளை மணந்தார். இவர் இறந்துபோகும் காலத்தில், தமது மருமகரான குஸ்ஸீ என்பவர் கஃபாவின் காரியஸ்தராக

இருக்கவேண்டுமென வசியத்துச் செய்தார். இதன்படி கஜாஆ கபீலாவிலிருந்த கஃபா ஊழியம் இஸ்மாயீல் (அலை) அவர்களின் சந்ததியில் குறைஷி கோத்திரத்திடம் வந்தது. இவர்தான் தனது கோத்திரத்தினரை மறுபடியும் ஒன்று திரட்டி, கஃபாவுக்கு அக்கம் பக்கத்தில் வசிக்கும்படி செய்தார் என்று சொல்லப் படுகிறது. குஸ்ஸீ என்பவருக்கு 6 புத்திரர் இருந்தனர். இவர்களில் மூத்தவராகிய அப்துத்தார் என்பவருக்கு கஃபாவின் காரியஸ்தர் பதவியை அளித்தார். இவர் இப்பதவியை ஏற்றுக்கொண்டா ராயினும், இவருக்குத் திறமை போதாதிருந்ததால்,குறைஷிகளுக்கும் மக்காவுக்கும் இவர் பொதுத் தலைவராக வர முடியவில்லை. ஆதலால், பொதுத் தலைமை வகிக்கும் அதிகாரம் அவருடைய சகோதரரான அப்து மனுபுக்குக் கிட்டிற்று.

இந்த அப்து மனுபுக்கு 6 புத்திரர்கள் உண்டு. அவர்களில் ஹாஷிம் என்பவர் தலைவரானர். கஃபாவுக்குக் காரியஸ்தராக இருக்கும் ஊழியத்தையும் தாம் அடைய வேண்டுமென ஹாஷிம் விரும்பினர். அப்துத்தாருடைய குடும்பத்தினர் அப்பதவிக்கு அருகதையற்றவரென அக்காலத்தில் கருதப் பட்டிருந்தார்களாயினும் அதற்கு ஊழியம் செய்யும் உரிமையை இழக்க அன்னவர் விரும்ப வில்லை. ஆகவே இரு குடும்பத்தினருக்கும் இது சம்பந்தமாக சண்டையுண்டாகும் போலிருந்தது. ஆயினும் இறுதியில் சமாதானம் ஏற்படவே, ஹஜ்ஜுக்காக வருபவர்களுக்கு அன்னபானம் அளிக்கும் வேலையை ஹாஷிம் அடைந்தார்.

கஃபாவின் மீது போர்வை போடும் வழக்கம் இருந்து வருவது பொதுவாக எல்லா முஸ்லிம்களுக்கும் சிறப்பாக ஹாஜிகளுக்கும் தெரிந்த விஷயமாகும். அவ்விதம் முதல் முதலாக கஃபாவுக்குப் போர்வை போட்டவர் யமன் ராஜ்யத்து ஹுமைரி வம்சத்து அரசனை அஸ் அது தபஃ என்பவர் ஆவர். யமன் தேசத்தில் நவீன முறையில் ஒரு விதமான துப்பட்டி அல்லது போர்வை தயார்செய்யப் படுகிறது. அந்தப் போர்வைக்கு, "புர்தேயமானி" என்று பெயர். அந்தப் போர்வைகளி லிருந்துதான் கஃபாவுக்குப் போர்வை அனுப்பப் பட்டு வந்தது. பின்பு மேற்கண்ட குஸ்ஸீ என்பவர் காலத்தில், எல்லா கோத்திரத் தினருக்கும் வரி போட்டு, அதில் வசூலாகும் பொதுப் பணத்திலிருந்து அந்தப் போர்வை தயார் செய்யப் பட்டு வந்தது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மேற்கண்ட யமனீ போர்வையை கஃபாவுக்குப் போர்த்தினர்கள் என அல்லாமா ஸர்க்கானி (றஹ்) அவர்கள் எழுதி இருக்கிறார்கள்.

அப்பால் நபிகள் நாயகம்(ஸல்)அவர்களின் பாட்டனுரான அப்துல் முத்தலிபு என்பவர் காலத்தில், யமன் ராஜ்யம் அபிஸினியா நாட்டிற்கு ஐக்கியப் பட்டிருந்தது. அப்ரஹா என ஒருவன் யமன் ராஜ்யத்திற்கு அதிபதியாக இருந்தான். திரு மக்காவிலுள்ள தேவாலயத்திற்கு யமனிலிருந்தும் இதர நாட்டிலிருந்தும் அறபிகள் ஆயிரக் கணக்காகச் சென்று, பிரதக்ஷணம் புரிவதையும், அதை கௌரவிப்பதையும் கண்டு, தன் அரசாங்க மமதையால் கஃபாவுக்குப் போட்டியாகத் தன் தலைநகரான ஸன்ஆவில் பெரிய கோவிலை அவன் நிர்மாணித்தான். பணவலி கொண்டு போட்டி ஆலயம் ஏற்படுத்தினுலும், மக்களின் மனத்தைத் திருப்ப அவனல் ஆகவில்லை.

ஜனங்கள் வழக்கம் போல் கஃபாவையே கௌரவித்து வந்தனர். அதுகண்டு அவனுக்கு அழுக்காறு அதிகரித்தது; கஃபாவை இடித்து அழித்து விட்டால், தன் ஆலயம் சிறப்புறும் என அவன் தப்பாக எண்ணினன்; யானைப் படையுடன் மக்காவை நோக்கி வந்தான்;பெரியஆர்ப்பாட்டஞ்செய்தான்;மக்காவாசிகளின் ஒட்டகங்களையும் மற்றவைகளையும் கொள்ளையடித்தான்; மக்கா வாசிகள் அதனை எதிர்க்காமல், தங்கள் பெண்டுபிள்ளைகளை அழைத்துக் கொண்டு, பக்கத்திலுள்ள மலைக்குன்றுகளுக்குச் சென்று விட்டார்கள். இத்தகைய நிலைமையில் மக்காவின் தலைவரான அப்துல் முத்தலிபுக்குச் சொந்தமான சில ஒட்டகங்களையும் பகைவர்கள் ஓட்டிக் கொண்டு போய்விட்டனர்.

அவைகளை மீட்டு வருவதற்காக அப்துல் முத்தலிபு அந்த அரசனிடம் சென்றுர்கள். அவன், கஃபாவை இடிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்வதற்கு அவர் வந்திருப்பதாக நினைத்தான். ஆயினும், அவர் தமது ஒட்டகங்களை மீட்க வந்ததாகவும், கஃபாவுக்கு உரி

ய்வனுன் அல்லாஹுத் தஆலா அதனைப் பகைவரிட மிருந்து காப்பாற்றுவான் என்ப தாகவும் கூறித் தமது ஒட்டகங்களை மீட்டு வந்தார்கள். அப்ரஹாவும் அதனை இடிக்கும் எண்ணத்தைக் கைவிடாமல் முன்னேறி வந் தான். ஆனால் ஹறம் ஷரீபின் எல்லைக்குள் பிரவேசிக்கவே, அபாபீல் என்ற ஒருவகைப் பறவைகள் வானத்தில் தோன்றி, அப்படை களின்மீது கன்மாரி பொழிந்தன. அதனால் அவனும் அவனுடைய படைகளும் அழிந் தன. பின்னர் நபிகள் நாயகமவர்கள் காலத் தில் கஃபாவை மராமத்து செய்ய நேரிட்டது.

அப்போது கஃபாவின் நான்கு பக்கத் துச் சுவர்கள் மாத்திரமே இருந்தன. மழை காலத்தில் அச்சுவர்கள் கரைவதும் மழைத் தண்ணீர் ஹறம் ஷரீபில் பெருகுவதுமாக இருந்தன. இதனைப் பழுது பார்க்க மக்கா வாசிகள் விரும்பி கூட்டங் கூடிப் பேசினர். இடித்துத் திரும்பக் கட்டுவதென முடிவு செய்து, மக்காவிலுள்ள எல்லாத் தலைவர்களும் கோத்திரத்தினரும் இதில் சமமாக ஊழியஞ் செய்து நற்பயனை அடைவதெனத் தீர்மானித் தனர். கட்டிட வேலை ஆரம்பமாகி ஒழுங்காக ஒற்றுமையுடன் நடந்தது. முடிவில் ஹஜ்ருல் அஸ்வதை சுவரின்மேல் வைக்கும் புனிதகாரி யத்தை யார் செய்வது என்று விவாதித்தனர். ஒவ்வொரு தலைவரும் அதைஅமர்த்தும் பேறு தமக்கே கிடைக்கவேண்டுமென விரும்பிப் பிடிவாதமாகவே இருந்தனர். ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுக்கவும் இஷ்டப்பட வில்லை. அவர்களுக்குள் கலகம் நிகழும் போலி ருந்தது. கடைசியிலே குறைஷிகளில் வயோ திகராகவும் அனுபவசாலியாகவும் இருந்த அபு உமய்யத்துப்னு முகையரு என்பவர் ஓர் ஆலோசனை கூறினர். அதாவது நாளைக் காலை யாவருக்கும் முதலில் இங்கு எவர் வரு கிறாரோ அவரைப் பஞ்சாயத்தாக வைத்து அவர் கட்டளைப்படி நடந்துகொள்வதெனத் தீர்மானித்தனர். அவ்விதம் மறுநாட் காலை யில் நபிகள் நாயகமவர்களே அங்கு முதலாவ தாக இருந்தார்கள். நபிகள் நாயகமவர்கள் கட்டளையைக் கேட்டு அதன்படி நடக்க அவர்கள் மனமொப்பினர்.

நாயகமவர்கள் தங்கள் மேலாடையின்மீது அக்கல்லை எடுத்துவைத்து, வஸ்திரத்தின் நான்கு மூலைகளையும் பிடித்துத் தூக்கிக் கொண்டு வருமாறு மக்காத் தலைவர்களெல் லோரையும் கேட்டுக்கொண்டார்கள். அங்ங னமே கல்லை எடுத்துவைக்கும் பாக்கியத்தை விரும்பிய தலைவர்கள் எல்லோரும் நான்கு மூலைகளையும் பிடித்துத் தூக்கிச் சுவரின் அருகே கொண்டுவந்தார்கள். நாயகமவர்கள் வஸ்திரத்தின்மீதிருந்த ஹஜ்ருல் அஸ்வதை சுவரின்மீது எடுத்துவைத்தார்கள். இவ்விதம் நாயகமவர்கள் செய்து எல்லாத்தலைவர்களுக் கும் சந்தர்ப்பம் அளித்ததால், யாவரும் திருப்தியடைந்து நாயகமவர்களைப் போற்றி னார்கள்; இது நபிகள் நாயகமவர்களுக்கு நபிப் பட்டம் கிடைப்பதற்கு முன் நடந்த தாகும்.

பின்னர், நபிகள் நாயகமவர்கள் நபிப்பட் டம் பெற்று, இஸ்லாம் மதப்பிரசாரம் செய்த காலத்து குறைஷியர்களும் மற்றவர்களும் குரோதங்கொண்டு நாயகமவர்களையும் முஸ் லிம்களையும் தொந்தரைக்குள்ளாக்கி, கஃபா வில் தொழுகையை நிறைவேற்ற அனுமதிக்க வில்லை. இதன் விவரம் விரியும். ஆயினும் ஒரு சம்பவத்தை மாத்திரம் சுருங்கச் சொல் வோம். கஃபாவின் சாவி அக்காலத்தில் உது மானுப்னு அபீதல்ஹா என்பவரிடம் இருந்து வந்தது, அவரிடம் நபிகள்நாயக மவர்கள் போய், கஃபத்துல்லாஹ்விற்குள் சென்று தொழுவதற்காக அதைத் திறந்துவிடுமாறு வேண்டினார்கள்; அவர்மறுத்தார். அப்போது நாயகமவர்கள் "நல்லது! இதன் சாவி ஒரு காலத்தில் என் கைவசம் ஆகும். அப்பொ ழுது நான் விரும்பியவரிடம் அதை ஒப்புவிப் பேன்" எனக் கூறினார்கள். குறைஷியர்கள் குரோதத்தால் குதர்க்கஞ்செய்தாலும், நபி கள் நாதர் அவர்கள் கூறும் வாக்கு அப் படியே பலிக்கும் என்ற நம்பிக்கை அவர்களி டம் இருந்துவந்தது. அப்பொழுது அவர்கள் நடுநடுங்கி, நாய கமவர்களைப்பார்த்து, அன் றையத்தினம் குறைஷியர்கள் யாவரும் கேவல மாக ஆகிவிடுவாரா?" என்று வினவினார்கள் அதற்கு நாயகமவர்கள் "இல்லை! அன்றையத் தினம் அவர்களுக்கு இப்பொழுது இருப் பதைப் பார்க்கிலும், இன்னும் அதிகமான கௌரவம் இருக்கும்," எனக் கூறினார்கள். இச்சம்பவம் நாயகமவர்களுக்கு நபிப் பட்டம் கிடைத்தபின் ஹிஜ்றத்திற்கு முன் நடந்த தாகும்.

கஃபாவை கிப்லா வாக்குதல்

ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு கூட்டமும் ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் தங்களுக்கென விசேஷ அடையாள மொன்றை ஏற்படுத்திக் கொள்வது வழக்கம். இதற்கிணங்க இஸ்லாம் மதம் தனக்கென ஓர் விசேஷ அடையாளங் கொள்ளுதல் ஆக்ஷேபிக்கக் கூடியதன்று. அதாவது தொழுகையில் எந்தப்பக்கம் அல்லது எந்தத் திசையை முன்னோக்கித் தொழவேண்டும் என்பதேயாகும். இவ்வாறு தனக்கென இஸ்லாம் மதம் குறிப்பிட்ட ஒரு திசையை நிர்ணயித்துக் கொள்வதில், இஸ்லாத்திற்கு விசேஷ அடையாளம் ஏற்படுவதுடன், இன்னும் அநேக நன்மைகளும் உண்டு. இந்நன்மைகளை நல்லவர் அறிவர். குதர்க்கவாதிகளுக்கோ எல்லாம் குதர்க்கமாகவே புலப்படும். இவ்விதம் ஒரே ஒரு முன்னோக்கும் திசையை நிர்ணயிப்பதால், முஸ்லிம்களுக்கு ஜனநாயகதத்துவம், ஐக்கியம், ஒரு மனப்பாடு, ஒரே காரியத்தை யாவரும் செய்தல், ஆகியவைகளெல்லாம் அதில் ஏற்படுகின்றன.

இது நிற்க, யூதர்களும் கிறிஸ்தவர்களும் தங்கள் தொழுகைக்காக ஒரு முன்னோக்கும் திசையை அதாவது கிப்லாவை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இவர்களின் மதம் எருஸலேம் நகரத்திலிருந்து உற்பத்தியானதால், இவர்கள் தங்களுடைய கிப்லாவை எருஸலேமிலுள்ள "பைத்துல் முகத்தஸ்" என்ற பள்ளி என ஏற்படுத்தினர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கம் இஸ்லாமான தாலும், இதற்கு முன்னுள்ள நபிமார்கள கொண்டுவந்த மார்க்கம் இதரர்களால் சின்னா பின்னப் படுத்தப்பட்டாலும், அவை ஆதியில் இஸ்லாத்திற்கு முரண்பட்டவையல்லாதலாலும், மக்கத்திலுள்ள குறைஷியர்களும் இணைவைத்து வணங்குவோரும் கஃபாவையே தங்களின் முன்னோக்கும் திசையாக ஏற்படுத்தி இருந்தன ராதலாலும், நபிகள் நாயகமவர்கள் முன்னுள்ள வேதக்காரர்களின் முன்னோக்கும் திசையையே நோக்கித் தொழுது வந்தார்கள். ஆனல், தங்களுடைய மூல பிதாவாகிய இப்றுஹீம் (அலை) அவர்களால் எடுத்துக் கட்டப்பட்டதும், உலகத்திற்கே முதல் பள்ளியாகவு மிருக்கிற கஃபாவையே முன்னோக்கவேண்டு மென்பது நாயகமவர்களின் விருப்பம். எனினும் இணைவைப்போரைப் பகிரங்கமாகப் பின் பற்றித் தொழ நாயகமவர்களுக்கு இஷ்டமில்லை. ஆதலால், கஃபாவின் பக்கமுள்ள மகாமே இப்றுஹீம் என்ற ஸ்தலத்தில் நின்று, பைத்துல் முகத்தஸை நோக்கித் தொழுது வந்தார்கள். இதனுல் கஃபாவானது அந்த ஸ்தலத்திற்கும் பைத்துல் முகத்தஸிற்கும் இடையில் வந்துவிடுகிறது. மக்காவில் இருந்த காலத்தில் இவ்விதம் முஸ்லிம்களின் தொழுகை நடந்து வந்தது.

பின்னர் மக்காவை ஹிஜ்றத் செய்து மதீனுவில் குடியேறிய பின்பு $1\frac{1}{2}$ வருஷகாலம் வரை பைத்துல் முகத்தஸையே நோக்கித் தொழுதனர். ஆனல் நாயக மவர்களுக்கு கஃபாவின் பக்கமே தொழவேண்டு மென்ற அவா மாத்திரம் அடிக்கடி உதிப்பதுண்டு. இறைவனும் இவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வான் வேண்டி, நாயகமவர்களுக்கு வஹியின் மூலமாக கஃபாவை முன்னோக்கித் தொழக் கட்டளை யிட்டதுடன், "கிழக்குத்திசை யேனும் மேற்குத் திசையையேனும் மாத்திரம் முன்னோக்குவது நன்மை செய்வதாகாது. ஆனல் அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின்மீதும், மலக்குகளின் மீதும், வேதங்களின் மீதும் நபிமார்களின் மீதும் எவன் விசுவாசங்கொண்டு, அனுதைகளுக்கும் ஏழைகளுக்கும் பந்துக்களுக்கும் தன்னுடைய பொருளை ஈந்து உதவிபுரிகிருனே, அவன்தான் நல்லவன்" என்பதையும் எச்சரிக்கை செய்து குறிப்பிட்ட ஒரு திசையைக் கட்டுப்பாடாக முன்னோக்குவது உலக சம்பிரதாய மென்பதை விளக்கினன். இதுவுமல்லாமல், இவ்வாறு கிப்லா மாறியதால், யூதர்களிலுள்ள சில விஷமிகள் முஸ்லிம்களைப்போல் வேஷந் தரித்து, முஸ்லிம்களுடன் சேர்ந்து தொழுவதும் பழகுவதுமாக இருந்து, தங்கள் தலைவருக்கு உளவுசொல்லிக் கொண்டிருந்தனர். இதை வெளியாக்கவேண்டுமென்று எல்லாம் வல்ல ஆண்டவனுக்கு நாட்டமிருந்தது. கிப்லா மாறியவுடன் இத்தகைய நயவஞ்சகர்களாகிய முனபிக்குகள், நபிகள் நாயகமவர்களைப் பின்பற்றித் தொழுவதை விட்டுவிட்டதுடன், பகிரங்கமாக எதிர்க்கவும் ஆரம்பித்தனர். இதனுல் இஸ்லாத்தின் விரோதிகள் யார் என்பதும், நாயகமவர்களுக்கு நன்கு தெரிந்தது. இவ்வாறு

கிப்லா மாறியதானது ஹிஜ்ரி இரண்டாம் வருஷமாகும்.

பின்பு நபிகள் நாயகமவர்கள், மக்காவை ஹிஜ்றத்செய்து, மதீனாவில்குடியேறிய எட்டா மாண்டில் நபிகள் நாயகமவர்கள் கையில் மக்கா சிக்கலாயிற்று, அக்காலத்தில், நாயக மவர்கள் வெற்றிக் கொடியுடன் மக்காவில் பிர வேசித்து கஃபாவைச் சுத்தப்படுத்தினார்கள். அதாவது கஃபாவிற்குள்ளும் வெளியிலும் நூற்றுக்கணக்கான விக்கிரகங்கள் வைக்கப் பட்டிருந்தன. அவைகளில் ஹஜ்றத் இப்ரு ஹீம், ஹஜ்றத் இஸ்மாஈல், ஹஜ்றத் ஈஸா அலைஹி முஸ்ஸலாம் ஆகிய நபிமார்களின் உரு வச்சிலைகளும் வைக்கப்பட்டிருந்தனவாம். இவைகளை எல்லாம் நபிகள் நாயகமவர்கள் நேரிலும் ஸஹாபிகளின் ஒத்துழைப்பிலும் அப்புறப்படுத்தி, ஆதியில் இப்ருஹீம் அலை ஹிஸ்ஸலாம் எவ்வாறு சுத்தப்படுத்தி வைத் தார்களோ அவ்வாறு சுத்தப்படுத்தினார்கள்.

அன்றையதினத்தில் நபிகள் நாயகமவர்கள் உதுமான் இப்னு அபீதல்ஹாவிடமிருந்து அந்தத் தாக்கோலை வாங்கித் திறந்து, கஃ பாவிற்குள் சென்றார்கள். ஒவ்வொரு மூலை யிலும் தக்பீர் முழக்கினார்கள்; பின்னர் இறைவனுக்கு நன்றி செலுத்தித் தொழுதார் கள்; அன்றுதான், முஸ்லிம்கள் எவ்விதத் தடையுமின்றி பூரண சுயேச்சையுடன் முதல் முதலாக கஃபாவில் தொழுது அதானும் சொன்னார்கள். ஹஜ்றத்பிலாலும், ஹஜ்றத் தல்ஹாவும் நாயகமவர்களுடன் கஃபாவிற் குள் சென்றார்கள். நபிகள் நாயகமவர்கள் அது சமயம் கஃபாவிற்குள் தொழவில்லை என்றும், தக்பீர் மாத்திரம் தான் சொன் னார்கள் என்றும் சொல்லப்படுகிறது. தொழு கைக்கு நேரமானவுடன்உலகத்திற்கே முதலா வது முஅத்தினை ஹஜ்றத்பிலால் அவர்கள், கஃபாவின் மீதேறி பாங்கு சொன்னார்கள்.

அது சமயம் ஏனைய குறைஷியர் அவ ரைத் தடுக்க முடியாத நிலைமையில் இருந்த னர். இன்னும் பலர் வருத்தமுற்றுப் பல மொழிகளையும் தங்களுக்குள் கூறிக்கொண்ட னர். பின்பு கஃபாவின் சாவியை பனுஹாஷிம் களிடம் கொடுத்துவைக்கவேண்டும் என நாய கமவர்களின் சிறிய தந்தையாரான ஹஜ்றத் அப்பாஸ் (றலி) அவர்கள் நாயகமவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால், நாயகமவர் கள் அவ்வாறு செய்ய இணங்காமல், மேற் கண்ட உதுமானுப்னு அபீதல்ஹாவை அழைத்துச் சாவியை ஒப்படைத்து, "உங்க ளிடமிருந்து இந்த சாவியை அபகரிப்பவர் கள் அநியாயக்காரர் ஆவார்கள்" எனக் கூறி னார்கள். அன்று முதல் இன்றுவரை அவ ருடைய வம்சத்தினரிடமே அந்தச் சாவி இருந்துவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பின்பு, ஹஜ்றத் அப்துல்லாஹிப்னுஜு பைர் அவர்கள் கலீபாவாக இருந்த காலத்து, கஃபாவை மராமத்துப் பார்த்தார். அப்துல் மலிக் இப்னு மர்வான் என்பவர் தம்முடைய காலத்தில் 36 ஆயிரம் தங்க நாணயத்தை கஃபாவின் புனித மராமத்து வேலைக்காக அனுப்பினார். அப்துர்ரஷீது என்பவர் 18 ஆயிரம் தங்க நாணயங்களை கஃபாவின் வாசற் படிக்காகக் காணிக்கையாக அளித்தார்.

ஹஜ்றத்உமர்(றலி) அவர்கள் தங்கள் காலத் தில்கிப்தீபோர்வையை கஃபாவுக்குப் போர்த் தினார்கள். இவர்கள் காலத்திலிருந்து ஒவ் வொரு கலீபாவும் தங்கள் காலத்தில் போர் வை அளிப்பது வழக்கமாகிவிட்டது. உமய்யா வம்சத்து கலீபாக்கள் "தேபா" என்ற ஒருவகைப் பட்டினால் செய்த போர்வையை அளித்துவந்தனர். அப்பாஸிய்யா வம்சத்து கலீபாக்களில் மாமூனுர்ரஷீத் என்பவர் ஹஜ் ஜுடைய காலத்தில் செம்பட்டுப் போர்வை யும், ரஜப் மாதத்தில் கிப்தீ போர்வையும், ஈதுல்பித்று பெருநாளில் வெண்பட்டுப்போர் வையும், கஃபாவுக்கு அளித்துவந்தார்.

எகிப்து தேசத்தை ஆண்டு வந்த ஸுல் தான் ஸாலிஹிப்னு ஸுல்தான் கலாவான் என்பவர் பட்டத்துக்கு வந்த போது, கஃபாவின் போர்வைக்காக இரண்டு கிரா மங்களை வக்பு செய்தார். பின்னர் கான் ஸ்தாந்தி நோபிளில் துருக்கிய குடும் பம் அரசுக்கு வந்தபின், உதுமானியா அரசாங்கத்தின் சுல்தான் சுலைமான் இன் னுஞ் சில கிராமங்களை இந்தப் போர்வையின் செலவுக்காக எகிப்தில் வக்புசெய்தார். இதை ஒட்டித்தான் எகிப்திலிருந்து சமீபகாலம் வரை கஃபாவுக்குப் போர்வை கொண்டு வரப்பட்டுவந்தது. ஆனால், நஜத்சுல்தான் ஹிஜாஸுக்கு அரசராக வந்தபின், அதை நிறுத்திவிட்டு, தமது செலவில் இந்தியாவில் போர்வை தயாரித்து கஃபாவுக்கு அளித் தார்; வஸ்ஸலாம்.

ஹஜ்ஜு

உலகத்திலே முதன் முதலாக யாவருக்கும் பொதுவான வணக்க ஸ்தலத்தைக் கட்டி, அங்கு வந்து வணங்குமாறு உலக மக்களை அழைத்தவர்கள் ஹஜ்றத் இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தாம். இவ்விபரம் திருக்குர் ஆனில் ஸூறத்துல் ஹஜ்ஜு என்ற அத்தியாயத்தில், "மேலும், நாம் இப்ருஹீமுக்கு பைத்துடைய இடத்தை (அதாவது கஃபாவை) நிர்ணயித்த போது, நீர் எனக்கு எதையும் இணையாக்கக்கூடாது; இன்னும் பிரதக்ஷணஞ் செய்வோருக்காகவும், (தொழுகையை நிலை) நிறுத்துவோருக்காகவும், ருக்கூ உஸுஜுது செய்வோருக்காகவும், என்னுடைய வீட்டை சுத்தப்படுத்துவீராக; இன்னும், மனிதர்களில் ஹஜ்ஜைக்கொண்டு உத்தரவு கொடுப்பீராக; (அவ்வாறு உத்தரவு கொடுத்தால்) அவர்கள் உம்மிடத்தில் கால் நடையாகவும், ஒட்டகங்களின்மீதும் (ஆரோகணித்து) ஒவ்வொரு தூரமான பாதைகளிலிருந்தும் வருவார்கள் (என்று நாம் அவருக்குக் கூறினேம்) "திருகுர் ஆன்"

இதற்கிணங்க இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஜனங்களை ஹஜ்ஜுக்காக அழைத்த அன்றையதினமே உலக முழுதும் அவருடைய சொல்லுக்குப் பணிந்தது. அறபிகள் மிக மிக தூர தேசங்களிலிருந்து வருஷந்தோறும் ஹஜ்ஜுக்கு வந்து கொண்டிருந்தனர். ஆனல், எந்த நோக்கத்துடன் அந்த வீடு கட்டப்பட்டதோ அந்த நோக்கம் பூரணமாக ஈடேருமல், இடைக் காலத்தில் மாறுபட்டது. அதாவது அந்த வீட்டில் ஏக தெய்வ வணக்கம் புரிவதற்குப் பதிலாக அறியாத பாமர அறபிகள் சில காலம் விக்கிரகங்களை வைத்தனர். அதுவுமல்லாமல், இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் மார்க்கத்தை அனுசரித்து நடப்பவர்களும், அந்த வீட்டுக்கு அதிபதிகளாவதற்கு அருகதையுள்ளவர்களுமான நபிகள் நாயகமவர்களும் அவர்களைப் பின்பற்றிய முஸ்லிம்களும் சுமார் 8 வருஷகாலம் வரையில் கஃபாவுக்கு வராமற்றடுக்கவும் பட்டனர்.

கடைசியிலே உண்மை வெளியாகும் காலம் வந்தது. மக்காவும் பிடிபட்டது. முஸ்லிம்களின் ஆதிக்கத்தின் கீழ் கஃபாவும் வந்தது. இறைவன் கட்டளைப்படி, இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஏற்படுத்திய கடமைகளை மறுபடியும் நிலைநாட்ட வேண்டிய சந்தர்ப்பமும் வாய்த்தது. இறைவனும் ஹஜ்ஜுக் கடமையை விதித்தான். எனவே, ஹிஜ்ரி 9-வது வருஷத்தில், ஹஜ்ஜு விதியாயிற்று. அவ் வருஷத்தில் நபிகள் நாயகமவர்கள் நேராக ஹஜ்ஜுக்கு வரவில்லை. ஹஜ்றத் அபூக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களைத் தமக்குப் பதிலாக ஹாஜிகளின் தலைவராக நியமித்து ஹஜ்ஜுக்கு அனுப்பினர்கள். இவ்வாறு முதல் முதலாக இஸ்லாமிய ஷரீஅத்துப்படி ஹஜ்ஜுக்குச் சென்றவர்கள் 300 பேர்கள். ஹஜ்றத் அலிகர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் இஸ்லாமிய சட்டங்களைப் போதிப்பதற்காகவும், ஹஜ்றத் அபூஹுறைரு, ஸஅதுப்னு அபீவக்காஸ் முதலியவர்கள் முஅல்லிம் (போதிப்பவர்) களாகவும் நியமிக்கப்பட்டனர்.

இந்த ஹஜ்ஜுக்கு "ஹஜ்ஜுல் அக்பர்" என்று திரு குர் ஆன் கூறுகின்றது. ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் ஹாஜிகளின் தலைவர் என்ற முறையில் ஹஜ்ஜைப்பற்றி குத்பா ஓதி, ஹஜ்ஜுச் செய்ய வேண்டிய விவரத்தை அறிவித்தார்கள். ஹஜ்றத் அலி (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் சட்டத்தை எடுத்துரைப்பவர் என்ற முறையில், திரு குர் ஆனிலுள்ள "ஸுரத்துல்பராஅத்" என்ற அத்தியாயத்தின் முதல் நாற்பது வசனங்களைப் படித்து, "இனிமேல் இணைவைப்போர் கஃபாவுக்கு வரமுடியாது, இடைக் காலத்தில் ஏற்பட்ட தாறுமாறுன அனுச்சார அனுஷ்டானங்களை இனிமேல் அனுஷ்டிக்க முடியாது இணைவைப்போருடன் முஸ்லிம்கள் செய்த உடன்படிக்கைகள் யாவும் அவர்களின் வாக்கு மாறுந் தன்மை காரணமாக இன்னும் நான்கு மாதங்களுக்குப் பின் ஒழிக்கப்

படும்;'' என்று அறிக்கை செய்தார்கள். இவ்வறிக்கை யாவருக்கும் நன்கு தெரிய வேண்டுமென்பதற்காக முஅல்லிம்களான ஹஜ்றத் அபூஹுறைறு (ரலி) முதலியவர்கள் இடையிடையே நின்று உரத்த சப்தத்துடன் ஜனங்களுக்கு எடுத்துக் கூறினர்கள்.

நிற்க நபிகள் நாயகமவர்களின் காலத்திற்கு முன் விக்கிரக ஆராதனைக்காரர்களும் இந்த ஹஜ்ஜை நிறைவேற்றி வந்திருக்கிறார்கள் என்பது சரித்திரம் அறிந்த உண்மை. ஆனல் அவர்கள் செய்த ஹஜ்ஜுக்கும் முஸ்லிம்கள் செய்த—செய்துகொண்டிருக்கிற ஹஜ்ஜுக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. ஆதலால், அதை ஈண்டு இங்கு விவரிப்பாம்.

ஹஜ்ஜுக்குச் செல்வதிலும், இதர எல்லா இபாதத்துகளாகிய வணக்கங்களிலும், தெய்வத் தியானமும், உலக விஷயங்களை மறந்து அல்லாஹ்வின் பக்கமாக கருத்தைச் செலுத்துவதும், பொதுவாக முக்கிய நோக்கங்களாம். ஆனல் நாயகமவர்கள் காலத்திற்கு முன்னம் இருந்தவர்கள் இதை அடியுடன் அகற்றி, ஹஜ்ஜுடைய காலத்தில் தங்கள் மூதாதையர் செய்த போக்கிரித் தனங்களையும், கொடுமைகளையும் பெருமையாக எடுத்துக் கூறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதைத் தடுப்பதற்காகத் திருமறையில், ''பின்பு நீங்கள் உங்கள் ஹஜ்ஜு கடமைகளை நிறைவேற்றிவிட்டீர்களாகில், உங்களுடைய மூதாதையினரை ஞாபகிப்பதுபோல் அல்லது அதைப்பார்க்கிலும் அதிகமாக அல்லாஹ்வை ஞாபகியுங்கள் (அதாவது திக்ருசெய்யுங்கள்) என இறைவன் கூறினன்.

மதினவிலுள்ள ஜனங்கள் ஹஜ்ஜுச் செய்வார்களாகில், ஸபாமர்வாவில் பிரதக்ஷணம் (தவாப்) செய்யமாட்டார்கள். இதற்குப் பதிலாக அவர்கள் மனுத் என்ற விக்ரஹத்தை பிரதக்ஷணம் செய்வர். ஸபா மர்வாவில் தவாப் செய்வது ஹஜ்ஜுகாரியங்களில் ஒன்றாகும்; அது ஹஜ்றத் இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் ஞாபகார்த்தமுமாகும். இதை அவர்கள் பிரதானமாகக் கருதாமல் பாபமாகவே கருதி வந்தனர். இறைவன் இவர்களின் கருத்தை மாற்றுவதற்காகத் திருமறையில், ''நிச்சயமாக ஸபாவும் மர்வாவும் அல்லாஹ்வின் ஞாபகார்த்தங்களிலுள்ளவைகளே. ஆகவே எவன் ஹஜ்ஜு செய்கிருனே அல்லது உம்ருச் செய்கிருனே அவன் அவ்விரண்டிலும் பிரதக்ஷணஞ் செய்வது அவன் மீது குற்றமில்லை'' எனக் கூறியுள்ளான்.

வழிப்பயணத்தில் அசனச் செலவிற்கும் வகையில்லாத அநேகர் தம்மை பக்தர்கள் (முத்தவக்கில்) எனக் கூறிக்கொண்டு, ஹஜ்ஜுக்குச் செல்வது அந்நாளில் பிரபலம். இதனல் இவர்கள் வழியில் பிச்சைவாங்கி வயிறுவளர்க்கவும், சிநேகிதர்களின் உதவியை நாடி அவர்களுக்கு அனாவசியமான கஷ்டத்தைக் கொடுக்கவும் நேர்ந்தன. ஆதலால் இறைவன் இதை நிறுத்துவதற்காகத் திருமறையில் ''நீங்கள் கட்.சோதத்தைச் சித்தஞ்செய்துகொள்ளுங்கள்'' எனக் கூறி எச்சரித்துள்ளான்.

ஹஜ்ஜுக்கு இஹ்றாம் கட்டியபின், தலைமயிர் வாங்கிக்கொள்வதும், வெட்டிக்கொள்வதும் விலக்காம். ஆனல் முற்காலத்தில் இது அளவுக்கதிகமாக அனுசரிக்கப்பட்டது. சில ஹாஜிகளின் தலையில் பேன் நிரம்பிவிடும். அவைகளினல் ஏற்படும் தீங்கினல் கண் பார்வை மங்கிவிடுமோ என்ற பயம் உண்டாகும். ஆயினும், அவர்கள் தங்கள் தலைமயிரை வெட்டிக்கொள்ளவோ வேறு ஏதேனும் செய்துகொள்ளவோ மாட்டார்கள். இவ்விஷயத்தில் எல்லோரும் இவ்வளவு பிடிவாதமாக இருந்து தங்கள் திரேகத்திற்குத் தீங்கிழைத்துக்கொள்ளவேண்டியதில்லை என்பதற்காக இறைவன் தனது திருமறையில்—''ஆகவே உங்களில் எவரேனும் வியாதிஸ்தராகவோ அல்லது அவருடைய தலையில் நோயினையுடையவராகவோ இருப்பாராகில், (அதற்காகத் தலை க்ஷவரம் செய்வித்துக்கொள்ள வேண்டிய தேற்படுமாயின் அவ்வாறு செய்து கொள்ளட்டும். (ஆனல்) அதற்காக பித்யா உண்டு. அதாவது நோன்புகள் அல்லது ஸதகா அல்லது குர்பானி (செய்ய வேண்டும்)'' என்று திருவாய் மலர்ந்தருளினன்.

முற்காலத்தில் குர்பானி அறுக்கப்பட்டால், அதன் உதிரத்தை கஃபாவின் சுவர்களின்மீது தடவுவதும், அதை மகா புண்ணிய மெனக் கருதிக்கொள்வதும் வழக்கம். இந்த மூட நம்பிக்கையைப் போக்கும் பொருட்டு இறைவன் தன் திருமறையில் :— ''குர்பானியுடைய மாமிசங்கள், இன்னும் அதன் உதிரங்கள் (ஆகியவைகள்) அல்ஹாஹ்

விடத்தில் சேருவதில்லை. ஆனல், உங்களில் நின்றுமுள்ள பயபக்தி (தக்வா) தான் அவனிடத்தில் சேரும்'' எனக் கூறியுள்ளான்.

ஹஜ்ஜில் அறபா மைதானமே மிக சிரேஷ்டமானதாகும்; அதுவே முக்கிய வணக்க ஸ்தலமு மாகும். மக்காவிலுள்ள குறைஷிகள் ஹறத்திற்கு அப்பாலுள்ள இந்த மைதானத்திற்குச் செல்வது தங்களின் கௌரவத்திற்கு பங்கமுண்டாகுமென்று நினைத்து அறபா மைதானத்திற்குச் செல்லாமல் முஸ்தலிபா வரையில் சென்று திரும்பி வருவது வழக்கம். மனித வர்க்கத்தில் ஒருவர் உயர்ந்தவர். ஒருவர் தாழ்ந்தவர், என்ற பாகுபாடு கிடையாது. யாவரும் சமமானவர் என்று காட்டிக்கொள்வது மிகவும் அவசியம். இங்ஙனம் இருக்க குறைஷிகள் மாத்திரம் தாங்களே உயர்ந்தோர் என நினைத்து அவ்வாறே நடந்து வந்தனர்.

இந்த மூட நம்பிக்கையையும் இறைவன் தனது திருமறையின் மூலமாக:—"பின்பு நீங்கள் அறபாத் (மைதானத்) திலிருந்து திரும்புவீர்களாகில் மஷ் அருல்ஹறும் (முஸ்தலிபா) என்ற ஸ்தலத்தில் அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள். மேலும் அல்லாஹ் உங்களுக்கு (நேர்வழி) காட்டியதன்படி அவனை திக்ரு செய்யுங்கள் (ஞாபகியுங்கள்.) இதற்கு முன் நீங்கள் வழி கேடர்களிலாகி இருந்தாலும் சரியே. பின்பு ஜனங்கள் எவ்வழியாகச் செல்லுகின்றனரோ அவ்வழியாகவே நீங்கள் செல்லுங்கள். இன்னும் அல்லாஹ் இடத்தில் பிழை பொறுத்தலைத் தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பிழை பொறுப்பவனகவும் அன்புடையோனகவு மிருக்கிறன்'' எனக் கூறி அதை அகற்றினன்.

குர்பானிக்காக ஓட்டிச் செல்லும் பிராணி அல்லாஹ்வுக்கு அற்பணம் செய்யப்படுவதால், அதன் மீது சவாரி செல்லாமல், கால் நடையாகச் சென்று, கஷ்டத்தை அனுபவித்து வந்தனர். இவ்வழக்கம் இஸ்லாத்திலும் ஆரம்பத்தில் இருந்தது. ஒருவர் தமது குர்பானியாகிய ஒட்டகத்தை ஓட்டிக் கொண்டு, ஹஜ்ஜுக்காக நடந்து வருவதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பார்த்தார்கள். உடனே நாயகமவர்கள், அவரை நோக்கி "நீங்கள் அதில் சவாரியாகிக் கொள்ளுங்கள்'' என்றார்கள். அதற்கவர், "இது குர்பானி'' எனக் கூறினர். நாயகமவர்கள் மறுபடியும் "சவாரியாகிக் கொள்ளுங்கள்,'' என்றார்கள். அதற்கவர் மறுபடியும் "இது குர்பானி' என விடை கொடுத்தார். பின்பு நாயகமவர்கள் மூன்றுவது முறையாக "அதன் மீது உட்கார்ந்து கொள்ளுங்கள்'' எனக் கண்டிப்பாகக் கூறினர்கள்.

முற்காலத்தில் புது மாதிரியான ஒருவித் ஹஜ்ஜை அறியாத்தனமாக ஏற்படுத்தி வைத்திருந்தனர். அதாவது ஹஜ்ஜின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை ஒருவரிடமும் பேசாமல், மௌன விரதம் பூண்டிருப்பதாகும். இதனை இஸ்லாம் தடுத்துவிட்டது. ஒரு தரம் ஜைனப் என்ற குறைஷிப் பெண் மௌனியாக ஹஜ்ஜுச் செய்வதை ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் கண்டு, அதற்குக் காரணம் என்ன என்று விசாரித்தார்கள். மௌன விரதத்துடன் ஹஜ்ஜுச் செய்வதாக ஜனங்கள் அறிவித்தனர். அப்பொழுது அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள், "இது இஸ்லாத்தில் ஜாயிஸ் இல்லை. இஸ்லாத்திற்கு முன்னுள்ள காலத்தில் நடந்த காரியமாகும்'' எனக் கூறி அதை விலக்கி விட்டார்கள். இவ்விபரம் புகாரியில் கூறப்பட்டிருக்கிறது.

குறைஷிகளைத் தவிர, ஏனைய எல்லா அறபிகளும் ஆண் பெண் என்ற வித்தியாசமின்றி நிர்வாணமாக கஃபாவை பிரதக்ஷணம் செய்து கொண்டிருந்தனர். ஹறத்தின் எல்லைக்குள் வந்ததும், இவர்கள் தங்கள் உடைகளை அப்புறப்படுத்திவிடுவர். குறைஷிகளில் எவரிடத்திலேனும் ஓர் உடை இரவல் வாங்கிக் கொள்வர். இரவல் கிடைக்காவிடில் நிர்வாணமாகவே, கஃபாவைச் சுற்றுவர். பெண்களும் நிர்வாணமாகவே கஃபாவை பிரதக்ஷணம் செய்து, அதனைப் பெரும் புண்ணியமாக மதித்து, பெருமையாகக் கவிபாடுவதுமுண்டு. இதை அகற்றுவதற்காக இறைவன் "ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு மஸ்ஜிதிலும் நீங்கள் உடை அணிந்து கொள்ளுங்கள்,'' எனக் கட்டளையிட்டான். ஆகவே இதை ஆதாரமாகக் கொண்டு நிர்வாணமாகப் பிரதக்ஷணம் செய்வது நிறுத்தப்பட்டது.

நம்மவர் முன்னேறும் மார்க்கம்

"ஆதலின் என்னை நீங்கள் நினையுங்கள் நானும் உங்களை நினைக்கிறேன், "திரு குர்ஆன்"

தற்போது இஸ்லாமிய உலகத்தில் இருள் சூழ்ந்துளது; நாநபக்கங்களிலும் முஸ்லிம்களிடை அடிமைத்தனம், அகௌரவம் ஆகிய வெள்ளம் புரண்டோடுகின்றது. இதனால் முஸ்லிம்களின் அருமையும் பெருமையும், சீரும்சிறப்பும் அடித்துக்கொண்டு போகப்படுகின்றன. உலகத்தில் முஸ்லிம்களுக்கிருந்த கம்பீரம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்துவிட்டது. ஏக தெய்வக் கொள்கையைக் கொண்ட முஸ்லிம்கள் தங்கள் வாழ்க்கைக்கு விழுமிய பொக்கிஷமாக நினைத்து வந்த அந்த உணர்ச்சியும், உற்சாகமும், ஊக்கமும், முயற்சியும் இப்பொழுது இல்லை. இஸ்லாமிய உலகத்தில் எங்குப் பார்த்தாலும் வறுமையும் பிணியும் வாட்டுகின்றன; பிளவுகளும் வேற்றுமைகளும் கக்ஷிப் பிரிவினைகளும் நிரம்பியுள. ஒவ்வொரு முஸ்லிமும் தனது பெருஞ் செல்வமாகக் கருதி வந்த ஒற்றுமையும், ஐக்கியமும் அதே முஸ்லிமால் அழிந்து வருகின்றன.

இவ்வாறெல்லாம் சீர்குலைந்து போன பின்பும், முஸ்லிம்கள் தங்கள் துயிலிலிருந்து எழுந்திருப்பதாகத் தோன்றவில்லை. எப்பொழுதேனும் முஸ்லிம்களுக்குக் கஷ்டமும் நஷ்டமும், ஆபத்துகளும் சம்பவிக்குமாகில், அதற்கு முஸ்லிம்கள் இறைவனின் கட்டளையைப் புறக்கணித்ததும், அவைகளை நிறைவேற்றுவதை அசட்டை செய்ததுமே முக்கிய காரணம் என்பதை இஸ்லாமிய சரித்திரம் இடித்துரைக்கும். தார்தாரிகளின் படை எழுச்சி முஸ்லிம்களின் பரிசுத்த வாழ்வைப் பாழ்படுத்தியது. அதற்குக் காரணமென்ன? இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் முஸ்லிம்கள் அசட்டையும், பராமுகமும் காட்டியதும், சுகபோகத்தில் ஆழ்ந்து கிடந்ததுமே யாம். உதுமானிய ஏகாதிபத்யம் வீழ்ச்சியுற்றதற்கும் காரணம் யாது? இறைவன் கட்டளையைப் புறக்கணித்ததேயாம்.

தற்சமயம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டத்திற்கும் நெருக்கடிக்கும் யாது காரணம்? நம்முடைய துர்ப்பாக்கிய நிலைக்கு நாமே காரணம். இதனை எத்துணை பெயர் உணர்ந்துளர்? நம்மிலே பலர் தொழுகையை விட்டுவிட்டனர்; நோன்பு நோற்பதில்லை; ஜக்காத் கொடுப்பதை ஹறாமைப்போல் கருத வாரம்பித்துவிட்டனர். பைத்துல் லாஹ்வை ஹஜ்ஜுச் செய்வதற்குப் பதிலாக பாரிஸ், லண்டன்மா நகரங்களைப் பார்வையிடப் பலர் போகின்றனர். சகிப்புத்தன்மை, பரஸ்பரம் அன்பு முதலிய அருங்குணங்கள் அகல நிற்கின்றன; மதச் சட்டதிட்டங்களை நன்கு நிறைவேற்றுவதில் நவீன நாகரிக நடை உடைகள் குறுக்கிடுகின்றன. நூதன எண்ணங்களும் கொள்கைகளும் மூளையில் குடிகொள்கின்றன. நற்குணமும், நல்லொழுக்கமும் நம்மில் பலரைக் கண்டு அஞ்சுகின்றன. பொறாமையும், பகையும், வைரமும், சூதும், வாதும், கோளும், குண்டுணியும், போகமும், மடமையும், தந்நலமும், தற்பெருமையும் நாளுக்கு நாள் தளிர்விடுகின்றன. நம்மவருக்குள் நுழைந்து பரவாத தீய காரியம் எதுவும் இல்லை என்றே கூறலாம்.

நம்மவரின் இதயச் சோலையில் இஸ்லாத்தின் உண்மைகள் அரும்பி, இஃதிகாதுகள் (நிர்ணயங்கள்) மலர்ந்து, இஸ்லாமிய சட்டதிட்டங்கள் கனிந்து குலுங்கிய காலையில், உலகின் ஒவ்வொரு பாகமும் நம்மை ஏற்றமுடன் எதிர்கொண்டது; ஏத்தியது; இன்வரவும் இசைத்தது; பலவகைப் பாக்கியங்களும் பரமாநந்தமும் பெருநலமும், அருஞ்சிறப்பும் நமக்கு ஏவல் செய்து நின்றன; அரசும், அதிகாரமும் நம் காலண்டை அண்டிக் கிடந்தன. யானை தன் தலையில்தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதை போல், இவ்வுலகில் நமது எடுப்பையும், ஏற்றத்தையும் நமது மனப் போக்கினால் நாம் இழந்து நம்

மைக் கெடுத்துகொண்டோம். நாம் முன்னம் எவ்வாறிருந்தோம்? இச்சமயம் எவ்வாருகிவிட்டோம்? என்பதை நாம் யோசிக்கக்கூடாதா? இதரருக்கு நேர்வழி காட்ட வந்த நாமே இப்பொழுது நெறி பிறழ்ந்து ஆழ்ந்த துயிலில் அமர்ந்துவிட்டோம்.

இற்றைக்குப் பதின்மூன்று நூற்ருண்டுகளுக்கு முன்பிருந்த மொய்ம்பான வாழ்க்கையை மீண்டும் கைக்கொள்ள நாம் முயலுவோமாயின் அல்லாஹ்வின் கிருபை என்ற கோட்டை வாசல் நமக்காகத் திறந்துவிடும்; நம்மவரின் சகல கஷ்டநஷ்டங்களும்சடுதியில் தொலையும்; நம்முன்னேரிடம் காணப்பட்ட நற்குண நல்லொழுக்கங்கள் நம்மிடமும் படியும்; தீன்துன்யா (இம்மை மறுமை) வுடைய சுகங்கள் இப்பொழுதும் நமக்குக் கிட்டும்; அரசும் ஆளுகையும் நம் கைக்குள் வந்தடங்கும். ஆ! நாம் நமது உண்மையான வணக்கத்திற்குரிய நாயனுக்கு வழிப்படுவதில் கொஞ்சம் கவனம் செலுத்தலாகாதா? அவனுடைய றஹமத் என்ற கருணை நமக்கு எவ்வாறு ஏற்படும்? சித்த சுத்தியும், மெய்யன்பும், சத்தியமும் கொண்டு நடப்பின், அனைவரும் நம்மை மதிப்பர்; பிறரையும் நாம் நல்வழிப்படுத்தி உயர்த்தலாம்.

இறைவனது தெய்வச்சட்டம் இதையே எடுத்துரைக்கும். இறைவன் தனது திருமறையில் "நீங்கள் என்னைநினையுங்கள் நானும் உங்களை நினைக்கிறேன்" என விளங்கக் கூறி இருக்கிருன். அதாவது "நீங்கள் நேரான பாதையில் ஸ்திரமாக இருந்து எனக்கு வழிப்பட்டு நடப்பீர்களாகில், நான் உங்களுக்கு இம்மை மறுமைப் பயன்களை அளிப்பேன் நீங்கள் எனக்கு வழிப்பட்டு நடப்பீர்களாகில் நான் உங்களுக்கு ஒவ்வொரு வஸ்துவும் ஒவ்வொரு மனிதரும் வழிப்பட்டு நடக்குமாறு செய்வேன்," எனச் சிலர் இத்திரு வசனத்திற்கு வியாக்கியானங்கூறி இருக்கின்றனர். எல்லாம் வல்ல இறைவன் நம் முஸ்லிம் மக்களிடை மனமாற்றத்தை யுண்டாக்கி நேரான வழியில் கொண்டுவந்து இம்மை மறுமைப் பலன்களை அளிப்பானுக! ஆமீன்!!

இஸ்லாமும் பெண்களும்

(ஒரு முஸ்லிம் மாது எழுதியது.)

இஸ்லாம் மதம் தோன்றுவதற்கு முன் மாதர் மிதமிஞ்சித் துன்பம் இழைக்கப்பட்டு வந்தனர். உலக மெங்கணும் பெண்கள் கேவலமாகவும் அற்பமாகவும் மதிக்கப்பட்டனர். எந்த இடத்திலும் பெண்டிர் ஒரு பொருட்டாக மதிக்கப்படவில்லை; ஆனல், இஸ்லாம் மதம் அவ்விதம் ஈனத்திற்கும் மானத்திற்கும் ஆளான மாதரை மீட்டு, அன்னவருக்கு மதிப்பும், சிறப்பும், சமத்துவமும் அளிக்கலாயிற்று; பெண்கள் அவமதிக்கப்பட்டு வந்ததைத் தொலைத்தது. யாதொரு பாவத்தையும் அறியாத பெண் மக்களை பெற்றோர்களே கொலை செய்யும் வழக்கத்தை இந்த இஸ்லாம் மதம் அடியுடன் ஒழித்து, உலக மாதருக்கு ஒப்பற்ற உபகாரம் புரிந்துளது. இஸ்லாம் மதம் தோன்றுவதற்கு முன் அறியாத ஜனங்கள் தங்களுக்குப் பிறந்த தங்கள் அருமைப் புதல்விகளே தங்களின் கேவலத்திற்குக் காரணமாக இருப்பதாக நினைத்தனர். இத்தகைய தப்பு எண்ணத்தை ஆதாரமாகக் கொண்டு, தங்கள் அருமந்த மகளிரை உயிருடன் புதைத்து வந்தனர்; மலையின் மீதழைத்துச் சென்று ஆங்கிருந்து கீழே தள்ளிக் கொலை செய்துவந்தனர். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இக்கொடுஞ் செயலை முதல் முதலாக நீக்கினர்கள்; அதன் பின் பெண்களின் உரிமைகள் இன்னின்னவை என நிர்ணயித்தார்கள். ஆடவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைவிகளுடன் ஒழுங்காக நடந்துகொள்வதற்கான வழிகளைக் காட்டினர்கள். இதனல் உலகத்தில் மாதர்களின் கண்ணியம் வளர்க்கப்பட்டது. நாளடைவில், உலக

வாழ்க்கையிலே பெண்கள் சம உரிமையுள்ள வர்களாகக் கருதப்படலானார்கள்.

நபிகள் நாயகமவர்கள் பெண்களைக் கௌரவித்து வந்தார்கள். அவர்களின் அருமை பெருமைகளை தம் மதத்தவர், தம் தேசத்தவர், தம் சமூகத்தவர் என்று மாத்திரமல்லாமல், ஒவ்வொரு மதத்திலுள்ள பெண்களையும் கௌரவித்துக் கண்ணியப்படுத்தி வந்தார்கள். ஹுனைன் யுத்தத்தில் முஸ்லிம்களிடம் கைதிகளானவர்களில் நபிகள் நாயகமவர்களுக்கு அமுதூட்டிய அன்னையின் புத்திரியையும் கைதியாகக்கொண்டு வந்தனர். நபிகள் நாயகமவர்கள் அப்பெண்மணியை இன்னார் என இனந் தெரிந்தவுடன், தமது அங்கவஸ்திரத்தை விரித்து அதிலிருக்கும்படி செய்து மிகவும் கண்ணியப்படுத்தி, பல வெகுமதியும் கொடுத்து மரியாதையாக அனுப்பி வைத்தார்கள்.

மற்றொரு சமயம் அறபிகளிற் சில கோத்திரத்தினர், இஸ்லாத்திற்கு விரோதமாகக் குழப்பஞ் செய்தனர். இவர்களை அடக்க முயற்சிகள் நடந்தன; அதனால் இவர்கள் முற்றிலும் அடக்கப்பட்டனர்; பலர் கைதியாயினர். சிறையானவர்களில், ஹாத்திம் தாயிஉடைய புதல்வி ஸப்பானு என்ற பெண்மணியும் ஒருவர். நபிகள் நாயகமவர்களுக்கு இச்செய்தி தெரிந்தது. உடனே அப்பெண்மணிக்கு தக்க மரியாதை செய்து விடுதலை அளிக்க அவர்கள் விரும்பினார்கள். ஆயினும், அப்பெண்மணி தான் மாத்திரம் தனியாக விடுதலை பெறுவதை விரும்பவில்லை. தன்னைச் சேர்ந்த கைதிகள் யாவரும் விடுதலை பெறவேண்டும், இல்லையேல் தானும் கைதியாக இருக்கவேண்டும் என விரும்பினாள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்பெண்மணியைக் கௌரவிப்பதற்காக எல்லாக் கைதிகளையும் விடுதலை செய்தார்கள். அப்பெண்மணியும் இதர கைதிகளும் கிறிஸ்தவ மதத்தவர்; முன்னர் கூறப்பட்ட பெண்மணி விக்கிரக ஆராதனை புரிவோரைச் சேர்ந்தவர்; இவ்விதம் நாயகமவர்கள் பிறமதப் பெண்களையும் கௌரவித்து வந்தார்கள்; பெண்களில் எவ்வித வித்தியாசமும் பாகுபாடுமின்றி அவர்களை ஆதரித்து வந்தார்கள்.

உம்முல் மூமினீன்கதீஜா நாயகிஅவர்களின் தோழிகள் நபிகள் நாயகமவர்களின் சமுகத்திற்கு வந்தால், நாயகமவர்கள் அவர்களை கௌரவிப்பார்களாம். அவர்களுடன் மிகவும் அன்பாகப் பேசுவார்களாம். தம்முடைய செல்வப் புதல்வியாகிய பீபி பாத்திமா (றலி) அவர்கள் நாயகமவர்களின் சமுகத்திற்கு வந்தால், நாயகமவர்கள் சிலசமயங்களில் எழுந்து நின்று மிகவும் கருணையாகவும் கண்ணியமாகவும் நடந்து கொள்வார்களாம். இவ்விதம் நபிகள் நாயகமவர்கள் பெண்களில்இளையவர்,மூத்தவர், தம் மதத்தவர், பிறமதத்தவர் என்றவித்தியாசம் பாராட்டாமல், உலகத்திற்குப் பாடங் கற்றுக் கொடுத்தார்கள். இவ்வாறு இஸ்லாம் மதம் போதித்ததன் பலனாக தற்சமயம் உலகத்திலுள்ள படித்த சமூகத்தவரும், புத்திசாலிகளும் பெண்களின் உரிமைகளை ஆதரித்து வருகின்றனர்.

நபிகள் நாயகமவர்கள் தங்களுடைய உபதேசங்களில் பலதடவைகளிலும் பெண்களைப் பற்றிக் கூறி இருக்கிறார்கள். "ஆடவர்களுக்குப் பெண்கள் செய்யவேண்டிய கடமைகளும் சௌகரியங்களும் இருப்பதுபோல், பெண்களுக்கும் ஆடவர்கள் செய்யவேண்டிய கடமைகளும் சௌகரியங்களு மிருக்கின்றன. 'இறைவனை வணங்குபவர்களே! இறைவனுக்கு அஞ்சுங்கள். பெண்களை நல்லவிதமாக நடத்துங்கள். அவர்கள் உங்களிடம் கொடுக்கப்பட்ட அமானிதப் பொருள்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு அநியாயஞ் செய்யாதீர்கள். ஆடவரும் பெண்டிரும் மனித இனத்தைச் சேர்ந்தவர்களென்பதை நீங்கள் அறியவில்லையா? இவ்விரு சாராருக்கும் புத்தியும் அறிவும் உண்டு. இவ்விரு சாராரும் தங்களுக்கு வேண்டிய நன்மைகளை அறிந்து கொள்ளக் கூடியவர்களே. இவ்விரு சாராருக்கும் ஒன்று போலவே இருதயங்கள் உண்டு. பெண்களை ஆடவர்கள் நல்ல விதமாக நடத்துவதால் சந்தோஷ மடைகின்றனர். அவ்வாறில்லாவிட்டால், வருத்தமடைகின்றனர். அவ்வாறிருக்க நீங்கள் மாத்திரம் கௌரவிக்கத் தக்கவர்கள் என்பதும், பெண்கள் கௌரவிக்கத் தகாதவர்கள் என்பதும் எங்ஙனம்? பெண்கள் உங்கள் வாழ்க்கைத் துணைவிகள் என்பதை ஞாபகம் வையுங்கள். அவர்களுக்குக் கண்ணியத்தைக் கொடுங்கள்" என்ற கருத்துகளைக் கொண்டு நபிகள் நாயகமவர்கள் பல பிரசங்கங்கள் செய்திருக்கின்றார்கள்.

ஆணும் பெண்ணும் கல்வி கற்பது கடமை என இஸ்லாம் இயம்பி இருக்கிறது. கல்வி என்ற ஒவ்வொரு தலைவாசலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒன்று போலவே திறந்திருக்கிறது. முஸ்லிம் ஸ்திரீகள் ஆலிமாகவும் பாஜிலாகவும் கவிஞையாகவும், இருப்பதை உலக சரித்திரம் உரைக்கிறது. ஹஜ்றத் இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள் பீபீ நபீஸா (றலி) அவர்களின் மாணுக்கராக இருந்தார்கள் என்றும், இமாம் ஜலாலுத்தீன் ஸுயூத்தி (றஹ்) அவர்கள் ஹஜ்றத் ஆஸியாவிடம் கல்வி கற்றிருக்கிருர்கள் என்றும், முஹிய்யத்தீன் இப்னு அறபி என்ற பெரியார் ஷாம் தேசத்தைச்சேர்ந்த அமினுபேகம் என்ற அம்மையிடம் கல்வி பயின்றிருக்கிருர்கள் என்றும் ததுகிரத்துல் காத்தீன் என்ற நூல் நுவலா நிற்கும்.

ஹிந்து ராணிக்கு முஸ்லிம் சோதரன்

மத்திய இந்தியாவில் இராஜபுதனம் எனும் பெருநாடு ஒன்றுளது. அதன் ஒரு பாகம் மேவார் அல்லது மத்தியபதி எனப்படும். ராணு ரவிமல்லன் அதனை ஆண்டு வந்தனன். அவனுக்கு சங்கரசிம்மன், பிருதிவிராஜன், ஜயமல்லன் என மூன்று புதல்வர் இருந்தனர். மூவரும் ராஜஸ்தான் சரித்திரத்தில் விசேஷ கீர்த்திபெற்று விளங்கினர். அரசுரிமைக்காக அம்மூவரும் ஒருவரோடொருவர் விளங்கிப் போர் புரிந்தனர். அதில் ஜயமல்லன் என்பவன் இறந்துபோயினன். எஞ்சிய இரு சகோதரரும் வெகுநாள் வரை சலியாமல் வாள்வரிசைப் பராக்கிரமங் காட்டி நின்றனர். இறுதியில் ராணு சங்கர சிம்மன் வாகை சூடி அரசுரிமையைக் கைக்கொண்டான். இவர் மிகவும் பராக்கிரமசாலி. பேபர் சக்கரவர்த்தியின் காலத்திற்குமுன் மாளவம், டில்லி ஆகிய ராஜ்யங்களில் பல முஸ்லிம் அரசர்களை வெற்றிகொண்டவன். தனது தோள் வலியால் அரசை நாற்றிசையும் பரப்பியவன். ராஜஸ்தானின் பெரும்பாகம் அவன் வயப்பட்டது. ரஜபுத்திரர்கள் யாவரும் அவன் பால் அன்பும் பக்தியும் கொண்டிருந்தனர்.

அப்போர்களின் விளைவாக ராணு சங்கர சிம்மனது உரு மாறிவிட்டது. தனது சகோதரர்களுடன் செய்த சண்டையினுல் ஒரு கண்ணை இழந்தான். பகைவருடன் ஆற்றிய போரில் இடது கையை இழந்தான்; பேபர் சக்கரவர்த்தியுடன் சமர் செய்ததில் குண்டு அடிபட்டு ஒரு காலை இழந்தான்; திரேகத்தில் ஏறக்குறைய நூறு காயங்கள்வரை அக்கொற்றவனுக்கு ஏற்பட்டன. போர்முனையில் படும் காயத்தழும்புகளே வீர புருஷனுக்கு நல் அணிகளாகும்.

ராணு சங்கர சிம்மனது மனைவி ராணி கர்ணுவதி ஒருதரம் ஹுமாயூன் சக்கரவர்த்திக்கு இரட்சைக் கயிறு அனுப்பினுள். ஹுமாயூன் சக்கரவர்த்தி அதுகண்டு அதிசயித்து அதன் வரலாறு கேட்டனர். பண்டிகை தினங்களில் தங்கள் அன்பைக் காட்டிக் கொள்வதற்காக ஹிந்துமாதர் அவ்விதம் இரட்சா பந்தனம் அனுப்புவது வழக்கம் என இராணியின் தூதர் பதில் கூறினர். அப்பொழுது ஹுமாயூன் சக்கரவர்த்தி அவர்களைநோக்கி "மீவார் ராணி என்னைத் தன்னுடைய சகோதரன் என்று கருதுகிருள்" என அவர்களை மீண்டும் கேட்டார். அதற்கவர்கள் ஆம் என்றனர். பின்னர் ஹுமாயூன் சக்கரவர்த்தி அதனை ஏற்றுக்கொண்டு அத்தூதருக்கு மரியாதை செய்து பல வெகுமதிகள் தந்து வழி அனுப்பினுர். அச்சமயம் அவர்களை நோக்கி, "என்னை இராணி தன் சகோதரனுகப் பாவித்தது போல், நானும் இராணியை என் உடன் பிறந்த சகோதரியாக இன்றையதினம் முதல் எண்ணி யுள்ளேன். எப்பொழுதாவது என் உதவி தேவையானுல் உடனே எனக்குத் தகவல் தெரிவிக்கவேண்டும்; தன் உடன் பிறந்த சகோதரியை ஒருவன் எவ்வாறு ஆதரிப்பானே அவ்வாறே நானும் இராணியை ஆதரிப்பேன்" என்று சொல்லி அனுப்பினுர்.

கி. பி. 1530 ல் ராணு சங்கர சிம்மன் காலமாஞன். அவன் மைந்தன் ராணு ரத்தின சிம்மன் சிம்மாசன மேறினன். ஆனல் அவன் நெடுநாள் உயிருடன் இருக்கவில்லை. கி. பி. 1535 ல் அவனுடைய இளைய சகோதரன் ராணு விக்கிரமாதித்ய சிம்மன் என்பான் பட்டத்துக்கு வந்தான்.

ராஜா விக்கிர மாதித்தன் பட்டத்துக்கு வந்த சிறிது காலத்திற் குள்ளாகவே கூர்ஜரத்திலுள்ள சுல்தான் பகதூர் என்ற பிரசித்தி பெற்ற பாத்ஷாஹ் அவ்விக்கிரமன் மீது பலமான படைகொண்டு கிளம்பினர். ராஜபுத்திர வீரர் உயிரை வெறுத்து யுத்தஞ் செய்தனர். ஆனல் முஸ்லிம் படைகளை எதிர்த்து நிற்க அவர்களால் ஆகவில்லை. முடிவில் முஸ்லிம்கள் சித்தூர்க் கோட்டையை முற்றுகை போட்டார்கள். ராஜ்யத்தின் பன்னிரண்டு அதிபர்கள் உயிர் துறக்காதவரை, சித்தூர் வேந்தரின் குலதெய்வம் திருப்தி அடையாது என்று சோதிடர் கூறினர். ஆகவே, ராஜா விக்கிரமாதித்த சிங்கையும், அவரது இளையசகோதரனை உதய சிங்கையும் காப்பாற்றுவதற்காக ஒருவர் பின் ஒருவராகப் பன்னிருவர் பெயருக்கு மாத்திரம் அரசர்களாக நியமனமாகி அரும்போர் விளைத்து ஆவிதுறந்தனர். உடனே ராணி கர்ணவதி, ஹுமாயூன் சக்கரவர்த்திக்குக் கடிதம் எழுதி இரட்சா பந்தனம் அனுப்பிய சம்பவத்தை ஞாபக மூட்டினள். ஆனல் ராணியின் துர் அதிர்ஷ்ட வசத்தால் அச்சமயம் ஹுமாயூன் வங்காளத்தில் யுத்தம் புரிந்து கொண்டிருந்தார். ராணியின் தூதர் பல கஷ்டங்களுக்கு ஆளாகி முடிவில் கோட்டையிலிருந்து தப்பி ஹுமாயூனை நாடிச்சென்றனர். அக்காலத்தில் தந்தி, தபால், ரயில் வசதிகள் கிடையா. ஆதலால், ராணியின் தூதர் ஹுமாயூனிடம் சென்று தகவல் தெரிவிப்பதற் குள்ளாக, சுல்தான் பஹதூரின் சேனைகள் கோட்டையை மிகவும் நெருங்கி, இராஜ புத்திர வீரத் துன்புறுத்த லாயினர். கோட்டையின் சுவர்களில் ஒன்று தகர்ந்துபோயிற்று. கோட்டைக் குள்ளிருந்த விக்கிரமாதித்த சிங்குடன் இருந்த ஆடவர் ஒருவர் பின் ஒருவராக மிக தீவிரமாக யுத்தஞ்செய்து உயிர் துறந்தனர். எனினும், முஸ்லிம் படை யெழுச்சியைத் தடுக்க முடியவில்லை. ராஜபுத்திர மாதர் அக்கினி குண்டம் வளர்த்து, அதில் வீழ்ந்து உயிர் துறக்க நிச்சயித்தனர்.

உடைந்துபோன கோட்டைச் சுவரின் அண்டையில் அக்கினிகுண்டம் வளர்க்கப்பட்டது. அக்கினிக் குண்டம் சரியாகும் வரை பாக்கியுள்ள ராஜபுத்திரவீரர்கள் முஸ்லிம் சேனைகளைக் கோட்டைக்குள் புகவிடாமல் தீவிரமாகப் போர்புரிந்தனர். முடிவிலே முஸ்லிம் சேனைகள் கோட்டைக்குள் புகுந்துவிட்டனர். ராணி கர்ணவதியும் தோழிகளான ராஜபுத்திர ஸ்திரீகளும் அக்னி குண்டத்தில் குதித்து ஆவி விடுத்தனர்.

இஃதிவ்வாறிருக்க, ஹுமாயூன் சக்கரவர்த்தி தனது ஹிந்து சகோதரியான ராணி கர்ணவதியின் கஷ்டநஷ்டங்களை அறிந்ததும், வங்காளத்தில் நடந்துகொண்டிருந்த முக்கிய யுத்தத்தையும் அரைகுறையாக விட்டுவிட்டு, உடனே தனது சேனைகளுடன் மீவாருக்குப் புறப்பட்டார். அச் சக்கரவர்த்தி இரவு பகலாகப் பிரயாணஞ் செய்ததாகவும், களைப்படைந்த தனது சேனைகளுக்குச் சிலமணி நேரங்கூட ஓய்வுகொடுக்கவில்லை யென்றும், அபாரப் பணச்செலவு செய்து வெற்றி கொண்டவர் வங்காளத்தை அப்படியேவிட்டு விடுவதனலேற்படும் பெரும் நஷ்டத்தைப் பொருட் படுத்தவில்லை என்றும் சரித்திரக்காரர் கூறியுளர்.

ஹிந்து ராணியைத் தன் சகோதரியாகக் கொண்டதால், உண்மையான முஸ்லிம்என்ற முறையில் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவது ஹுமாயூனுக்கு அத்தியாவசியமாக இருந்தது. ஹுமாயூன் இவ்வளவு அவசரமாக வந்தும் தனது சகோதரிக்குத் தக்கசமயத்தில் உதவக்கூடவில்லை. ஹுமாயூனும் அவருடைய சைனியங்களும், சித்தூர் கோட்டைக்கு வந்த போது, சுல்தான் பகதூர் அதைக் கைப்பற்றிப் பல தினங்கள் கழிந்துவிட்டன. ஆயினும், ஹுமாயூனது வருகையைக் கேள்வியுற்றதும், சுல்தான் பகதூர் கூர்ச்சரத்தை நோக்கிச் சென்றுவிட்டார். ஹுமாயூன் தனது ஹிந்து ராணியின் அக்கினி குண்டத்தைக்கண்டு துக்கத்தால் வருந்திக் கண்ணீர்வடித்து, தக்க சமயத்தில் வந்துதவக்கூடவில்லையே என்று தன்னைநொந்து கொண்டார். பின்பு, ராஜா விக்கிரமாதித்த சிங்கின் இடையில் தமது கரங்களால் உடை

வாளைக் கட்டி அவரை மறுபடியும் சிம்மாசனத்திலேற்றி வைத்தார். இதே விக்கிரமாதித்த சிங்கனின் தகப்பனுரான ராணு சங்கர சிம்மனும் தன் தகப்பனுராகிய பேபரும் போர்புரிந்தவர் என்பதை முற்றிலும்மறந்துவிட்டார்.

இச் சரித்திரசம்பவத்திலிருந்து முஸ்லிம் அரசர்களின் தாராளத்தன்மையும், ஹிந்து சகோதரர்கள்பால் அவர்கள் கொண்டிருந்த அன்பும் விளங்கும். இக்காலத்தைய ஹிந்து சகோதரரில் சிலர் இவைகளை எல்லாம்மறந்து "அந்நியர்"களான முஸ்லிம்களை அப்புறப்படுத்துங்கள் என்ற விஷத்தைக் கக்குகின்றனர். இவ்வாறுசெய்தல் ஹிந்து தர்மத்தைக் காப்பதாகும் என்றும் நினைக்கின்றனர் போலும்; சகோதர உணர்ச்சியின் காரணமாகத்தான், மொகலாய அரசாங்கத்தைக் காப்பதற்காக முன்னளில் ராஜபுத்திரர் தங்கள் உயிரையும் தியாகஞ் செய்ய முன்வந்தனர் என்பதை ஹிந்து சகோதரர்களுக்கு ஞாபகமூட்டுகிறோம்.

குர்பானி

இப்ருஹீமை அவருடைய றப்பு பல விஷயங்களைக் கொண்டு சோதித்த போது, அவைகளை அவர் பரிபூரணமாகச் செய்துவிட்டார். (ஆதலால் இறைவன் அவரை நோக்கி) நிச்சயமாக நான் உன்னை மனிதர்களுக்குத் தலைவருக ஆக்கினேன் எனக் கூறினன்: அதற்கு (அவர்) என்னுடைய சந்ததியிலுமா? எனக் கேட்டார். (அதற்கு அவன் உம்முடைய சந்ததியிலுள்ள) அநியாயக்காரர்களை என்னுடைய உறுதிமொழி சாராது என்று கூறினன். 1-124

ஹஜ்றத் இப்ருஹீம் (அலை) அவர்களுக்கு இறைவன் கலீல் என்னும் ஒரு பட்டம் அளித்துளான். அச்சிறந்த பட்டத்தை அவர்கள் பெறு முன், இறைவன் அவர்களைப் பலவிதத்திலும் பரிக்ஷை செய்தான். அவர்கள் அவற்றிலெல்லாம் இறைவன் கட்டளைக்கு உட்பட்டு, அவன் கூறிய வண்ணம் பரிபூரணமாக நடந்தார்கள். ஆகவே இப்ராஹீம் (அலை) அவர்களை இறைவன், ஜன சமுகத்தின் தலைவராக ஆக்கி கலீலுல்லாஹ் என்ற சிறந்த பட்டமும் அளித்தான். அப்பரிட்சையின் விவரத்தை இங்கே சுருங்கச்சொல்வோம்.

முதலில் ஹஜ்றத் இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தமது பெற்றோரையும் சமுகத்தினரையும் நோக்கி, "விக்கிரகங்களைத் தெய்வமாகக்கொள்ளலாமா? நீங்கள்வழிகேட்டிலிருப்பதாகநான் கருதுகிறேன்" எனக் கூறி அவர்களுக்குத் தைரியமாகப்போதிக்கவேண்டியிருந்தது. இரண்டாவதாக, ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்களே சந்திரன், சூரியன், நக்ஷத்திரம் முதலியன தெய்வமாக இருக்கலாம். எனத் தீர்மானித்து, அவைகளை ஆண்டவன் எனக்கூறினர்கள். பின்னர் அவைகள் ஒவ்வொன்ருக அஸ்தமித்ததைக்கண்டு இவைகள் ஆண்டவனுக இருக்க அருகதையற்றவைகள். ஆதலால், இவைகள் ஆண்டவனுகா எனத் தீர்மானித்து, ஒரே ஆண்டவனுகிய அல்லாஹ்விடத்தில் சரணடைய நேர்ந்தது. அதன் பிறகு தமது ஊரிலுள்ள ஜனங்களுக்கு விக்கிரக ஆராதனையை மறுத்து, உபதேசித்து அவர்களின் பகைக்கு ஆளானர்கள். அந்த உபதேசம் ஜனங்களுக்கு நேர்வழி காட்டுவதாக இருந்தாலும், அக்காலத்திலிருந்த நம்றூத் அரசனின் தெய்வத் தன்மையை மறுப்பதாக இருந்ததால், அரசனும் பிரஜைகளும் சேர்ந்து, இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களைப் பல விதத்திலும் துன்புறுத்தத் தலைப்பட்டனர்.

எனினும், இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை அவ்வரசனல் அடக்க முடியவில்லை. ஆதலால், அவர்களை அடியுடன் ஒழித்துவிடக் கருதி அக்குனிகுண்டத்தில் அவரைத்

தூக்கிப் போட்டனர். எனினும், இறைவன் தனது கலீல் அவர்களைக் காப்பாற்றினான். அந்நெருப்பு வெளித் தோற்றத்தில் ஜனங்களுக்கு அக்கினியாக இருந்தாலும், இப்ருஹீம் அலை ஹிஸ்ஸலா மவர்களுக்கு அது பூங்காவனமாக விளங்கியது. இதிலும், அநியாய வழி கேடர் தோல்வியடைந்தனர். எனவே, ஹஜ்றத் இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமை அவர்கள் குடும்பத்தை விட்டு விலக்க முயன்றனர். அரசனது போஷணையிலிருந்த ஆசர், இப்ருஹீம் (அலை) அவர்களைத் தமது குடும்பத்தைவிட்டு ஊரைவிட்டு தேசத்தைவிட்டு பந்துமித்திரரைவிட்டு வெளியேறிச் செல்லுமாறு கட்டளையிட்டார். தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்பதற்கேற்ப, இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள், அந்த ஒரே ஆண்டவனது வழிபாட்டை முன்னிட்டு, எல்லாவற்றையும் துறந்தார்கள்.

அது போழ்து இப்ருஹீம் (அலை) அவர்களுடன் அவர்களின் மனைவியான பீபீஸாராவும், சகோதரரின் புத்திரரான லூத் அலைஹிஸ்ஸலாமுமே துணையாகச் சென்றனர். அவர்களுடன் சில ஆடுகள் மாத்திரமே இருந்தன. இதுவரை ஹஜ்றத் இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு மக்கட்பேறு உண்டாகவில்லை. அப்பிரயாணத்தில் எகிப்து தேசத்திற்கு இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாம் செல்லவே அங்கும் மனவருத்தம் நேர்ந்தும், முடிவில் எகிப்து தேசத்து வேந்தரான ரக்கியூன் என்பானின் புத்திரியான பீபீஹாஜராவை இரண்டாவது மனைவியாகக் கொண்டார்கள். இவர்கள் வயிற்றில் பொறுமையே பூஷணமாகக்கொண்ட புத்திரர் பிறந்தார். இறைவன் அருளால் பிறந்த பிள்ளையாதலின், அதற்கு இஸ்மாயீல் என்ற பெயர் வைத்தார்கள். இஸ்மாயீல் என்ற பதம் இறைவன் அங்கீகரித்துக்கொண்டான் என்று பொருள்படும். இவ்விதமாக 86 வது வயது வரை புத்திரப் பேறின்றி வாழ்ந்து, முடிவில் பெற்றஷெ புத்திரரைப் பேரன்பாக வளர்த்து வந்தார்கள்.

பின்பு இறைவனின் கட்டளைப்படி இப்ருஹீம் (அலை) அவர்கள் தமது அருமைப் புதல்வரையும் அன்பிற்குரிய மனைவியாகிய ஹாஜராவையும் இப்பொழுது மக்கா இருக்கும் இடமாகிய தண்ணீரில்லாத கானகத்தில் விட்டுவிட நேர்ந்தது. இச்சோதனையிலும் இப்ருஹீம் (அலை) அவர்கள் சிறப்பாக விளங்கினார்கள். இறுதியில் இப்ருஹீம் (அலை) அவர்கள் தமது ஏக சுதனாகிய இஸ்மாயீலைத் தமது கையாலேயே இறைவனுக்காக அறுத்துக் குர்பானி செய்வதாகக் கனவு கண்டார்கள். அக்கனவு தொடர்ச்சியாக மூன்றுநாள் காணப்படவே, இப்ருஹீம் (அலை) அவர்கள் ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுத்து குர்பானி செய்ய நிச்சயித்து, மக்காவிலுள்ள மர்வா என்ற மலைக்கு அழைத்துச் சென்று, தாம் கண்ட சொப்பனத்தைக் கூறி, இஸ்மாயீல் (அலை) அவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டார்கள்.

அதற்கவர்கள் தமது தந்தையை நோக்கி, “ தாங்கள் இறைவனால் ஏவப்பட்டபடி செய்யுங்கள் ; இன்ஷா அல்லாஹ் நான் பொறுமையாளர்களில் ஒருவனாக இருப்பதைத் தாங்கள் காணுவீர்கள் ” என்று கூறினார்கள். பின்பு ஹஜறத் இப்ருஹீம் (அலை) அவர்கள் தமது பிள்ளையை அறுத்தார்கள். ஆயினும், அவரைப் பலியிடுதல் இறைவனது நோக்கமாக இல்லாததால், இஸ்மாயீல் (அலை) அவர்களை இறைவன் காப்பாற்றி, இப்ருஹீம் (அலை) அவர்களின் தியாகங்களையும் ஏற்றுக் கொண்டான். இதுதான் குர்பானியின் விருத்தாந்தம். இதில் குறிப்பிடவேண்டிய முக்கிய விஷயங்கள் பலவுள. முற்காலத்தில் ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களின் மூத்தப் பிள்ளையை இறைவனுக்காக அறுத்துப் பலியிடுவது வழக்கம். அவ்விதமாக அறுத்துப் பலியிடுதல் மனித நாகரிகத்திற்கும் அந்தஸ்திற்கும், ஏற்றதாக இருக்கவில்லை.

ஆதலால், இறைவன் இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு சொர்ப்பனத்தின் மூலமாக இவ்வாறு கட்டளையிட்டு, தமக்கு இஷ்டமானது யாது என்று அறிவித்து, நரபலி கொடுப்பதையும் உலகத்தை விட்டு நீக்கினான். ஹஜ்றத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பதிலாக இறைவன் ஆட்டை அறுத்து பலியிடுமாறு செய்தான். இதிலிருந்து தான் ஆடறுத்துப் பலியிடும் வழக்கம் ஆரம்பித்தது. இவ்வாறு ஆடறுத்துப் பலியிடுதல் நரபலியின் ஞாபகார்த்தமாக

ஏற்பட்டாலும், மக்கள் இறைவனுக்கு அர்ப்பணம் என்பதை வலியுறுத்தவே, இறைவனுக்கு இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களை பைத்துல்லாஹ்வின் ஊழியத்திற்காக அர்ப்பணம் செய்து விட்டார்கள்.

ஹஜ்றத் இப்ருஹீம் (அலை) அவர்கள், இஸ்மாயீல் (அலை) அவர்களைக் குர்பானி செய்வதற்காக மர்வா மலைக் குன்றுக்கழைத்துச் சென்றபோது, இப்லீஸானவன் இஸ்மாயீல் (அலை) அவர்களைக் கலைத்தான். என்றாலும், அதற்கு அவர்கள் இடங்கொடுக்கவில்லை. ஆதலால், அவன் வழியில் பயங்கரமான தோற்றத்துடன் தோன்றி, அவர்களைப் பயங்காட்டினான். அப்பொழுது இஸ்மாயீல் (அலை) அவர்கள் கற்களை எடுத்தெரிந்து அவனை விரட்டினார்கள். மேற்கண்டவாறு அவன் மூன்று இடத்தில் அவர்களைப் பயங்காட்டி இருக்கிறான். இஸ்மாயீல் (அலை) அவர்களும் அவனை அம்மூன்றிடத்திலும் அவ்வாறே கல்லால் அடித்திருக்கிறார்கள். இதன் ஞாபகார்த்தமாகத்தான், இன்றும் ஹஜ்ஜுக்குச் செல்வோர் "ஜம்றத்துல் ஊலா" "ஜம்றத்துல் உஸ்தா" ஜம்றத்துல் உக்பா" ஆகிய மூன்றிடத்திலும் எவ்வேழு முறை பொடிக்கற்கள் எறிகின்றனர்.

இவ்விதம் ஹஜ்ஜுடைய கடமைகளும் அதில் செய்யப்படும் அமல்களும் ஹஜ்றத் இப்ருஹீம் (அலை) இஸ்மாயீல் (அலை) ஆகிய நபிமார்களுக்கு இடையில் நடந்த சரித்திர சம்பவமான காரியங்களை ஞாபகமூட்டுவனவாம். அன்றியும், இறைவன் கட்டளைக்குத் தங்கள் உடல் பொருள், ஆவி, மனைவி, மக்கள் யாவற்றையும் அற்பணம் செய்து நடக்கவேண்டும் என்ற நியதியையும் ஞாபகமூட்டும்.

முற்காலத்தில் குர்பானி செய்பவர்கள் அந்த குர்பானியைச் செய்து முடியும் வரை தலை க்ஷவரம் செய்துகொள்ளவோ செய்வித்துக் கொள்ளவோ மாட்டார்கள். இதுதான் இப்பொழுது ஹாஜிகளுக்கு இஹ்றாம் கட்டியபின், ஹஜ்ஜுமுடிந்து குர்பானி செய்யும் வரை தடுக்கப்பட்ட காரியமாக இருக்கின்றது.

இக்காரியம் ஹஜ்றத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களின் சந்ததியினரிடம் முற்காலத்திலிருந்து வந்ததுடன், அவர்களின் மார்க்கத்தைப் பின்பற்றிய அவர்களின் ஆத்மீக மக்களான முஸ்லிம்களிடமும் இருந்து வந்தது; இன்னும் இருந்துவருகிறது. இன்ஷா அல்லாஹ் உலகம் முடியும்வரை இருந்தே வரும். உண்மை இங்ஙனமிருக்க விவிலிய நூலில் இச்சம்பவம் முற்றிலும் திரித்துக் கூறப்பட்டிருக்கிறது. ஹஜ்றத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் "நேசகுமாரன் அல்லர், ஏக சுதனும் ஆகார், ஹஜ்றத் இப்ருஹீம் (அலை) அவர்களுக்கு அவர்களின் முதல் மனைவி பீபீ சாரா வயிற்றில் பிறந்த இஸ்ஹாக் (அலை) அவர்கள் தான் இப்ருஹீம் (அலை) அவர்களின் ஏகசுதர்" என்று விவிலிய நூல் கூறும். தாங்களே சிறந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதற்காக யூதர்கள் தங்களின் மூதாதையரான ஹஜ்றத் இஸ்ஹாக் (அலை) அவர்களைப்பற்றிப் பெருமையாக இவ்விதம் திரித்து எழுதிவைத்திருக்கின்றனர்.

என்றாலும், உண்மையில் பலியானவர் யார் என்பதையும், ஏகசுதனாக இருந்தவர் யார் என்பதையும், அந்த விவிலிய நூலே இன்னும் அறிவித்துக்கொண்டிருக்கிறது. தவிர, யூதர்களிடம் இந்த ஹஜ்ஜு ஞாபகார்த்தம் இல்லாதிருப்பதே இவர்கள் கூறுவது யாவும் வெறும் புரட்டு என்பதையும், பொறாமைக் குணத்தால் திரித்து எழுதப்பட்டது என்பதையும், நித்திய சாக்ஷியாக அறிவித்துக்கொண்டிருக்கிறது. இவர்களைப் பின்பற்றி கிறிஸ்த நண்பர்களும் கூறிவரும் புரட்டுகள் தாம் இன்னும் வேடிக்கையாகும். அவர்கள் தங்கள் விவிலிய நூலை நிதான புத்தியுடன் நடுநிலைமையாகப் பார்ப்பார்களாயின், யூதர்களால் செய்யப்பட்ட மாறுதல்கள் அவர்கள் கண்ணுக்குப் புலப்படாமற்போகாது. வஸ்ஸலாம்.

உழ்ஹிய்யா

(ஹனபி மத்ஹபுப் பிரகாரம்)

ஜக்காத்து விதியான முஸ்லிம் ஆண் பெண் அனைவரும் ஈதுல் அல்ஹா தினமாகிய துல்ஹஜ்ஜு மீ 10உ முதல் 12உ முடியவுள்ள தினங்களுக்குள் குர்பானி கொடுக்க வேண்டும் (வாஜிபு) குர்பானி கொடுக்கக் கடமை யில்லாதவர்கள் குர்பானி கொடுத்தால், அதற்குரிய நன்மையைப் பெறுவார்கள். ஆனால் கடமைப் பட்டவர்கள் குர்பானி செய்யாவிடில் குற்றவாளியாவர்; குர்பானி கொடுக்கப்படும் பிராணியின் உரோமங்களின் கணக்குப்படியும், உதிரச் சொட்டுகளின் கணக்குப்படியும், குர்பானி கொடுத்தவர்களுக்கு மறுமையில் இறைவனால் நற்கூலியளிக்கப்படும். இது நமது மார்க்கக் கிரந்தங்களின் தீர்ப்பு, புஷ்டியுள்ளதும், கொம்புள்ளதும், குற்றமில்லாததுமான பிராணியை குர்பானி செய்ய வேண்டும். இது நாயகமவர்களின் கட்டளை, மெலிந்து போனதும், கண் பார்வை இல்லாததும் காதில் பாதி அல்லது அதற்குமேல் அறுக்கப்பட்டதும் கொம்பு பாதி அல்லது பாதிக்குமேல் உடைந்ததுமானவைகளை குர்பானி செய்வது கூடாது. ஆனால், உடையடித்த கடா, மோழைக்கடா ஆகியவை ஜாயிஸாகும். ஆடு, மாடு, ஒட்டகம் ஆகியவைகளைக் குர்பானி கொடுக்கலாம், ஒட்டகமாக இருந்தால், 5 வயதுக்குக் குறையாததாக இருக்கவேண்டும். மாடு, பசு, எருமை, எருமைக்கடா ஆகியவைகள் இரண்டு வயதுக்கு குறையாததாக இருக்க வேண்டும். வெள்ளாடு இவை குர்பானி கொடுப்பதாயின், ஒரு வயதிற்குக் குறையாதவையாயிருக்கவேண்டும். செம்மறி ஆடு துப்பை ஆடு 6 மாதத்திற்கு குறையாததாக யிருக்கவேண்டும் வேறெந்தப் பிராணியையும் குர்பானி கொடுக்கலாகாது. கொடுத்தால் அது குர்பானியாக நிறைவேறாது.

பசு, எருமை, எருது, எருமைக்கடா, ஒட்டகம் ஆகிய இவை ஒவ்வொன்றும் ஏழு குர்பானிக்குச் சமமாகும். ஆதலால் ஏழு பேர் சேர்ந்து ஒரு பசுவையோ அல்லது எருதையோ அல்லது மேலே குறிப்பிட்டவேறெந்தப் பிராணியையோ குர்பானி கொடுக்கலாம். ஆனால் அந்த ஏழுபேரும் குர்பானி கொடுப்பவர்களாகவே இருக்கவேண்டும். அவர்களில் சிலர் குர்பானி கொடுப்பவர்களாகவும் மற்றவர் குர்பானியுடைய நிய்யத்தில்லாமல் மாமிசம் வாங்குகிற அல்லது விற்பனை செய்கிற நிய்யத்துடன் சேர்ந்திருந்தால் அந்தக் குர்பானி ஆண்டவனிடத்தில் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. ஆதலால்,குர்பானி கொடுக்க நிய்யத்து இல்லாத எவரையும் குர்பானியில் சேர்த்துக்கொள்ளக் கூடாது. குர்பானிக்காக அன்று புதிதாக வாங்கிய பிராணியைப் பார்க்கிலும் வீட்டில் வளர்த்ததைக் குர்பானிகொடுப்பது நல்லது. ஏனெனில், அவைகளை வீட்டிலேயேவைத்து வளர்த்ததால் அவைகளின்மீது அதிகப் பிரியமிருக்கும். பிரியமுள்ள பிராணியைக் கொடுப்பதில் நன்மை அதிகம் உண்டு.

தன்னுடைய கையினாலேயே குர்பானி செய்யவேண்டும். வேறொருவரைச் செய்ய ஏவினால், குர்பானி செய்யு மிடத்தில் அவன் கூட இருக்க வேண்டும். பிராணியை அறுக்கும்போது, "இன்னீ வஜ்ஜஹ்து வஜ்ஹிய லில்லதீ பதரஸ் ஸமாவாத்தி வல்அர்லி ஹனீபன்வமா அனமினல் முஷ்ரிக்கீன். இன்னஸலாத்தி வநுஸ்கீவமஹ்யாய வமமாத்தி லில்லாஹி றப்பில் ஆலமீன். லா ஷரீகலஹு வபிதாலிக உமிர்து வ அன அவ்வலுல் முஸ்லிமீன்" (அதாவது) — விண்ணையும் மண்ணையும் படைத்தவனுக்காகவே நிச்சயமாக நான் என்முகத்தை நேராகத் திருப்பிக் கொண்டேன். இன்னும் நான் இணைவைப் போர்களில் சேர்ந்தவன் அல்லன்; நிச்சயமாக என்னுடைய தொழுகை, கிரியை, ஜீவியம், மரணம், ஆகிய இவை சர்வ உலகத்தினரையும் காத்தளிக்கும் அல்லாஹ்வுக்கே தஞ்சமாம். அவனுக்கு யாரும் இணை

யில்லை. இன்னும் இ(வ்வாறு இணை வைக்கப் படாது என்ப)தைக் கொண்டுதான், நான் ஏவப்பட்டேன். தவிரவும் நான் முஸ்லிம்களில் முதன்மையானவன்] என்ற துஆவை ஓதவேண்டும்.

பின்பு "அல்லாஹு—ம்ம லக்க வமின்க பிஸ்மில்லாஹி அல்லாஹு— அக்பர் [அதாவது:—ஆண்டவனே உனக்காகவே, இன்னும் உன்னில் நின்றுமே (அறுக்கிறேன்) அல்லாஹ்வின் நாமத்தைக்கொண்டு (அறுக்கிறேன்). அல்லாஹு— மிகப் பெரியவன்] என்று கூறி அறுக்கவேண்டும். அறுத்த பின்பு, "அல்லாஹு—ம்ம தகப்பல் மின்னீ கமா தகப்பல்த மின் கலீலிக்க இப்ருஹீம்வஹபீபிக முஹம்மதின் றஸ—லில்லாஹி அலைஹிமஸல்லாத்துவஸ்ஸலாம்" (அதாவது:—நாயனே, உன்னுடைய தோழர் இப்ருஹீம் (அலை) அவர்களிடத்தில் நின்றும், உன்னுடைய அன்பரான முஹம்மது றஸூலுல்லாஹ் (ஸல்) வில் நின்றும் ஒப்புக்கொண்டது போல், என்னில் நின்றும் இதை ஒப்புக்கொள்வாயாக) என்று பிரார்த்திக்க வேண்டும்.

பலர் ஒன்று கூடி குர்பானி கொடுத்தால் அல்லாஹு—ம்ம தகப்பல் மின்னா (அதாவது ஆண்டவனே எங்களில் நின்றும் ஒப்புக்கொள்வாயாக) என்றும், ஒருவர் மாத்திரம் தனியே கொடுத்தால் "அல்லாஹு—ம்மதகப்பல் மின்னீ (அதாவது ஆண்டவனே என்னில் நின்றும் ஒப்புக்கொள்வாயாக) என்றும், வேறொருவரின் சார்பாக குர்பானி அ" த்தால் அல்லாஹு—ம்ம தகப்பல் மின் புலானின் (அதாவது:—ஆண்டவனே இன்னாரில் நின்றும் ஒப்புக்கொள்வாயாக) என்று அவரைக் குறிப்பிட்டும் பிரார்த்தனை செய்ய வேண்டும். பிராணியை அறுக்கும்போது, அதைப் பிடித்துக்கொண் டிருப்பவரும் "பிஸ்மில்லாஹி அல்லாஹு— அக்பர்" என்று கூறிக்கொண்டிருப்பது நல்லது.

பலர் கூட்டாகச் சேர்ந்து செய்த குர்பானியாக இருந்தால், அதன் மாமிசத்தை நிறுத்துப் பாகம் செய்துகொள்ளவேண்டும். உத்தேசமாகப் பாகம் செய்துகொள்ளலாகாது. குர்பானியின் மாமிசத்தை மூன்று சமபாகமாகப் பிரித்து, ஒருபாகத்தை ஏழைகளுக்கும், மிஸ்கீன்களுக்கும் கொடுக்கவேண்டும். பாக்கியுள்ள இரண்டு பாகத்தைத் தானும் தன் குடும்பத்தினரும், தன் பந்து மித்திரரும் உபயோகித்துக் கொள்ளலாம். இறந்துபோனவர் இறந்து போகும் சமயத்தில் வஸிய்யத்துச் செய்திருந்து, அதற்காக அவர் சார்பில் குர்பானி செய்தால், அதன் மாமிச முழுவதையும் ஏழை எளியோருக்குக் கொடுத்துவிடவேண்டும். வஸிய்யத்துச் செய்யாமல் இறந்துபோய் தாமாக அவர்கள் சார்பாக குர்பானி செய்தால், அந்த மாமிசத்தைத் தானும் அனுபவிக்கலாம்.

குர்பானி செய்பவர் துல்ஹஜ்ஜு— மாதம் பிறை பிறந்ததிலிருந்து குர்பானி செய்யும் வரை தலை க்ஷவரம் செய்துக்கொள்ளாமலிருபது நலம். குர்பானிகொடுக்கச் சக்தியற்றவர்கள் துல்ஹஜ்ஜு—மாதம் பிறந்ததிலிருந்து ஈதுல் அல்ஹா பெருநாள் தொழுகை முடியும்வரை க்ஷவரம் செய்துகொள்ளாமலும் நகம் வெட்டிக்கொள்ளாமலும் இருந்தால் அவர்களுக்கும் தவாபு கிடைக்கும்.

இயல்புள்ளவர்கள் தமது இனத்தார்களில் வாஜிபில்லாதவர் களுக்காக உலுஹிய்யா கொடுப்பதும் ஆகும். இதுவுமல்லாமல் இறந்துபோன தன்னுடைய உஸ்தாது, பீர், முர்ஷித், தாய்தகப்பன் நபிகள் நாயகம் (ஸல்) உம்மஹாத்துல் மூமினீன் ஆகியவர்களின் அர்வாஹு—களுக்காகவும் குர்பானி செய்து அதன் நன்மையை அவர்களுக்கும் சாட்டலாம். கூலிக்கு குர்பானி அறுப்பவர்களுக்கும், தோலுரிப்பவர்களுக்கும் கூலியை பிரத்தியேகமாகக் கொடுக்கவேண்டும். குர்பானித் தோல்கள் ஏழைகளுக்கும். மிஸ்கின்களுக்கும் உரியனவாம் ஆதலால், அவைகளை மஸ்ஜிதுச் செலவுக்கும், இதுபோன்ற பொதுக் காரியத்திற்கும் பொது பண்டிற்கும் கொடுக்கக் கூடாது.

குர்பானி பிராணிக்குப் போடப்பட்டிருந்த இரை கயிறு முதலியவைகளையும் தர்மஞ் செய்துவிடவேண்டும். குர்பானி கொடுக்கும்போது உலுவுடனிருக்கவேண்டும், குர்பானி பிராணியை பட்டினி போட்டு அறுக்கக்கூடாது. அதற்கு நன்றாக இரை போட்டு வைத்திருந்து அறுக்கவேண்டும். ஈதுல்அல்ஹாத்தொழுகைக்குப்பின், குர்பானி செய்யவேண்டும். வேறிடங்களுக்குத்தொழச் செல்லும் கிராமவாசிகள் அன்று காலையி

லேயே குர்பானி செய்துவிட்டுத் தொழச் செல்ல அவர்களுக்கு ஷரீஅத்தில் அனுமதி யுண்டு. ஏதேனும் தவிர்க்கமுடியாத காரணத் தால் துல்ஹஜ்ஜு 10வமுதல் 12வக்குள் குர் பானி கொடுக்க முடியவில்லையானல், அதன் கிரயத்தை ஸதக்கா செய்யவேண்டும். குர்பா னிக்காக பிராணி நிறுத்தப்பட்டிருந்தால், அந்தப் பிராணியை விற்பனைசெய்து அந்தத் தொகையை ஸதக்காக் கொடுத்துவிடவேண் டும்.

குர்பானித்தோலும் பொதுஸ்தாபனமும்

ஈதுல்-அல்ஹாவைச் சேர்ந்த அய்யா முன் னஹ்ருகளில் குர்பானி செய்யப்படும் பிராணி களின் தோல்கள் சம்பந்தமாக முஸ்லிம் சகோதரர்கள் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள் பல உள. குர்பானித்தோல்களை ஏழைகளுக்குச் சொந்தமாக்கிவிடவேண்டு மென்பது குர்பானி நிறைவேறுவதற்கு முக் கிய நிபந்தனையாகும். குர்பானி செய்கிறவர் அத்தோல்களை விற்றுத் தனக்குச் சொந்த மாக உபயோகித்துக்கொள்ளக்கூடாது. குர் பானித் தோல்களை வாங்கும் மத்ரஸா, அஞ்சு மன் ஆகிய பொதுஸ்தாபனங்கள் அத்தோல் களை விற்பதனல் கிடைக்கும் பணத்தை தங் கள் பொது நிதியில் சேர்க்காமல் ஜக்காத் பணத்தைச்சேர்க்கவேண்டிய வகையில் செல விட்டுவேண்டியது. மத்ரசா கட்டிடச் செலவு, உஸ்தாது சம்பளச் செலவு ஊர் பொதுவில் பல விஷயங்களுக்காகவும் ஏற்படுத்தப்பட் டிருக்கும் பண்டுகள் முதலிய செலவுகளை அதிலிருந்து செய்யலாகாது. ஆதலால், முஸ் லிம் சகோதரர்கள் இம்முக்கிய விஷயத்தை ஞாபகத்தில் வைப்பார்களென நம்புகிறோம்.

(ஷாபி ஈமத் ஹபுப் பிரகாரம்)

ஹஜ்ஜு பெருநாள் இரவு பகலில் தனக் கும், தன் பராமரிப்பில் இருப்பவர்களுக்கும் உள்ள செலவுகளை விட்டு, அதிகமான ஜவேஜி யுள்ள முஸ்லிமான ஆக்கில் பாலிகானவர் கள் உல்ஹிய்யா கொடுப்பது சுன்னத்து முஅக்கதா. ஆடு மாடு ஒட்டகம் ஆகியவை களைத் தான் உல்ஹிய்யாக் கொடுக்கவேண் டும். இவைகளல்லாத வேறு பிராணிகளில் உல்ஹிய்யாக் கொடுக்கக்கூடாது. ஆனல், ஒட்டகமும், மாடும் ஏழுபேருக்குப் போது மானதாகும். இவைகளில் ஒட்டகம், ஐந்து வயதுக்குக் குறையாததாகவும், மாடும் வெள் ளாடும் இரண்டு வயதுக்குக் குறையாததாக வும், செம்மறி ஆடு ஒரு வயதுக்குக் குறை யாததாகவும், இருப்பதும், இவைகளை அறுக் கும்போது அல்லது அறுப்பதற்கு முன் உல்ஹிய்யா என்று நிய்யத்துச் செய்வதும் ஷர்த்து. இந்த நிய்யத்துச் செய்வதற்கும், அறுப்பதற்கும், புத்தி சுவாதினமுள்ள வேருெரு முஸ்லிமைத் தனக்குப் பதிலாக வக்கீலாக நியமிக்கலாம். இப்பிராணிகள் சொரிபிடித்தனவாய், அதிகமாக நொண்டு வனவாய், மெலிவினல் மூளை வறண்டனவாய் பயித்தியம் பிடித்தனவாய், குருடாய், ஒற் றைக் கண் பொட்டையாய், மாமிசத்தைக் கெடுத்து விடக்கூடிய வியாதி உள்ளனவாய் இருத்தல் ஆகாது.

ஹஜ்ஜு பெருநாளில் சூரியோதயமாகி இரண்டு ரக்க அத்துத் தொழுது இரண்டு குத்பா ஓதுவதற்கு எவ்வளவு நேரம் செல் லுமோ அவ்வளவு நேரம் சென்றதிலிருந்து அய்யாமுத்தஷ்ரீக்குகளின் கடைசி நாளில் சூரியாஸ்தனமாகும் வரை உல்ஹிய்யாக் கொடுக்கலாம். ஆனல், இந்த தினங் களுக்குள் வரும் இரவுகளில் உல்ஹிய்யாச் செய்வது மக்ராஹு. இந்த உல்ஹிய்யா பிராணியின் மாமிசத்தில் கொஞ்சமாயினும் குறைந்தது ஒரு பக்கீருக்காவது ஸதக்கா கொடுப்பது வாஜிபு. இந்தப் பிராணிகளின் ஈரல், குலை ஆகியவைகளைக் கொடுத்தால், அது மாமிசத்தைக் கொடுத்ததாக ஆகாது.

அதன் மாமிசத்தைச் சமைத்துப் பக்குவப் படுத்திக் கொடுப்பதும் கூடாது. உல்ஹிய் யாச் செய்யப்பட்ட பிராணியின் தோலை ஸதக்காச் செய்வது மேல். ஆனல், அதைத் தன் உபயோகத்தில் வைத்துக்கொள்ள விரும்பின், அதனல் செருப்பு முதலியன தைத்து உபயோகித்துக் கொள்ளலாம். அன்றி வேறு சாமான்களாகச் செய்து அவைகளை வாடகைக்குக் கொடுக்கக்கூடாது. உல்ஹிய்யாக் கொடுப்பவர்கள், துல்ஹஜ்ஜு மாதம் முதல் தேதியிலிருந்து உல்ஹிய்யாக் கொடுக்கும் வரை க்ஷவரம் செய்வித்துக் கொள்ளாமலும், நகம் வெட்டிக்கொள்ளாம லும் யிருத்தலும், தன் கையினல் உல்ஹிய்யா வை அறுப்பதும், வேருெருவரை அறுக்கும்

படி செய்தால் அறுக்கும்போது கூட இருப்பதும் சுன்னத்து. உல்ஹிய்யாக் கொடுக்கப்பட்ட பிராணியிலுள்ள எதையும், தோலையும் விற்பனை செய்வதும், அதை அறுப்பவர்களுக்குக் கூலியாகக் கொடுப்பதும், காபிருக்குக் கொடுப்பதும் ஜாயிஸல்ல.

ஈதுல் அல்ஹா

உலக முஸ்லிம்கள் கொண்டாடும் மார்க்க சம்பந்தமான திருநாட்களில், றமலான் மாத நோன்புக்குப் பின்கொண்டாடும் ஈதுல்பித்ரு பெருநாள் ஒன்று; மற்றென்றே முஸ்லிம்கள் தங்கள் உடல், பொருள், ஆவி முதலிய அனைத்தையும் அல்லாஹ்விற்காக அர்ப்பணம் செய்து அவன் கட்டளைப்படி நடக்கவேண்டும் என்பதை ஞாபக மூட்டுவதற்காக துல்ஹஜ்ஜு மீ 10௨ யன்று கொண்டாடப்படும் ஹஜ்றத் இபுறுஹீம் அலைஹிஸ்ஸலா மவர்கள் செய்த தியாகங்களின் அடையாளமான ஈதுல் அல்ஹா. இது சமீபத்தில் நிகழவிருக்கிறது இது இரண்டாவது பெருநாளாகும், இப்பெருநாளின் முக்கிய நோக்கத்தை மேலே கூறியுள்ளோம். ஆதலால் அன்று செய்யவேண்டிய மதக் கிரியைகளைமட்டும் அடியில் விவரிப்பாம்.

பெருநாள் தொழுகைக்கு முன் நன்னீராடி, நன்மணம்பூசி, நேர்த்தியான உடை தரித்துக்கொள்வது முஸ்தஹப்பு. பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவதற்கு முன், நபில் தொழுகைகளை நிறைவேற்றலாகாது. பெருநாள் தொழுகை வாஜிபாவதற்கும் நிறைவேறுவதற்கும், குத்பா ஒன்றைத் தவிர ஜும்ஆத் தொழுகைக்குள்ள ஷர்த்துகளெல்லாம் உண்டு.

பெருநாள்தொழுகை இமாம் அபூஹனீபா (றஹ்) அவர்களிடத்தில் வாஜிபு. இமாம் முஹம்மத், அபூயூசுப் (ரஹ்) ஆகியவர்கள் சுன்னத்து என்று கூறியுள்ளர். சூரியோதயத்திற்குப் பின், சூரியன் ஒரு வல்லயப் பிரமாணத்திற்கு உயர்ந்ததிலிருந்து அடிசாய்வதற்குள், பெருநாள் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். இமாம், இரண்டு ரக்க அத்து தொழுவார், தக்பீர் தஹ்ரீமாகட்டி தனை ஓதிப் பின் மூன்று முறை தக்பீர் சொல்லி இரு முறை கையைத் தொங்கவிட்டு மூன்றும் முறை தொழுகையில் கட்டுவதுபோல் கைகளைக் கட்டிக்கொண்டு, கிரஅத் ஓதி, ருக்கூஉ, ஸுஜூது செய்வார்; இரண்டாவது ரக்க அத்தில், கிரஅத்துக்குப்பின், மூன்றுமுறை தக்பீர் சொல்லிக் கையை தொங்கவிட்டு நான்காவது தக்பீரில் ருக்கூஉ செய்து தொழுகையை நிறைவேற்றுவார்; இத் தொழுகையைத்தவற விட்டவர் தனித்துக் கலாச் செய்யலாகாது.

ஈதுல் அல்ஹா பெருநாளன்று தொழுகை முடியும்வரை நகரவாசிகள் சாப்பிடாமலிருப்பது முஸ்தஹப்பு. தொழுகைக்குச் செல்லும்போது, வழியில் இரைந்து தக்பீர் ஓதுவது முஸ்தஹப்பு.

துல்ஹஜ்ஜு மாதம் 9 ந் தேதியி லிருந்து 13-ந் தேதி வரையுள்ள 5 தினங்களுக்கும் "அய்யா முத்தஷ்ரீக்'' என்று பெயர். இத் தினங்களில், முதல் நாள் அதாவது துல்ஹஜ்ஜு மாதம் 9 ந் காலை பஜ்றுதொழுகையிலிருந்து கடைசிநாள் அதாவது 13 ந் தேதி அசர் தொழுகை முடியவுள்ள 23 நேரத்து பர்லு தொழுகைகளுக்குப்பின், தக்பீர் ஓதுவது இமாம் முக்ததீ ஆகிய இருவர்பேரிலும் வாஜிபாகும். தொழுகை முடிந்தவுடன் இமாம் முக்ததீ ஆகிய யாவரும் சேர்ந்து தக்பீர் ஓதவேண்டும். தனியே தொழுபவர்களுக்கும் முஸாபிர்களுக்கும் வாஜிபல்ல.

ஆனல் முஸாபிரானவன் முகீமான இமாமைப் பின்பற்றித்தொழுதால், அப்பொழுது தக்பீர் சொல்லவேண்டும். இமாம் மறதியாகத் தக்பீர் சொல்லாம லிருந்துவிட்டாலும் அவரைப் பின்பற்றித் தொழுதவர்கள் தக்பீர் சொல்லவேண்டும். தக்பீர் சொல்லும் விதம்:—அல்லாஹு அக்பர் அல்லாஹு

அக்பர் லாஇலாஹ இல்லல்லாஹு அல் லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வலில் லாஹில்ஹம்து.

(ஷாபி ஈ மத்ஹபுப்பிரகாரம்)

ஆக்கில் பாலி கானவர்களுக்கு பெருநாள் தொழுகை சுன்னத்துமுஅக்கதா. சூரியோத யத்திலிருந்து ஜவாலுடைய நேரம் வரை தொழலாம் ஆனால், ஒரு வல்லயப் பிரமா ணம் சூரியன் உயரும்வரை தாமதித்துத் தொழுவது சுன்னத்து. தொழுகையை ஜமா அத்தாகத் தொழுதல், மஸ்ஜிதில் தொழுதல், பெருநாள் இரவில் இறைவனுக்கு இபாதத் துச்செய்து நித்திரை ஒழித்திருத்தல், பெரு நாள் இரவில் பாதி இரவுக்குப் பின் சிறியோர் பெரியோர், ஆண், பெண் யாவரும், நீராடி, நல்ல உடை உடுத்தி, மணம்பூசுதல், கதீ பல்லாதவர்கள் காலையிலேயே தொழுமிடத் திற்கு வந்து சேருதல், தொழுகைக்குப் போகும்போது இயன்றவர்கள் நடந்து செல் லுதல், தொழுகை முடிந்து வரும்போது வேறு பாதையில் நடந்தாகிலும் அல்லது வாகனத்திலாகிலும் வருதல், ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைக்குப் பின் உல்ஹிய் யாக் கொடுக்கவேண்டியதிருப்பதால் அந்தத் தொழுகையை தாமதப்படுத்தாமல் முன்ன தாகவே தொழுதல், ஹஜ்ஜு பெருநாள் தொழுகைக்கு முன் உணவருந்தாமலிருந்து தொழுகைக்குப்பின் உணவருந்துதல் அதி லும் உல்ஹியா பிராணியின் ஈரலை புசித்தல் சுன்னத்து.

பெருநாள் தொழுகையில் முதல் ரக்கஅத் தில் தக்பீர்தஹ்ரீமாவுக்குப் பின், வஜ்ஜஹ்து ஓதி, தக்பீர் தஹ்ரீமாவைப்போல் ஏழுமுறை தக்பீர் கட்டவேண்டும். பின்பு அஊது கிர அத் ஓதி, ருக்கூஉ ஸுஜூது முதலியன செய்யவேண்டும். இரண்டாவது ரக்கஅத்தில் தக்பீர் சொல்லி, எழும்பியபின், ஐந்து முறை தக்பீர் கட்டவேண்டும். இந்தத் தக்பீரு களுக்கு இடையில், "ஸுப்ஹானல்லாஹி வல்ஹம் துலில்லாஹி வலாஇலாஹ இல்லல் லாஹு வல்லாஹு அக்பர்" (அதாவது:— அல்லாஹு த ஆலாவைத் தூய்மையாக்கி வைக்கிறேன். இன்னும் புகழ் அனைத்தும் அல்ஹாவுக்கே உரியன. இன்னும் வணக்கத் திற்குரிய நாயன் அல்லாஹு தஆலாவைத் தவிர வேறு யாருமில்லை. இன்னும் அல்லாஹ் மிகப் பெரியவன்) என்பதை, நெஞ்சுக்குக்கீழ் கையை வைத்துக்கொண்டு மெதுவாக ஓதவேண்டும்.

இந்தத் தக்பீர்களை இமாம் குறைத்துக் கொண்டால், அவரைப் பின்பற்றித் தொழுப வர்களும் குறைத்துக் கொள்வது சுன்னத்து. இமாம் அதிகப்படுத்தினால், அவரைப்பின் பற் றித் தொழுவோர் அதிகப் படுத்தக்கூடாது, ஒவ்வொரு ரக்கஅத்திலும் மும்மூன்று தக்பீர் கட்டும்படியான ஹனபிமதுஹபுக்காரர்களை ஷாபிஈமத்ஹபுக்காரர்கள் பின்பற்றித் தொழு தால், ஹனபி இமாமைப்போல் மூன்று தக் பீர்கட்டிக்கொள்ளலாம். அதைப்பார்க்கிலும் அதிகமாக்கவேண்டியதில்லை. துல்ஹஜ்ஜுமீ 9வயாகிய அரபாவுடைய நாள் ஸுப்ஹுவி லிருந்து அய்யா முத்தஷ்ரீக்கின் கடைசி நாளாகிய 13வ அஸர் முடியத்தொழும் தொழுகையாவற்றிலும் அதாவது பர்ளு, நபில், அதா, கலா, ஜனஸாத் தொழுகைஆகிய யாவற்றிற்குப் பின்னும், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் லாஇலாஹ இல்லல்லாஹு அல்லாஹு அக் பர் அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து என்று தக்பீர்சொல்வது சுன்னத்து.

ஆனால் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக் பர் அல்லாஹு அக்பர், லாஇலாஹ இல்லல் லாஹு வல்லாஹு அக்பர். அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்மது. அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்கபீரா, வல்ஹம் துலில்லாஹி கதீரா, வஸுப்ஹா னல்லாஹி புக்ரத்தன் வஅஸீலா, லாஇலாஹ இல்லல் லாஹு வலாநஃபுது இல்லா இய்யாஹு, முக்லிஸீன லஹுத்தீன்வலௌகரிஹல்காபி றூன். லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தா, வஸதகவஅதா, வநஸர அப்தா, வஅஸ்ஸ ஜுன்தா, வஹஸமல் அஹ்ஸாப வஹ்தா, லாஇ லாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து" என்று தக்பீர் ஓதுவது உவக்கப்பட்ட தாகும்.

சிறுபான்மையாரின் உரிமை

அரசியலிலே தக்க பாதுகாப்பு வேண்டும் என்பது முஸ்லிம்களின் கட்சி. அது தேசியக் கொள்கைக்கு விரோதம் என்பர் காங்கிரஸ்காரர். இதற்குப் பதிலாக, ஜனப் மலிக் முஹம்மது அப்துல் கய்யூம் ஸாஹிப் (பாரிஸ்டர்) என்பார் டெய்லி கிரானிகல் பத்திரிகையில் ஒரு கட்டுரை வரைந்திருக்கிறார். அதன் முக்கிய சாரத்தைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். [ப-ர்]

உலகில் இந்திய முஸ்லிம்கள் மாத்திரம் வகுப்பு வாரிப் பிரதி நிதித்துவம் வேண்டுமென்கின்றனர்; இது சிறு பிள்ளைத்தனமாகும் என நேரு ரிப்போர்ட்டை ஆதரித்தோர் கூறுவர். இவ்விதம் சிறுபான்மையினருக்கு வகுப்பு வாரிப் பிரதிநிதித்வம் அளித்தல் இந்தியாவுக்கு நன்மை பயப்பதன்றுஎன்போர் கீழே காணும் விவரத்தை நோக்குவாராக. பொருளாதாரம், நாகரிகம் கல்வி இவற்றில் சிறந்த தேசங்களிலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அமுலில் உளது; நன்மையும் பயக்கின்றது. உதாரணமாக ஸ்விட்ஜர்லந்து தேசத்தை எடுத்துக்கொள்வோம். இது ஐரோப்பாவிலுள்ள ஒரு தேசம். தவிர, முன்னேற்றமும் நாகரிகமும் அடைந்த தேசங்களுள் அதுவும் ஒன்று. அத்தேச மக்கள் ஒரே ஜாதியினர் அல்லர். ஜெர்மானியர், பிரஞ்சுக்காரர், இத்தாலியர் ஆகிய பிரிவினரும் அங்கே வசிக்கின்றனர்.

ஸ்விட்ஜர்லந்தில் குடியரசு நடக்கின்றது. ஜனங்களில் பெரும்பாலார் ஜெர்மானியர். அவர்களுக்கு அடுத்தபடியாக பிரஞ்சுக்காரர்; அங்குள்ள இத்தாலியர் சிறுபான்மையினராவர். அத்தேசத்தின் உத்தர மாகாணத்தில் ஜர்மன் வம்சத்தினர் வாசஞ்செய்கின்றனர். இவர்கள் பாஷை, நாகரிகம் பழக்க வழக்கம் முதலிய யாவும் ஜெர்மானியரைப் போன்றனவை. அவ்வாறிருந்தும் அவர்களின் ஸ்தல சுய ஆட்சி சபையில் சிறுபான்மையோருக்குத் தகுந்த பிரதிநிதித்வம் உண்டு. தக்ஷிணமாகாணத்தில் இரு சமூகத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்க விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள. ஏனெனில், பிரான்சு தேசத்திற்கு அடுத்துள்ள மாகாணத்தில் பிரஞ்சுக்காரர்களின் வாழ்க்கை முறையும், பழக்க வழக்கமும் கையாளப்படுகின்றன. கிழக்கிலும், தென்கிழக்கிலும் உள்ளோருக்கு இத்தாலியரின் வாழ்க்கை முறையில் அதிக சம்பந்தமுள.

ஸ்விட்ஜர்லந்தின் அரசியல் திட்டத்திலுள்ள ஒரு விஷயம் இந்தியாவுக்கு முற்றிலும் பொருந்தும். அத்தேச மத்திய சட்ட சபையின் அங்கத்தினர் அனைவரும் ஜெர்மன், பிரஞ்சு, இத்தாலி ஆகிய மூன்று பாஷைகளையும் அறிந்திருக்கவேண்டும் அவைகளை அறியாதார் தெரிந்தெடுக்கப்பட முடியாது. தவிர, மந்திரி சபையில் ஜெர்மானியருக்கும், பிரஞ்சுக்காரருக்கும் சமஉரிமை உளது. ஜெர்மானியர் நூற்றுக்கு 70 பேராயின், பிரஞ்சுக்காரர் நூற்றுக்கு 23 பேராவர். வார்சேல்ஸ் உடன்படிக்கைக்குப் பின் ஜெர்மனியரல்லாத அநேக ஜனங்கள் ஜெர்மன் தேசத்தை விட்டு நீக்கப்பட்டனர். ஆயினும், இப்பொழுது ஜெர்மனியின் அரசியல் திட்டத்தில் ஜெர்மனியரல்லாத சிறுபான்மை ஜனங்களின் உரிமைகளைக் காக்கத் தகுந்த சட்ட திட்டங்கள் காணப்படும். பெரும்பான்மையரான ஜெர்மானியருக்குள் ஐக்கியப்படின் தங்கள் சமூக உரிமைகள் பாதுகாக்கப்படமாட்டா என்ற பயமுள்ளோருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுளது என்று ஜெர்மன் குடியரசுச் சட்டத்தின் 22-வது விதிகூறும்.

மகா யுத்தத்திற்கு முன்னிருந்த ஆஸ்டிரியா ஹங்கேரியின் அரசாங்கத்தில் சிறுபான்மையினரின் பிரதி நிதித்துவ உரிமை மிகவும் தெளிவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. போஸ்னியாவிலுள்ள முஸ்லிம்கள், ஹங்கேரியர்கள். ஸர்வியர்கள் இவர்களின் பிரதி நிதித்துவத்தைக் காப்பதற்காக ஆஸ்டிரிய ஹங்கேரியன் அரசாங்க

மத்தியசபையில் விசேஷ ஏற்பாடுகள் உண்டு. இன்றும் அத்தேச அரசியல் சட்டத்தின் 135-வது விதியோ, சிறுபான்மையினரின் உரிமைக்கு ஜாமீனாகும். அதற்குச் சிறிது கிழக்கேயுள்ள, யுகோஸ்லாவியாவிற்கு வந்தால், அங்கு ஸர்வியர், போஸ்னியர் ஆகியவர்களின் உரிமைகளைக் காப்பதற்கு விதிகள் உள. ஆனால், யுகோஸ்லாவியாவில் முஸ்லிம்களின் ஜனத்தொகைக்கு ஏற்றவாறு அவர்களுக்கு பிரதிநிதித்வம் கொடுக்கப்படவில்லை. எனினும் அதன் காரணமாக அங்கு எவ்வித ராஜீயத் தடையும் ஏற்படவில்லை. ஆனால், மதத்துவேஷம் இருந்து வருகிறது. இதைத் தவிர மற்றொரு குடியரசாங்கத்தில் ஜெர்மனியரும் இதர சமூகத்தவரும் சேர்ந்திருப்பதால் அவர்களுக்கு விசேஷ பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுளது.

துருக்கி அரசாங்கத்தில் மகாயுத்தத்திற்கு முன் இதே முறையின்படிதான் அரசியல் நடந்து வந்தது. ஷாம்தேசத்திலுள்ள லப்னான் என்ற பிரதேசத்தில் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையினர். ஆதலால், அந்தப் பிரதேசத்தைக் கிறிஸ்தவ மாகாணமாகப் பிரித்து, அம்மாகாணத்தின் கவர்னர் சபையிலும் மந்திரி சபையிலும் கிறிஸ்தவர்களே நியமிக்கப்பட்டு வந்தனர்.

இந்த உதாரணங்களினால் புலப்படுவது என்ன? இந்திய முஸ்லிம்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பது உலக சரித்திரத்திலேயே இல்லாத விஷயமன்று. நாகரிகத்தில் நனி சிறந்த அரசாங்கங்களில் இல்லாத உரிமையும் அன்றாம். கல்வி யபிவிருத்தியினால், சமூக ஐக்கியத்தினால் சிறுபான்மையினர் திருப்தியடைந்து, தங்களின் பாதுகாப்பிற்கு விசேஷ திட்டம் வேண்டியதில்லை எனக் கருதி இவ்வுரிமையைவிட்டுக் கொடுத்துவிடுவர் என்று பலர் சொல்லலாம். ஆனால், சிறுபான்மையினரின் உரிமையை ஒப்புக்கொள்ளாதிருத்தல் மிகவும் ஆபத்தாகும்; அநியாயமுமாம். குடியரசாட்சி திட்டத்தின் அஸ்திவாரம் பொதுத் தொகுதியின் பேரிலேயே ஏற்படவேண்டும். ஆதலால், இதைப்பற்றிய முடிவைச் சிறுபான்மையினரிடமே ஒப்புவித்துவிடுவது தான் மிகவும் நலமாகும். அவர்கள் தங்கள் உரிமையைப் பாதுகாக்க வேண்டிய அவசியமிருப்பதாகக் கருதினால் அதைப் பாதுகாத்துக் கொள்ளட்டும்.

இஸ்லாமும் மேனாட்டு உடையும்

(மௌலானா அப்துஸ் ஸலாம் நதவீ எழுதியது)

(141-ம் பக்கத் தொடர்ச்சி)

அஜமிகளுக்குச் சொந்தமான சமூகஉடைகளாகிய பட்டு முதலியவைகளை அணியவேண்டாமென நாயகமவர்கள் விலக்கியதற்குக் காரணம் யாது? என்ற வினாஇனி ஏற்படும். இவைகளை அணியக்கூடாது என்பதற்குள்ள காரணங்களை ஹதீதுகளில் கூறவில்லை. ஆயினும் அவைகள் ஹறாம் என விலக்கப் பெற்றபின் அவைகள் விலக்கப்பெற்றதன் காரணம்யாது அந்தக்காரணம் இப்பொழுது இருக்கிறதா, இல்லையா என்று கவனிக்கவேண்டியதில்லை என ஷாஹ்வலியுல்லா சாகிப் அவர்கள் தமது ஹுஜ்ஜத்துல்லாஹில் பாலிஙாவில் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, இத்தகைய உடைகளை மறைவான இடத்தில் அணிந்தாலும் சரி அது குற்றம் தான்.

ஹஜ்றத் உமர் (ரலி) அவர்கள் நாயகமவர்கள் பட்டுடைவாங்கி ஜும்ஆன்றும், புறநாட்டுத் தூதுவர்கள் வரும்போதும் அணிந்துகொள்ளுமாறு நாயகமவர்களை வேண்டிக்கொண்டதற்கு நாயகமவர்கள் கூறிய பதிலை நீங்கள் கவனிக்கவேண்டும். நபிகள் நாயகமவர்களே ஹஜ்றத் உமர் அவர்களுக்கும் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களுக்கும் இதரஸஹாபிகளுக்கும் இம்மாதிரி உடைகளை அளித்திருக்

கிறார்களாயினும், அவைகளை அணிய அனுமதிக்கவில்லை. சிலசமயங்களில் நாயகமவர்களே இந்த உடைகளை அணிந்துவிட்டு உடனே அவைகளை அப்புறப்படுத்தியதுடன் இவைகளை அணியவேண்டாம் என ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் கூறியதாகக் கூறியிருக்கிறார்கள். இவைகளை கவனிக்கும்போது, அவ்வஸ்துக்கள் அசல்ஹறாம் என்பதை அறிவிப்பதே நாயகமவர்களின் கருத்தாகும். அவ்வாறிருந்தும் நாயகமவர்கள் சந்நியாசங் கொள்ளவில்லை. மேலும், சில சமயங்களில் விலையுயர்ந்த உடையையு மணிந்திருக்கிறார்கள்.

நேர்த்தியான உடையணிவதும், நேர்த்தியான பாதரட்சை யணிவதும் தற்பெருமையைச் சேர்ந்தன அல்லவா? என நாயகமவர்களிடம் கேட்டதற்கு அவர்கள் இன்னல்லாஹ ஜமீலுன் யுஹிப்புல் ஜமால (அல்லாஹ் அழகானவன் அழகைப் பிரியம்வைக்கிறான்) என்று பதில்கூறி இருக்கிறார்கள். ஆகவே, மற்றவர்களைக் கேவலப்படுத்த வேண்டுமென்று செய்வதற்குத்தான் தற்பெருமை என்று சொல்லப்படுகிறது. ஸஹாபிகளில் பணக்காரர்களாக இருந்தவர்கள் சாமான்ய உடை அணிந்திருப்பதை நாயகமவர்கள் பார்த்தால், "நிச்சயமாக அல்லாஹ் தன்-அடியாருக்கு அளித்த நிஃமத்தின் பலன் அடியாரிடமிருப்பதைக் காணவிரும்புகிறான்" எனக் கூறுவார்கள். பார்ப்பதற்குக் கேவலமான நிலையிலுள்ள ஜனங்களைக்கண்டால், இவர்களுக்குத் தலைமயிரைச் சீவுவதற்குக்கூட சாமான் கிடைக்கவில்லையா எனக் கூறுவார்கள். நாயகமவர்கள் இவ்வாறு கூறியிருப்பதைக் கவனிக்கையில் விலைமதிப்புள்ள உடைகளே உதவாது என்பதல்லவென்றும் குறிப்பிட்ட சில சந்தர்ப்பத்தில் மாத்திரம் விசேஷ காரணத்தை ஒட்டி விலைமதிப்புள்ள உடைகள் வெறுக்கப்படுகின்றனவென்றும் தெரியவருகிறது. ஆனால் நடுத்தரமான விலையுள்ள உடைகளில் எவ்விதத்தடையுமில்லை. நடுத்தர உடை அணிவது நாகரிகத்திற்கும் கண்ணியத்திற்கும் காரணமாகிறது. சிலசமயங்களில் அவ்வாறு அணியாதிருப்பது ஆட்சேபணைக்கு இடமாகிறது. ஒருதரம் அப்துல் கரீம் என்பவர் அபூஉமய்யா அபுல் ஆலியா என்பவரைக் காணவந்தபோது, கம்பளியுடைதரித்திருந்தார். அப்பொழுது அவர் அப்துல்கரீமை நோக்கி "இது சந்நியாசிகள் அணியும் உடையாகும். ஒருவரைக்காணச் செல்வதென்றால், நேர்த்தியான உடைதரித்துச் செல்வதுதான் முஸ்லிம்களின் முறையாகும்" எனக்கூறினர் என அதபுல் முப்ரித் என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

ஈதுப்பெருநாட்களில் நல்ல உடை தரிப்பதும் இம்முறையை ஒட்டியதேயாகும். ஆனால், அநேக இடங்களில் இவ்வித உடையினால் தற்பெருமையும் அகங்காரமுமேற்படுகின்றன. இவ்விதமான தற்பெருமையையும் அகங்காரத்தையும் அகற்றுவதற்காகவே அதிக விலையுள்ளதும் அழகியதுமான உடைகளை அணிவதில் தடையேற்படுத்தப்பட்டிருக்கிறது என்று உணரவேண்டும். ஒருதரம் நபிகள் நாயகமவர்கள் சங்கைவான்களான ஸஹாபிகளின் குழுவிலிருக்கும்போது அவர்களை நோக்கி "தாழ்ந்த நிலைமையிலிருப்பது ஈமானின் ஒரு பாகம் என்பதைநீங்கள் கேட்டதில்லையா?" என நாயக மவர்கள் கூறியிருக்கிறார்கள். இவ்விதமான ஹதீதுகளை நேரில் கேட்டுத் தெரிந்த ஸஹாபிகளிற் சிலர் பிறிதொருகாலத்தில் பெரும் பெரும் பதவிகளில் அமர்ந்து செல்வமாக இருந்தபொழுதும் தாங்கள் மாத்திரம் தாழ்ந்த நிலையில் இருப்பதை விட்டுவிடவில்லை. எகிப்து தேசத்தில் கவர்னராக இருந்துகொண்டிருந்த தலாலப்னு உபைத் என்ற ஸஹாபியிடம் வேறு ஒரு ஸஹாபிவந்து "தாங்கள் என் இவ்வாறு பரக்கோலமாக இருக்கிறீர்கள்? தாங்கள் எகிப்து கவர்னராச்சுதே" என வினவினர். அதற்கவர் "நாங்கள் அதிகமாக சுகஜீவிகளாக இருப்பதை றஸூல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் விலக்கி இருக்கிறார்கள்" எனப் பதில் கூறினார்கள். நேர்த்தியான உடைகளில் தான் தற்பெருமை யுண்டாகிறது என்பதில்லை. சில சமயங்களில் பழையதும் கிழிந்ததும் அழுக்கானதுமான உடைகளை அணிவதிலும் தற்பெருமை ஏற்படுகிறது. ஒருவன் தன்னைத் துறவி எனக் காட்டிக்கொள்ள விரும்பினால், அவனுக்குக் கந்தை வஸ்திரத்தைத் தவிர வேறெதுவும் தக்க கருவியாக உதவுமோ? ஆகவே தற்பெருமை அகங்காரம் ஆகியஉடை இன்னதுதான் என இஸ்லாமிய ஷரீஅத்து கட்டுத்திட்டம் செய்யவில்லை.

இஃதிவ்வாறிருக்க, தற்காலம் நாகரிகம் என்றும் மேன்மையானதென்றும் கருதப்படுகிற ஐரோப்பிய உடைகளையே ஹதீதுகளில் பார்த்து எவ்வாறு தீர்ப்பு செய்வது என்ற கேள்வி பிறக்கிறது. பட்டுத் துணிகளுக்குப் பகிரங்கமான விலக்குவந்ததுபோல் இவ்வுடைகளுக்குப் பகிரங்கமான விலக்கெதுவுமில்லை. இன்னவிதமான உடைதான் இருக்க வேண்டுமென இஸ்லாமிய ஷரீஅத்து வரையறுத்துக் கூறவில்லை. ஆகவே ஐரோப்பிய உடையும் பிற சமூகத்தினரின் உடையும் இஸ்லாமிய ஷரீஅத்துப்படி தகாத உடை எனக் கூறுவதற்கில்லை. எனினும் ஐரோப்பியஉடை அணிதல் இஸ்லாமிய ஆசாரத்திற்கு உகந்ததா? அந்த உடைதரித்துக்கொண்டு தொழுகை, உலு முதலிய கடமைகளை இடையூறு இல்லாமல் நிறைவேற்ற முடியுமா என்று பார்க்கவேண்டும்.

பிற சமூகத்தினரின் உடையை மாத்திரம் ஒருவன் தரித்துக்கொண்டபோதிலும் நாளடைவில் அவனது உணர்ச்சியிலும் எண்ணத்திலும் கூட புற சமூகப்பான்மை உதித்து விடும். ஓர் இந்தியன் ஆங்கிலேய உடை தரித்து விடுவானாகில், பின்பு அவன் ஆங்கிலேயரைப்போலவே நடக்கவும், இருக்கவும், பேசவும், பழகவும் தொடங்குவான்; தன்னுடைய சமூகத்திற்குரிய நடையுடைபாவனை பழக்கவழக்கம் ஆகியவைகளையும் அவன் வெறுக்க ஆரம்பித்து ஆங்கிலேயரையே எல்லாவிஷயத்திலும் பின்பற்ற நினைப்பான். ஆதலால் தான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் "ஒரு சமூகத்தினரைப்போல் எவன் வேடந்தரிக்கிறானோ அவன் அச்சமூகத்தைச் சேர்ந்தவனே" எனக் கூறியுள்ளார்கள்.

அவ்வாறாயின் ஒரு சமூகத்தைச் சேர்ந்த ஒருவன் புதிதாக இஸ்லாம் மதத்தைத் தழுவினால் தன்னுடைய பூர்வீகமான உடைகளை முற்றிலும் புறக்கணித்து விடவேண்டுமா அல்லவா? என்றும், தேசத்தின் நிலையை மதித்து பூர்வீகமான இஸ்லாமிய முறையை விட்டுவிடலாமா? அல்லவா? என்றும் வினாக்கள் கிளம்பும். உதாரணமாக ஐரோப்பா முழுவதும் இன்று இஸ்லாம் மதத்தைத் தழுவுவதாக வைத்துக்கொள்வோம். அப்படியாயின் அவர்கள் தங்களது கோட், பட்லூன் ஹாட் முதலியவைகளைக்கழற்றி எறிந்து விடவேண்டுமா, அல்லது தங்களின் பழையமுறைப்படியே இருக்கலாமா? எனச் சந்தேகம் ஜனிக்கும்.

நபிகள் நாயகமவர்களின் காலத்தில் இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்கள் தங்களின் பூர்வீக உடைமுறையிலேயே இருந்ததாகவும் சொற்ப வித்தியாசம் மாத்திரம் ஏற்பட்டதாகவும் ஹதீதுகளிருந்து தெரிய வருகிறது உதாரணமாக நாயகமவர்கள் ஆரம்பக்காலத்தில் முஷ்ரிக்குகளை விட்டுவிலகி இருப்பதற்கு அறிகுறியாக தலைமயிரில் மாங்கு எடுக்கும் வழக்கத்தை விடுத்திருந்ததாகவும், பின்னர் மறுபடியும் அதை கைக்கொண்டிருந்ததாகவும் தெரிய வருகிறது "எங்களுக்கும் முஷ்ரிக்குகளுக்கு முள்ள வித்தியாசம் யாதெனில், நாங்கள் தொப்பிகளுக்குமேல் தலைப்பாகையும் கட்டிக் கொள்கிறோம் என்று மற்றொரு ஹதீது கூறுகிறது. எனினும், திர்மதி என்ற நூலில் இந்த ஹதீதின் இஸ்னாது சரியாக இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. எவ்வாறாயினும், நாயகமவர்கள் காலத்தில் முஸ்லிம்களுக்கும் முஷ்ரிக்குகளுக்கும் அதிகமான வித்தியாசமில்லாமல், சிறிது மாறுபாடு மாத்திரமே இருந்ததாக நாம் தெரிந்து கொள்கிறோம். ஆதலால், ஐரோப்பிய முஸ்லிம்கள் தங்கள் பூர்விக வழக்கமாகிய ஐரோப்பிய முறையிலும், இந்திய முஸ்லிம்கள் தங்கள் பூர்வீகமான உடையிலும் இருந்து கொள்ளலாம். தேசத்தின் சீதோஷ்ண நிலைமைக்கும் ராணுவ அவசியத்திற்கும் தகுந்தவிதமாக முஸ்லிம்களின் உடையில் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்திருக்கிறது ஆகவே, இஸ்லாத்திற் கெனப் பிரத்தியேகமான உடை நிர்ணயிக்கப்படவில்லை ஆதலால், நியாயமான காரணங்களையும் அவசியங்களையும் அனுசரித்து, முஸ்லிம்கள் தங்கள் உடையில் மாறுதல் செய்து கொள்ளலாம். ஆனால் அவ்வுடைகள் இஸ்லாமியக் கடமைகளாகிய தொழுகை, உலு முதலிய அனுஷ்டானங்களுக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது; பெருமைக்காகவும் அழகுக்காகவும் நவீன உடை தரிக்கலாகாது, அவ்வுடைகளினால் ஷரீஅத்தில் கூறப்பட்ட படி மறைக்க வேண்டிய இடங்கள் மறைபட வேண்டும்.

ஆகவே, இத்தியாதி அவசியங்களைக் கவனிக்குமிடத்து, இந்தியாவிலுள்ள முஸ்லிம்

கள் லுங்கி, சட்டை, அங்கர்கா, கமீஷ், தொப்பி முதலியவைகளை எவ்விதக் கஷ்டமுமின்றி அணியலாம், ஆனால், ஹாட், பட்லூன் முதலியவைகளை அணியாமலிருக்க வேண்டும். ஏனெனில் இவைகளை அணிவதால் தொழுகை உலு முதலியவைகளுக்குச் சிறிது இடைஞ்சலேற்படும். நிக்கர் அணிவதால் ஷரீஅத்தில் கூறப்பட்டபடி உடலைச் சரியாக மறைத்துக் கொள்ள முடியாது. நம் தேசத்தின் நிலையை கவனிக்கில் இத்தகைய உடை அத்தியாவசியமாகவு மில்லை.

ஆனால் ஐரோப்பிய முஸ்லிம்கள் தங்கள் தேசநிலையை அனுசரித்து இவைகளை அணியலாம். ஆனால், இஸ்லாமிய ஷரீஅத்தின் அனுஷ்டானங்களுக்குப் பாதகமேற்படலாகாது. ஆடம்பரத்திற்காகவும் பெருமைக்காகவும் அவர்கள் அதை அணிவதாகவும் இருக்கலாகாது.

உஷ்ணப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்கள் குளிர்ச்சியான பிரதேசத்திற்குச் சென்றால் அவசியத்திற்குத் தக்கபடி தங்கள் பூர்வீக உடைகளுக்குப் பதிலாக காலத்திற் கேற்ற உடை அணிந்து கொள்ளலாம்.

நிருபசாரம்

ஆக்கூர் முஸ்லிம் மகாநாடு

மாயவரம் தாலூகா ஆக்கூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மத்ரஸாதாருஸ்ஸலாமின் கட்டிடத் திறப்புவிழாவும் முஸ்லிம் சங்கத்தின் 16 வது மகாநாடும் 27-4-30ல் நடைபெறுவதாகயிருந்தது அம்மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்த தலைவர்களில் சிலர்களுக்கு ஏற்பட்ட அசந்தர்ப்பத்தால் மகாநாடு 4-5-30 ஞாயிற்றுக் கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. மகாநாட்டிற்கு ஆலீஜனுப்கான் பஹதூர் மௌலானா மௌல்வீ ஜியாவுத்தீன் முஹம்மது சாஹிப் அவர்கள் (வேலூர் அரபிக் காலேஜின் பிரின்ஸ்பால்) தலைமை வகிப்பார்கள்.

அதுசமயம் ஆலீஜனுப் ஸவுக்கார் வி. அப்துல் ஹக்கீம் சாஹிப் பஹதூர் (சென்னை நகர ஷரீப்) அவர்களுக்கு தஞ்சை ஜில்லாவாசிகளின் சார்பாக ஓர் உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்படும்,

பிற்பகலில் நடைபெறும் முஸ்லிம் சங்க விழாவுக்கு மௌல்வி அஹ்மத்சயீத் சாஹிப் அவர்கள் (ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர்) அக்கிராசனம் வகிப்பார்கள்.

சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம்சங்கத்தின் அங்கத்தினர்களும் மற்றும் சங்கத்தின் முக்கியஸ்தர்களும் பிரபலஸ்தர்களும் அழைக்கப்பட்டிருக்கின்றனர். அன்பர்களனைவர்களும் விஜயம்செய்து மகா நாட்டை சிறப்பித்துத் தரும்படி கேட்டுக்கொள்வதாக வரவேற்பு கமிட்டி காரியதரிசி தெரிவிக்கின்றார்.

ஹாஜியாரின் இஸ்லாமிய பிரசாரம்

கரூர் தாலுக்காவைச்சார்ந்த பள்ளப்பட்டி வாசியும், திண்டுக்கல், மதுரை முதலியஇடங்களில் பிரபல ஜவுளிவியாபாரியும் மதாபிமானம் சமூகாபிமானம் ஆகியவைகள் ஒருங்கே அமைந்தவருமான ஜனுப்ஹாஜீ சி. சே. முஹம்மதுஇப்ராஹீம் ராவுத்தர் அவர்கள் இஸ்லாத்தின் முக்கிய ஐந்துகடமைகளில் ஒன்றாகிய ஹஜ்ஜுகடமையை சென்ற வருஷம் இறைவனருளால் நிறைவேற்றித் தமது தாய்நாட்டிற்குத் திரும்பியவிஷயம் யாவரும்மறிந்ததே. ஜனுப், ஹாஜியார் அவர்கள் ஹஜ்ஜுக்குச் சென்று வந்ததிலிருந்து தமதுவர்த்தகத்தில் வட்டியை அடியுடன் ஒழித்ததுடன் இதர ஜவுளி வியாபாரிகளுக்கும் மற்றவியாரிகளுக்கும் இஸ்லாத்தின் உண்மையை எடுத்து போதித்துவருவது போற்றத் தக்கதாகும். இப்பெரியாரின் முயற்சியால் இவ்வருஷம் பள்ளபட்டியிலிருந்து 27-3-30 ல் ஜனுப் தி. ம. வாப்புராவுத்தர் முதலியவர்களும், ஜனுப் ஹாஜியார் அவர்களின் சகோதர சகோதரிகளும் ஹஜ்ஜுக்குச் சென்றிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். எல்லாம் வல்லஇறைவன் ஜனுப்ஹாஜியார் அவர்களுக்கு சத்திய இஸ்லாமிய பிரசார முயற்சியில் வெற்றியைஅளித்து, நீண்டாயுளை

யும் திரேகசுகத்தையும் தந்தருளுவதுடன் ஹஜ்ஜுக்குக்குச் சென்றவர்களும் தங்கள் கடைமையை இனிது நிறைவேற்றி க்ஷேமமாகத் தாய்நாடு வந்துசேர அருள்புரிவானாக என கம்பம் இ. ம. நாகூர் கனிராவுத்தர் எழுதுகிறார்.

ஜனாப் அப்துர்ரஹ்மான் அம்பலம் அவர்களின் விஜயம்.

இரங்கோன் சோலிய முஸ்லிம் அசோசியேஷனின் ஜீவிய தலைவரும் பிரபல வியாபாரியும், சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தின் கௌரவ போஷகருமான ஆலீ ஜனாப் வி. மீ. அப்துர்ரஹ்மான் அம்பலம் அவர்கள் இரங்கூனிலிருந்து தமது தாய்நாடாகிய அபிராம நத்தத்திற்குச் செல்லும்பொருட்டு 7-4-30ம் தேதி சென்னைத் துறைமுகம் வந்து சேர்ந்தார். சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தினரும், ஸைபுல் இஸ்லாம் ஆசிரியரும் இதர பிரபலஸ்தர்களும் துறைமுகம் சென்று அவரை வரவேற்றனர். மறுநாள் 8ந்தேதியன்று ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தின் சார்பாக ஜனாப் அம்பலம் அவர்களுக்கும், அவரது சகாக்களுக்கும் நகரத்தின் இதர பிரபலஸ்தர்களுக்கும் ஷை சங்கக் காரியதரிசியான ஜனாப் மௌல்வி முஹம்மது அலீ சாகிபவர்கள் வீட்டில் இடைவேளை விருந்தளிக்கப்பட்டது. அன்று மாலை அரண்மனைக்காரன் தெருவிலுள்ள கோக்கலே மண்டபத்தில் அச்சங்கத்தின் சார்பாக உபசார விருந்தொன்று நடக்க, அதில் அவருக்கு ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. இதற்கு நகரத்திலுள்ள ஹிந்து முஸ்லிம் பிரபலஸ்தர்கள், உலமாக்கள் உத்தியோகஸ்தர்கள் சட்டசபை அங்கத்தினர்கள் உள்பட பலர் வந்திருந்தனர். சிற்றுண்டிக்குப் பின் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தலைவரும், வேலூர் மத்ரஸயே பாக்கியாத் ஸாலிஹாத்தின் நாஜிரும், மிர்மஜ்லிசுமான அஃலா ஹஜ்றத் கான்பகதூர் ஹாஜீ மௌலானா மௌல்வீ ஜியாவுத்தீன் முகம்மது சாகிப் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஒரு மகாநாடு நடந்தது. சங்கக் காரியதரிசியான ஜனாப் சதக்தம்பி மரைக்காயர் (கௌரவ பிரசிடென்ஸிமாஜிஸ்டிரேட்) ஜனாப் அம்பலம் அவர்களுக்கு ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுத்தார். ஜனாப் அம்பலம் அவர்கள் தக்க பதில் கூறி, சங்கத்திற்கு ஆயிரம் ரூபாய் நன்கொடை அளிப்பதாகவும், தாம் இரங்கோனுக்குத் திரும்பிச்சென்றபின் சங்கத்தின் முன்னேற்றத்திற்கு அதிக சிரத்தையுடன் வேலை செய்ய நிச்சயித்திருப்பதாகவும் கூறினார்கள். சென்னை நகர ஷரீபும் சங்க உபதலைவருமான ஆலீ ஜனாப் சவுக்கார் வி. அப்துல் ஹக்கீம் சாகிப் அவர்கள் விருந்தினரான அம்பலம் அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக நன்றி செலுத்திப் பேசினார். பின்பு ஸைபுல் இஸ்லாம் ஆசிரியரான மௌலானா மௌலவீ அவர்கள் சென்னை ஷரீப் அவர்களை ஆமோதித்துப் பேசுகையில், ஜனாப் அம்பலம் அவர்களின் பொது நல ஊழியத்தைப் பாராட்டிப் பேசியபின் மாலை 6-30 மணிக்குக் கூட்டம் கலைந்தது. பின்பு, அம்பலம் அவர்கள் அன்றிரவு 8-40 மணிக்கு போட்மெயிலில் சென்னையைவிட்டுப் பிரயாணமானார்கள் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தினர், ஸைபுல்இஸ்லாம் காரியாலயத்தினர், இதர பிரபலஸ்தர்கள் எழும்பூர் ஸ்டேஷனுக்குச் சென்று, அம்பலம் அவர்களை வழியனுப்பினர் என சங்க காரியதரிசி தெரிவிக்கிறார்.

இஸ்லாஹுல்அகாயித் சங்கம்

இச்சங்கத்தின் நிர்வாகக் கமிட்டி சென்னை அங்கப்பநாய்க்கன் தெரு 48 நெ. கட்டிடத்தில் 12-4-30 தேதி மாலை வைஸ்பிரசிடெண்ட் (ஸைபுல்இஸ்லாம் ஆசிரியர்) மௌலானா மௌல்வீ அஹ்மது ஸயீது சாகிப் அவர்கள் தலைமையில் கூடிற்று. சங்கத்தின் தலைவர் ஜனாப் அப்துல்கரீம் சாகிப் அவர்களின் மரணத்திற்காகச் சபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதாவும், மர்ஹூம் அவர்களின் குடும்பத்தினருக்கு அனுதாபம் காட்டுவதாகவும்தீர்மானம் செய்யப்பட்டது. பின்பு ஜனாப் மு. க. அஹ்மது ஸாலிஹ் ஆலிம் சாகிப் அவர்கள் சங்கத்திற்குத் தலைவராகவும், ஜனாப் ச. இ. சி. நூருத்தீன் சாஹிப், மௌலானா மௌல்வீ A. R. அப்துர்ரஹீம் சாஹிப் பாக்கவீ ஆகியவர்கள் நிர்வாக சபை அங்கத்தினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

ஜனாப்மர்ஹூம் அவர்கள் ஹக்கில் ஜனாப் ஹாபிஜ் ஹாஜி அ. செ. முஹிய்யத்தீன் சதக்கத்துல்லா சாகிப் அவர்களால் பாத்திஹா

ஓதப்பட்டு சபையின் நடவடிக்கைகள் முடிவடைந்தன.

மௌலா நிதி

இஸ்லாஹுல் ஆகாயித் சங்கத்தின் சபீர்கள் உத்தமபாளையம் மௌலாக்களின் பிரதேசத்தில் வேலை செய்து வருகிறார்களென்பது நேயர்கள் அறிந்ததே. அப்பிரதேசங்களுக்கு சங்கத்தின் டெபுடேஷன் சென்று மௌலா இஸ்லாம்களின் நிலைமைகளைப்பற்றிய விபரங்களடங்கிய ரிபோர்ட்டும் வெளிப்படுத்திற்று. அவ்விடம் மௌலாக்களின் காரியாதிகளை கவனிப்பதற்காக கம்பத்தில் இஷா ஆத்துல் இஸ்லாம் சங்கமும் நிருவப்பட்டது. இஸ்லாஹுல் அகாயித், ஹிபாஜத்துல் இஸ்லாம் ஆகிய சங்கங்கள் மூலமாகவும் மௌலா நிதிக்கு உதவும்படி பல வேண்டுகோள்களும் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தன. அவைகளைக் கவனித்து நஞ்சோதரர்கள் அடியிற்கண்ட தொகைகளை அனுப்பி உதவியிருக்கின்றார்கள் அவ்வாறு உதவிய கனவான்களுக்கு நாங்கள் நன்றி பாராட்டுகின்றோம். அல்லாஹு தஆலா அவர்களுக்கு நற்கூலி கொடுப்பானாகவும் மௌலா நிதிக்கு கீழ்காணும் விவரப்படி ஒரு அளவுதொகை கிடைத்தாலும் எதிர்பார்க்கப்பட்டிருந்தபடி அப்பண்டுக்கு தகுந்த உபகாரம் கிடைக்கவில்லையென்றே கூறலாம். அவ்வேழை மௌலாக்களுக்கு ஜக்காத்தொகைகளையும் கொடுக்கும்படி சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. ஜக்காத்துப்பணத்தை ஏழைகளுக்கு வாரிக்கொடுக்கும் கனவான்கள் ஏழை மௌலாக்களை ஞாபகித்திருப்பார்களாயின் ஒரு பெருந்தொகை அந்நிதிக்குச் சேர்ந்திருக்கலாம். இப்பவும் சந்தர்ப்பம் கழிந்துவிடவில்லை இன்றைக்கும் அப்பகுதியில் பலர் நம் சத்திய இஸ்லாத்தை தழுவிக்கொண்டே இருக்கின்றனர், தழுவதற்கு பலரும் எதிர்பார்த்துக்கொண்டுமிருக்கின்றனர். அவர்களை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஞாபகித்து அவர்களுக்கு தகுந்த உபகாரம்புரிய வேண்டுமாய் நம் சகோதரர்களைக் கேட்டுக் கொள்கிறோம் மௌலா நிதிக்கு அனுப்பட்ட தொகைகள் அவ்வப்போது "ஸைபுல் இஸ்லாம்" பத்திரிகையிலும் "ஹிபாஜத்துல் இஸ்லா"மிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை ஒருங்கே சேர்த்து இதன் கீழ் குறிப்பிடுகின்றோம். இவைகள் நம் சங்கத்தின் டெபுடேஷன் ரிப்போர்ட்டைக் கவனித்தும் நம் சபீர்களின் பிரசங்கத்தைக் கேட்டும் அனுப்பிக்கொடுத்த கனவான்களின் பெயர் நாமங்களாகும். கம்பம், உத்தமபாளையம், வண்டிப்பெரியார், கோம்பை, கூடலூர், புதுப்பட்டி முதலிய இடங்களில் தொகைகள் வசூலாகியும் வசூலாகிக்கொண்டு மிருக்கின்றன.

கீழ் குறிப்பிடும் தொகைகள் சில, நம் இஸ்லாஹுல் அகாயித் சங்க காரியதரிசி அவர்களுக்கும், மற்றுஞ் சில கம்பம் இஷா அத்துல் இஸ்லாம் சங்கத்திற்கு நேராகவும் அனுப்பப்பட்டுள.

விபரங்கள்.

கூத்தானல்லூர் ஹாஜி ஜ. மு. முகம்மது இஸ்மாயில் ருவுத்தர்	100	0	0
ஷெ யூர் அ. ம. அப்துல்லாஹ் சாஹிப்	50	0	0
மத்ராஸ் மு. அ. முகம்மது அலி சாஹிப் கம்பெனி	100	0	0
ஷெ யூர் சி. எச். கிஜுரு முகம்மது சாஹிப் கம்பெனி	25	0	0
ஷெ யூர் எஸ்.இ. எஸ். அப்துல் கரீம் & பிரதர்ஸ்	100	0	0
(இவைகள் ஏற்கனவேகம் "ஹிபாஜத்துல்இஸ்லா"மில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.)			
சிலோன் தலவாக்கொல்லை என். எ. நைனா முகம்மது சாஹிப்	10	0	0
சிலோன் திப்பிட்டி அசன் லெப்பை சாஹிப்	10	0	0
மு. லெ. அப்துர் றஹ்மான் சாயபு	5	0	0
ஆ. அ. மரைக்காயர்	2	8	0
த. ஆ. ஹாஜியார்	2	8	0
கிள்ளான் கோ. அ. பகீர் முகம்மது சாகிப்	10	0	0
ஆத்தூஸ் முஸ்லிப் ஜமாஅத்கள்	33	6	0
சூலபுரம் ஜமாஅத்தார்கள்	313	0	0
பள்ளபட்டி ஜமாஅத்தார்கள்	235	0	0
திண்டுக்கல் ஜமாஅத்தார்கள்	130	0	0
அறப்புக்கோட்டை லெ. அ. மு. அப்பாஸ் அண்டு கோ	100	0	0

இடைய கோட்டை முஸ்லிம் ஜமா அத்தார்கள்	100 0 0
கூடலூர் ஒ. டி. ஹாஜி செ. முகம்மது அலீ மரைக்காயர்	30 0 0
ரெங்கூன் எ. பி. என். அப்துல் ஜப்பார் அண்டு பிரதர்ஸ்	15 0 0
கீழக்கரை கே. டி. எம். டி. எம். அப்துல் கையூம் சாஹிப்	10 0 0
மஞ்சக்கொல்லை வைத்தியர்	10 0 0
தென்காசி முஸல்மான் ஆசிரியர் ...	1 12 0
ஆக ரூபா	1403 2 0

இப்படிக்கு காரியதரிசிகள்
இஸ்லாஹுல் அகாயித் சங்கம்

கம்பம் இஷா அத்துல் இஸ்லாம் சங்கத்தின் அனுதாபம்

இஸ்லாஹுல் அகாயித் சங்கத்தின் பிரசிடெண்டும் பிரபல வர்த்தகரும் இஷா அத்துல் இஸ்லாம் சங்கத்தின் அபிமானியும் நவ் முஸ்லிம்களின் முன்னேற்றத்தில் கவலையுமுள்ளவரான ஆலீ ஜனுப் எஸ். இ. எஸ். அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் மரணமடைந்ததற்காக அவர்கள் குடும்பத்திற்கு கம்பம் இஷா அத்துல் இஸ்லாம் சங்கம் அனுதாபத் தெரிவித்திருப்பதாக உதவி காரியதரிசி சி. என். காதிர் முகையதீன்ராவுத்தர் தெரிவிக்கிறார்.

சமாச்சார திரட்டு

சாரதா சட்ட மறுப்பு
டில்லி

டில்லியில் பிரபல வர்த்தகரான கலிலுர் ரஹ்மான் என்பவரின் புதல்வர் சுமார் 15 வயதுள்ள கலீகுர் ரஹ்மான் என்பவருக்கும் அவ்வூரில் காபில் அத்தார் என்ற வீதியில் வசிக்கும் ஹபிபுர் ரஹ்மானின் சுமார் 12 வயதுள்ள புத்திரிக்கும் ஏப்ரல் மாதம் 1தேதியன்று சாரதா சட்டத்தை மீறி விவாகம் நடைபெற்றது. பல பிரபலஸ்தர்கள் உள்பட வைபவத்திற்கு 25 ஆயிரம் பேர் பிரசன்னமாயிருந்தனர். அட்வகேட் ஷெய்கு முஹம்மது ஸித்தீக் என்பார் மணமகனுக்கும், அட்வகேட் பஜ்லுர் ரஹ்மான் சாகிப் என்பார் மணமகளுக்கும் வலியாக இருந்தனர். டில்லி ஜமியத்துல் உலமா சபை தலைவரான மௌலானா கிபாயத்துல்லா சாகிப் அவர்கள் காஜியாக இருந்து நிக்காஹ்வை நடத்தினர். ஷை சபை காரியதரிசி மௌலானா அஹ்மது ஸயீது சாகிப் அவர்கள் நிக்காஹு குத்பா ஓதினர். நிக்காஹ் பதிவு பத்திரத்தில் 500 பேர்களுக்கு மேல் சாக்ஷி கையெழுத்திட்டனர்.

கான்பூர்

கான்பூர் ஜாமி ஆ மஸ்ஜிதில் 12000 பேர்கள் கூடிய பெரிய கூட்டத்தில், ஜனுப் அப்துல் மாஜிதுல் காதிரி என்பார் சாரதாச் சட்டத்தை மீறி, பால்ய விவாகம் ஒன்றை நடத்திவைத்தார். பின் மௌலானா முஹம்மது அலீ சாகிப் அவர்கள் சாரதா சட்டத்தின் தீங்கையும் இஸ்லாமிய ஷரீ அத்தின் சட்டங்களின் மேன்மையையும்பற்றியும் நீண்ட பிரசங்கம் புரிந்தார். இவ்விவாகத்திற்கு மௌலானா முஹம்மது அலீ, மௌலானா மஜ்ஹருத்தின், மணமக்களின் பெற்றோர்கள், காஜி மௌலானா அப்துல் மஜித் ஆகியவர் சாக்ஷி கையெழுத்துப் போட்டு, இச்சட்டத்தை மீறியதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு மறுநாள் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் மனுக்கொடுத்தாகவும் தெரிகிறது.

பம்பாய்

பம்பாய் இஸ்லாம் மதப் பாதுகாப்பு கமிட்டியார் பால்ய விவாகம் செய்யப்படவேண்டுமென தீர்மானித்த படி இங்கு பல நிக்காஹ்கள் நடைபெறுகின்றன. சென்ற ஏப்ரல் மீ

8உ யன்று 11 வயதுள்ள முகம்மது யாகூப் என்பாருக்கு அப்துல் கனீ என்பவருடைய 8 வயதுள்ள குமாரத்திக்கும் விவாகம் நடந்தது. ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனர். பம்பாய் கிலாபத் பத்திரிகை ஆசிரியர் பத்ருல்ஹஸன் ஜலாலீ காஜியாக இருந்து விவாகத்தை நடத்திவைத்தார். மௌலானா ஷௌகத் அலீயும் மௌல்வீ ஹமீத் அஹ்மது சாகிபும் சாக்ஷிகளாக இருந்தனர். பம்பாய் இஸ்லாம் மதப் பாதுகாப்புக் கமிட்டித் தலைவர் மௌலானா அப்துர் ரஊப் அவர்கள் தலைமையில் நகர முக்கிய தெருக்களின் வழியே 50 ஆயிரம்பேர் கொண்ட பெரிய ஊர்வலமும் நடைபெற்றது.

சாரதா சட்டமறுப்புப் படை

டில்லி அமீனிய்யா மத்ரஸாவில் ஏப்ரில் மீ முதல் தேதி யன்று ஹஜ்ரத் மௌலானா குதாபக்ஷ் சாகிபவர்களின் தலைமையின் கீழ் அறபிமாணவர்களின் கூட்டம் ஒன்று கூடியது. சாரதாச் சட்ட மறுப்பிற்காக வாலண்டியர் படை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இப்படையில் சுமார் 180 பேர்கள் வரை சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் பலர் சேர்ந்து கொண்டிருக்கின்றனர். இப்படையிலுள்ளவர்கள் யாவரும் மௌல்வீகள்.

அமிர்தசரஸில் சாரதாச் சட்டத்தை மீறி பால்ய விவாகம் செய்து, இஸ்லாமிய ஷரீஅத்தின் மத உரிமையைக் காப்பதற்காக 28-3-30-ல் மகாநாடு கூட்டித் தீர்மானஞ் செய்ததுடன் சாரதா சட்ட மறுப்பிற்கும் ஏற்பாடாகி வருவதாகத் தெரிகிறது.

மர்வான் ஜில்லாவிலுள்ள மொஹ்மதுகள் 28-3-30-ல் மகாநாடு கூடி சாரதாச் சட்டத்தை அரசாங்கம் ஏற்படுத்தியதைக் கண்டித்துத் தீர்மானஞ் செய்ததுடன், அச்சட்டத்தை மீறி பால்ய விவாகங்களைச் செய்விக்கத் தொண்டர்படை திரட்டுவதாகத் தெரிய வருகிறது.

முஸ்லிம்களுக்குக் காங்கிரஸ் மகா சபை செய்த அநீதி

லாகூர் காங்கிரஸ் மகா சபையின் தீர்மானத்தை அனுசரித்து மகாத்மாகாந்தி சட்ட மறுப்புச் செய்வதைப்பற்றி அகில இந்திய கிலாபத் கமிட்டியின் காரியக்கமிட்டி விஷயங்களை நன்கு பரிசீலனை செய்து முஸ்லிம்களின் உரிமை விஷயத்தில் காங்கிரஸ் மகா சபை செய்த அநீதி, மகாத்மாகாந்தி முஸ்லிம்கள் விஷயத்தில் அலட்சிய புத்தி காட்டியது, முஸ்லிம்களின் உரிமைகளைப் புரக்கணிப்பது பற்றி ஹிந்து மகா சபையின் முயற்சி ஆகிய வைகளைப்பற்றி நீண்ட ஸ்டேட்மெண்ட் ஒன்றைப் புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறது.

அலிகார் முஸ்லிம் சர்வகலாசாலை

அலிகாரிலுள்ள முஸ்லிம் சர்வகலாசாலைக்கு ஹைதராபாத் சமஸ்தானத்தில் அடியிற் கண்டவர்கள் கீழ்க்கண்ட விபரப்படி நன்கொடை யளித்திருக்கின்றனர்:—

ஹைதராபாத் நிர்வாக சபைத் தலைவரும் திவானுமான ஹிஸ் எக்ஸலன்ஸீ மகாராஜா ஸர் கிஷன் பிரசாத் .... ரூ. 10000
ஷை நிர்வாக சபை அங்கத்தினர்
நவாப் லுத்புத் தௌலா .... ,, 10000
நவாப் மஹ்தி யார் ஜங் .... ,, 10000
நவாப் முஹிய்யத்தீன் யார் ஜங் .... ,, 1000
ஜனாப் ஹஸன் லத்தீப் ஸாஹிப் இஞ்சினீர் ... ,, 1000

இவைகளை அல்லாமல் ஹைதராபாத் நவாப் அவர்கள் ஷை சர்வ கலா சாலைக்கு மாதம் 1க்கு ரூ. 3000 சந்தாவாகக் கொடுப்பதாகவும், 10 லக்ஷம் ரூபாய் நன்கொடை கொடுப்பதாகவும் கூறி இருக்கிறார்கள்.

அலீ சகோதரர்கள் மீது அபாண்டம்

ராம்பூர் நவாபால் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள் அலீ சகோதரர்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டுவிட்டன என்றும், மௌலானா ஷௌகத் அலீக்கு அரசாங்கத்தினரால் அவருடைய பென்ஷன் தொகை கொடுக்கப்பட்டுவிட்டது என்றும், போபால் நவாபால் மௌலானா முகம்மது அலீக்கு மாதம் 1-க்கு ரூபாய் 800 உபகாரச்சம்பளம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்றும் ஹிந்துப் பத்திரிகைகள் கூறிய செய்திகள் ஆதாரமற்றவை என்றும் அவர்கள்பால் வேண்டுமென்றே கட்டிவிடப்பட்ட கதை என்றும் பஞ்சாப் பத்திரிகைகள் கூறுகின்றன.

பத்திரிகை விற்கும் இயந்திரம்.

ரெயில்வே ஸ்டேஷன்களில் கட்டணம் செலுத்தி பிளாட் பாரம் டிக்கட்டுகளை இயந்திரத்தில் எடுப்பதுபோல் இப்பொழுது ஜெர்மனியில் உபயோகிக்கப்படும் இயந்திரத்தில் பத்திரிகையின் கட்டணத்தை அதற்கான இடத்தில் போட்டு விடின் பத்திரிகை தானுகவெளியில்வரும்.

50 ஆயிரம் முஸ்லிம் தொண்டர்கள் தேவை.

தற்காலம் இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற அரசியல் நெருக்கடியிலும் இனிவரப்போகும் அரசியல் மாறுதலிலும் ஏற்படும் விஷயத்திலிருந்து இந்திய முஸ்லிம்களைக் காப்பாற்றுவதற்காகவும், மதப்பாதுகாப்பிற்காகவும் தொண்டுசெய்ய இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் 50 ஆயிரம் முஸ்லிம் தொண்டர்கள் தேவையென அகிலஇந்திய முஸ்லிம்மகாநாட்டின்காரியதரிசியும் இந்தியாசட்டசபை அங்கத்தினருமான மௌலானு ஷபிஃதாவூதி ஒர் அறிக்கைவிடுத்திருக்கிருர்.

காதியானிகளின் தோல்வி

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பின் எவரேனும் நபியாக வரமுடியுமா? என்பதைப்பற்றி ஸியால்கோட் ஜில்லாவைச்சேர்ந்த தஹ்னீ என்ற ஊரில் சில தினங்களுக்குமுன் காதியானிகளுக்கும் சுன்னத்து வல் ஜமா அத்து முஸ்லிம்களுக்கும் நேருக்கு நேராக விவாதம் நடந்தது. காதியானிகளால் நபிகள் நாயகத்திற்குப் பின்னும் நபியுண்டு என்ற தங்கள்வாதத்தை ருஜுப்படுத்த முடியவில்லை. சுன்னத்து வல் ஜமாஅத்து முஸ்லிம்கள் சார்பாக விவாதம்செய்த மௌல்வீசாகிப் நபிகள் நாயகம் அவர்களுக்குப்பின் யாரும் நபியாக வரமுடியாது என்றவாதத்தைத்தக்க ஆதாரத்துடன் ருஜுப்படுத்தினர் என அமிர்த சரஸ் பத்திரிகை கூறுகிறது.

நவாப் வீட்டு விவாகம்

தற்சமயம் போபாலில் நவாபாக இருக்கிற ஹமீதுல்லாகானின் சகோதரரின் புதல்வர் ஹபீபுல்லாகான் என்பவர் பைரோஸிபாய் என்ற பார்ஸி வகுப்புப் பெண்ணை ?-4-30ல் பூனுவில் விவாகம் செய்து கொண்டார். விவாகம் செய்வதற்கு 2 - மணி நேரத்திற்கு முன் மணமகள் இஸ்லாம் மதத்தைத் தழுவினள். இந்த விவாகத்திற்கு 25 முஸ்லிம்கள் சாக்ஷிகளாக இருந்தனர். 50 ஆயிரம் ரூபாய் மஹர் வைக்கப்பட்டது. விவாகம் முடிவதற்கு ஒருமணி நேரத்திற்குமுன்பு வரை இவ்விஷயம் யாருக்கும் தெரியாது. விவாகத்தின்போது மணமகளின் தந்தை சகோதரி ஆகியவர்களும் உடன் இருந்தனர். இவ் விவாகத்திற்கு போபால் நவாபும் அனுமதி கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

மஸ்ஜிதுக்குள் அறுக்கப்பட்ட பன்றி

சென்ற ஏப்ரல்மீ 1வ யன்று இஸ்லாம் கட் என்ற இடத்தில் அறுக்கப்பட்டு இரத்தம் வடிந்துகொண்டிருந்த பன்றி ஒன்று மஸ்ஜிதுக்குள் கொண்டுவந்து போடப்பட்டிருந்தது. இதனல் மஸ்ஜிதின் விரிப்புகளும் தரையும் அசுத்தமாகிவிட்டன. இச்சம்பவமானது முஸ்லிம்களுக்குள் அதிகப் பரபரப்பை உண்டாக்கிவிட்டது. ஆயினும் ஸ்தல அதிகாரிகளும், போலீஸ்சூபரின்டண்டெண்டும் முஸ்லிம்களை சாந்தப்படுத்தி இவ்விஷமம் செய்தவனைக் கண்டுபிடித்து தண்டிப்பதாகக் கூறினர்.

அப்கான் செய்திகள்.

புதிய காபல் நகர நிர்மாணத்திற்காக ஆப்கன் அரசர் காஜி நாதிர்ஷாஹ் அவர்கள் ஏழு லட்சம் ரூபாய் அனுமதித்திருக்கிருர். இப்புதிய நகரம் பழைய காபல் நகருக்கு ஐந்து மைல் தூரத்தில் உளது. இந்நிர்மாண வேலை ஒன்பதாண்டுகளாக நடைபெற்றுவருகிறது.

அப்கானிஸ்தானத்தில் முதன்முதலாக கூஷமனுக்கும் காந்தாரத்திற்கும் இடையே ரயில்பாதை போடப்படும். அதன்பின் தேசத்தின் பல பாகங்களிலும் ரயில் பாதை பரவும்.

காபல் நகர சபைக்கு அங்கத்தினர் தேர்தல் ஆரம்பமாகி இருக்கிறது. அதற்குப் போட்டியோ மிகப் பலம். தேர்தல் மூலம் நகர சபைக்கு அங்கத்தினர் போதல் இதுவே முதல் தடவை. அப்கானிஸ்தானத்தில் அரசியல் திருத்தம் ஏற்படப்போவதற்கு இதுவே முதல் படியாம்.

அய்யம் பேட்டை முஸ்லிம் கைத் தொழிற் கலாசாலே.

அய்யம் பேட்டையில் கைத்தொழிற் கலாசாலே ஏற்படுத்தி ஏழை முஸ்லிம்களுக்குத் தொழில் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும், அதன் மூலமாக முஸ்லிம்களின் வறுமைப்பிணியை நீக்க வேண்டுமென்றும், இதற்காக யாவரும் உதவிபுரிய வேண்டுமென்றும் அய்யம்பேட்டை வாசிகளான ரிட்டையர்ட் டிப்டி கலெக்டர் ஜனுப் அ. பீர் முகம்மது சாஹிப் முதலியவர்கள் துண்டுப் பிரசுரமொன்று வெளியிட்டிருக்கின்றனர்.

இத்தகைய கைத்தொழில் சாலேகள் ஏற்படுவதை நாம் வரவேற்பதுடன் அத்தியாவசிய மென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆயினும், அவர்கள் விடுத்த நோட்டீஸில் ஜக்காத் பணத்தை இதற்குக்கொடுக்க வேண்டும் என்று கூறுவதேபோல் எழுதப் பட்டிருக்கிறது. ஜக்காத் பணம் இவ்வினத்தில் செலவழிக்கப்படத் தகுந்ததல்ல வென்பதை அவர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம். (ப-ர்).

ஆராய்ச்சி மேடை

அஹ்லுஸ் ஸுன்னதிவல் ஜமா அத்தா? அல்லது அல் காதியானியத்தா?

மௌலவி A. A. அப்துல் கரீம் (பாக்கவீ) எழுதியது.

ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டவன் கண்ணில் கண்டதையெல்லாம் கையால் பற்றிக்கொண்டு கரையேறக் கருதுவான். தாருல் இஸ்லாம் பத்திராதிபரான பா. தாவூதுசா என்பாரும் அவ்வாறே தத்தளிக்கிறார்; தடுமாறுகிறார்; திகைக்கிறார். அவர் முன்னம் குலாம் அஹ்மதுல் காதியானியைப் பின்பற்றிய லாகூர் கோஷ்டியாரான அஹ்மதியாக்களின் கூற்றுக்களைப் பல்லவியாகப் பாடி வந்தார். அக்கூற்றுக்கள் நமது மார்க்கத்துக்கு முரணாகும் என்று உலமாக்கள் மறுத்தனர். அப்போது, அஹ்மதியாக்களின் கூற்றுக்களே சரியானவை; அன்னவர் சுன்னத்துவல் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களே, என்று பா. தா. சாதிக்கப் பார்த்தார். உடனே, அக்கொள்கைகள் சுன்னத்துவல் ஜமா அத்தார்களின் கொள்கைக்கு முற்றிலும் மாறானவை என்று தக்க மேற் கோள்களுடன் எடுத்துக் காட்டப்பட்டன.

பின்னர், வேறொரு சுன்னத்துவல் ஜமா அத்து எழுத வேண்டுமென்று பா. தா. வுக்குக் கவலே பிறந்தது. பிறக்கவே, அல்லாமா இப்னு தைமிய்யாவின் கூற்றுக்களே ஆதாரமாகக் கொண்டு பா. தா. வின் சகாபாடியான ஹாபிஸ் பாக்கவி என்பார் எழுதலானார். இப்னு தை மிய்யாவின் கொள்கைகளிலே பல நமது சன்மார்க்கத்திற்குச் சிறிதும் ஒவ்வா என நமது மார்க்க அன்பர் எடுத்துக்காட்டி அறிவு புகட்டினர். அது கண்டதும், உயிருடன் விளங்கக்கூடிய ஓர் மேதாவியின் சுன்னத்துவல் ஜமாஅத்தை எழுதி வரப்போவதாக அப்பாக்கவீ புகன்று, மௌலானா ஸையத் சுலேமான் சாஹிப் நத்வி அவர்களின் "ரிஸாலயே அஹ்லுஸ் ஸுன்னத்துவல் ஜமா அத்" என்ற நூலே மொழி பெயர்த்துப் பிரசுரித்து வருகிறார். அம்மொழி பெயர்ப்பின் மூன்றாவது வியாசம் 11-4-30-ல் தாருல் இஸ்லாத்திலே வெளிவந்துளது.

யாருடைய நூலே மொழி பெயர்ப்பினும் சரி, முதலாவதாக அது நமது சுத்த சத்திய சன்மார்க்கத்திற்கு ஒத்ததாக, இருத்தல் வேண்டும்; இரண்டாவதாகவோ, அந்நூலாசிரியரின் கருத்தைத் தழுவியே மொழி

பெயர்க்க வேண்டும். ஆனல் மொழி பெயர்ப்புவேலையில் முனைந்திருக்கும் ஹாபிஸ் பாக்கவீ என்பாரோ தப்பும் தவறுமாக, காதியானிக் கொள்கைக்கு ஒத்தவாறு மொழி பெயர்த்து வருகிறார். மௌலானா அவர்கள் அந்த ரிஸாலாவில், நரக லோகத்தைப்பற்றிக் கூறியுள்ள "காலிதன்" எனும் பதத்திற்கு "ஹமேஷா" எனும் பார்ஸி பதத்தை உபயோகித் திருக்கிறார். இதன் பொருள் நித்தியம், சதா, எப்பொழுது எனப்படும்.

அஹ்மதிய்யாக்களின் தலைவரானமுகம்மது அலீ M. A. L. L. B. எழுதிய குர்ஆன் வியாக்கியானத்தில், காலித், குலூத் எனும் பதங்களுக்கு ஜும்ஹூர் (பெரும்பாலான உலமாக்கள்) "ஹமேஷா" (சதா நித்தியம்) என்று பொருள் கொள்ளுகின்றனர். அது தவறு ஜமானயேதவீல் (நெடுங்காலம், நீடித்தகாலம்) என்று பொருள் கொள்ள வேண்டுமென்று எழுதியிருக்கிறார். இதை ஆதாரமாகக் கொண்டு நரகம் முடிவடைந்து விடும் என்று ஜும் ஹூர்களுடைய அபிப்பிராயத்திற்கு மாறாக வரைந்திருக்கிறார்.

மேலும், அல்லாஹ்வே இல்லைஎன்று வாதிக்கும் நாஸ்திகரும், கண்டதேகாட்சி கொண்டதேகோலம் என்று கூறும் தஹ்ரியாக்களும், அல்லாஹ்வை இணைவைத்து வணங்கும் முஷ்ரிக்குகளும், அவனுடைய கட்டளைக்கு முற்றிலும் மாறாக நடக்கும் காபிர்களும், அல்லாஹ்வுக்கு ஆள்மக்கள், பெண்மக்கள் உண்டென்று வாதிக்கும் யூதரும், ஏசுநாதரை அல்லாஹ்வின் குமாரர் என்று வாதாடும் கிறிஸ்தவரும், ஒருகாலத்தில் நரகத்தை விட்டு மீட்சிபெருவார்கள் என்ற தமது கொள்கைக்கு ஆதாரமாக முகமத் அலீ சாகிப் வரைந்திருக்கிறார். இதனைப்பின் பற்றியே தாவுத் சாவும் நரகத்திற்கு முடிவு உண்டு என்று துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டார் தமது மொழிபெயர்ப்பு நூல்களிலும் அக்கொள்கையையே வற்புறுத்தியிருக்கிறார்.

அத்தகைய கெட்டகொள்கையை முதன் முதல் தமிழகத்தில் வெளியிட்டது பா. தா. வே. அது மறுக்கப்பட்டுப் போயிற்று.

குலூத் எனும் பதத்திக்கு மௌலானா அவர்கள் 'ஹமேஷா' என்று தெளிவாக எழுதியிருந்தும், ஹாபிஸ்பாக்கவீ என்பார் காதியானிக் கொள்கைக்கு ஏற்ப நெடுங்காலம் என்று தப்பருத்தம் பண்ணி இவை சுன்னத்துவல்ஜமா அத்துக் கொள்கை என்று பொது ஜனங்கள் ஏமாறும்படி எழுதியிருக்கிறார். என்னே இவரின் சுன்னத்து வல்ஜமா அத்துக்கொள்கை பேஷ்! பேஷ்! தாருல்இஸ்லாம் பத்திரிகையிலும் பாக்கவீதானே எழுதியிருக்கிறார்என்று சிலர்நினைக்கக்கூடும் ஆனல் அப்பாக்கவீயோ பா. தா. வின் கொள்கைக்கு நேராக கருத்துக்களைப் புரட்டுவதைத் தொழிலாகக் கொண்டிருப்பவர் இதனை நேயர்கள் மறத்தல் ஆகாது.

காதியானிகளைப்போல் நரகம் முடிவடைந்துவிடும் என்றும் காபிர்கள் அதனைவிட்டு மீட்சிபெறுவர் என்றும் ஹாபிஸ் பாக்கவீ உண்மையாகவே நினைப்பாராயின், அதுசுன்னத்து வல் ஜமா அத்தார்களின் அபிப்பிராயந் தானு' இக்கொள்கைக்குத்தக்க ஆதாரத்துடன் அவர் விடைதரல் வேண்டும் பேரளவில்பாக்கவீ என்று எழுதிவருவதில் யாது பயன்? இதனை அவர் எண்ணிப்பார்த்து பாக்கவீஎனும் பட்டத்துக்கு ஏற்ப நடக்க வேண்டும் அன்றோ?

நன்கொடை.

கனம் விஜயன்அப்துற் றஹ்மான் அம்பலம் அவர்களுக்கு நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாரால் உபாசார விருந்து நடத்தப்பட்டவிபரத்தை மற்றோர் பக்கத்தில் காணலாம். ஜனப் அம்பலம் அவர்கள் பொது நலகாரியங்களில் உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகஞ் செய்யும் வீரபுருஷர் என்பது உலகறிந்தவிஷயம். அதற்கேற்ப நமது சங்கத்தின் நடவடிக்கைகளையும், அது செய்திருக்கும் சேவைகளையும், இனிசெய்யவேண்டியிருக்கும் அரும்பெறும் காரியங்களையும், அவர் உத்தேசித்து முன்கொடுத்த நன்கொடை அல்லாமல், அவர்களுக்கு நடைபெற்ற உபசாரவிருந்தின் போது தயாள சிந்தையோடு தருவதாக வாக்களித்த ரூ 1000 மும் அவர்களது ரெங்கூன் கடையிலிருந்து அனுப்பிக்கொடுத்து விட்டார்கள் அல்லாஹுதஆலா அவர்களுக்கு இதன் கூலியை பூர்ணமாகக் கொடுப்பானகவும். (ப-ர்.)

முஸ்லிம்களின் பேரூழியம்

உலகத்திலே முற்காலத்தில் மேல் நாட்டைவிட கீழ் தேசமானது வைத்திய சாஸ்திரத்தில் மிகவும் பிரபலமாக இருந்ததாகத் தெரிகிறது. கீழ்நாட்டினரால் தான் அழிந்துபோன சாஸ்திரங்களை பத்திரமாகக் காப்பாற்றி அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்ததாகவும் தெரிகிறது. பைசன்டைன் எனும் அரசாங்கம் நாலு ஐந்து நூற்றாண்டுகளில் ஆட்சிபுரிந்து வந்தது. அவ்வாட்சியை வெறுப்புற்ற சில வெறிபிடித்த கிறிஸ்தவர்களால் அலக்சாண்டிரியா என்னுமிடத்திலுள்ள பெரிய புத்தகசாலையானது நாசப்படுத்தப்பட்டுப் போயின. பல மேதாவிகள் கொலையுண்டு மாண்டனர்; மற்றும் சிலர்நாடு கடத்தப்பட்டனர்.

நாடு கடத்தப்பட்டவர்களில் கிரேக்கர், ஸிரியர், நெஸ்டோரியர் முதலிய பல ஜாதியினர்கள் பர்ஷியா தேசத்திற்கு வந்து குடியேறினர். அவர்கள் வெளி வரும்போது தங்களுடன் அங்கு மிகுதியிருந்த வைத்திய கிரந்தங்களையும் எடுத்துவந்து குஜிஸ்டான் மாகாணத்திலுள்ள ஜுண்டி—ஷாபர் என்னுமிடத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்து அச் சாஸ்திரத்தின் அருமை பெருமைகளை ஆராய்ச்சி செய்து அதை அபிவிருத்திக்குக் கொண்டுவந்தனர். அரேபிய வைத்தியம் அல்லது இஸ்லாமிய வைத்தியம் என்று சொல்லப்படும் அவ் வைத்திய சாஸ்திரம் அரபி பாஷையில் எழுதப்பட்டது. கிரேக்க பாஷைதான் அதற்கு ஆதியாகும். ஐரோப்பியர் இதன் மூலக்கிரந்தங்களைக் கொண்டு தான் அவர்கள் முன்னேற்ற மடைந்தனர். எழுநூறு வருஷங்களுக்கு முன்புதான் அச் சாஸ்திரமானது கிரேக்கபாஷையினின்று அரபிப் பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டது.

அக்காலத்தில் அரசாண்டுவந்த முஸ்லிம் அரசர்கள் பழையகாலத்து ஆசாரம், கல்வி, சாஸ்திரம் முதலியவைகளை ஆதரித்து வந்தவர்களானபடியால் எச் சாதியினரையும் சமமாகப் பாவித்து ஆதரித்துவந்தனர். ஆகையினால் அரபிப் பாஷையானது செழித்தோங்கி விளங்கியது. அதன் மூலமாக கணிதசாஸ்திரம், பூகோள சாஸ்திரம், இலக்கணம் முதலிய பற்பல சாஸ்திரங்களும் சிறந்து விளங்கின. கான்ஸ்டாண்டி நோபிலுள்ள தத்துவசாஸ்திரிகள் இத்தகையசாஸ்திரங்களைக் கண்டுபிடித்து எழுதச் சக்தியுடைய முஸ்லிம் ஆசிரியர்கள் இருக்கிறார்களா என்று ஆச்சரியப்பட்டனர். கிரேக்க வைத்திய சாஸ்திரங்களையும் மருந்துகளையும் ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பிறகு இவர்கள் தான் ஐரோப்பியரிடம் ஒப்படைத்து விட்டார்கள்,

அராபியர்கள் அதோடு நில்லாமல், பூதத்துவ சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், பீஜகணிதம் முதலிய பல சாஸ்திரங்களையும் கண்டு பிடித்து உலகமெங்கும் பரவச் செய்தனர், அவர்கள் தான் அவைகளுக்கு ஆதிகர்த்தராவர். வாசனைத்திரவியங்கள் செய்வதற்கும், பழவகை செடி கொடி முதலியவை பயிரிடுவதற்கும், நாகரிகம் இன்னதென்பதையும், தெருக்களில் விளக்கு முதலிய போடுவதையும் ஏற்படுத்தி பல அற்புதமான வேலைகளைச் செய்தனர். பலவித மருந்து வகையராக்கள் செய்யவும், ஷர்பத் முதலியவைகள் செய்யவும் ஏற்படுத்தியவர்கள் அவர்களே யாவர். பக்தாத் நகமரானது எட்டாவது நூற்றாண்டு முதல் 13 வது நூற்றாண்டு வரையில் கலைமகளின் இருப்பிடமாகவிளங்கியது. மொகலாயர், தார்த்தாரியர் முதலியவர்கள் படையெடுத்ததின் காரணமாக அரேபியர்களுடைய நாகரிகம் ஒருவாறு நசித்துப் போயிற்று. ஆயினும் தத்துவ சாஸ்திரங்கள் அழிந்து போகவில்லை. ஐரோப்பியர்கள் அக் கிரந்தங்களை யெல்லாம் லாட்டின் பாஷையில் மொழிபெயர்த்து அவைகளைக் கொள்ளைகொண்டு போய்விட்டனர். கிரேக்க பாஷையில் இருந்த வைத்திய சாஸ்திர புஸ்தகங்கள் போய்விட்டாலும், அராபிய பாஷையிலுள்ளவைகள் இருந்தமையால்

அவைகளின் உதவியைக்கொண்டு ஆங்காங்கு ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தி வைத்தியம்செய்து வந்தனர். கீழ்ப் பிரதேசத்திலும் அவற்றைப் பரவவும் செய்தனர். அரசாங்கத்தினரும் வைத்தியர்களை ஆதரித்து ஏராளமாகப் பணம் கொடுத்து உதவினர்.

கெய்ரோவில் அல் மன்சூர் ஆஸ்பத்திரி என்ற பெரிய ஆஸ்பத்திரி ஒன்று அமைத்து ஸ்திரீ, புருஷர், குழந்தை முதலிய சகலருக்கும் சகல வியாதிகளுக்கும் வைத்தியம் செய்து வந்தனர். சகலவிதமான செளகரியங்களும் அமைக்கப்பட்டிருந்தன கெய்ரோ; பக்தாத், திம்ஷக் முதலிய இடங்களில் வைத்திய கலாசாலைகள் ஏற்படுத்தி மாணவர்களுக்குப் போதித்து வந்தனர். அக்காலத்திலிருந்த கலிபாக்கள் வைத்திய சாஸ்திரத்தில் மிகுந்த அக்கறை காட்டி ஆதரித்து வந்தனர். அராபியர்கள் மிகுந்த கெட்டிக்காரர்களாயும் புத்திசாலிகளாயும் உதார குணமுள்ளவர்களாயும் இருந்தார்கள் மத்திய காலத்திலிருந்த முஸ்லிம்கள் கல்வியில் தேர்ந்தவர்களாயிருந்தனர்.

அக்காலத்திலிருந்த வைத்திய நிபுண ஆசிரியர்கள் வியாதிகள் உண்டாவதெப்படி? அவைகளின் கூறுகள்; அவைகளுக்குப் பரிகாரம் என்ன என்பவைகளைப்பற்றி வெகு சவிஸ்தாரமாக எழுதியிருக்கின்றனர். அவர்களில் முக்கியமானவர்கள் நால்வர் அலிபின் சுப்பான், அபூபக்கர் பின் முகம்மது, அலி பின் அப்பாஸ் அலிஹுசேன் பின் அப்துல்லா பின் சீனு ஆகிய நால்வரும்அராபிய வைத்திய சாஸ்திர புஸ்தகம் எழுதியுள்ளதைப்போன்று எவரும் எழுதவில்லை கடைசியாக சொன்ன ஆசிரியர் சுல்தானுக்கு ராஜாங்க வைத்தியராக இருந்து வந்தார் அவர் இருந்த காலம் கி. பி. 1000 முதல் 1037 வரை என்று சொல்லலாம். அவர் 99 நூல்கள் எழுதியிருக்கிறார். தவிர, தத்துவ சாஸ்திரம், வான சாஸ்திரம், வேதாந்த சாஸ்திரம், ஆயுர்வேத சாஸ்திரம் முதலிய அருமையான சாஸ்திரங்கள் எழுதியுள்ளார். அராபிய வைத்தியத்தின் பெருமையைப் பாருங்கள். 'ஒரு அரசிளங்குமரன் பித்தம் பிடித்தவன்போல் தான் மனிதனல்ல வென்றும் தான் பசு என்ற மிருகமென்றும் பிரம்மை கொண்டிருந்தான். தினந்தோறும் அவன் பசுவைப் போலக் கத்துவது வழக்கம். தன்னை வெட்டி விட்டு மாமிசத்தை சாப்பிட்டு விடுங்கள் என்று அடிக்கடி சொல்வான் அவன் ஒன்றும் சாப்பிடுவதில்லை. அவ்விஷயத்தை நான்காவது வைத்திய ஆசிரியரான அலி ஹுசேன் பின் அப்துல்லா பின் சினு என்பவர் கேள்விபட்டு அத்தகைய வியாதியஸ்தரைப் பார்த்து சிகிச்சை செய்வதாக ஒப்புக்கொண்டார். ஒருவனைவிட்டு அவ்வியாதியஸ்தரிடம் சென்று உன்னை வெட்டுவதற்காக கசாப்புக்காரர் ஒருவர் வரப்போகிறார்; நீ சந்தோஷமாயிரு" என்று சொல்லும்படி செய்தியனுப்பினர். பின்னர் வைத்தியர் ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு வியாதியஸ்தர் இருக்கும் அறைக்குள் புகுந்து "எங்கே அந்த பசு? நான் அப்பசுவைக் கொல்லலாமா?" என்று சொன்னர். அவ்வியாதியஸ்தன் பசுவைப்போல் கத்தினன். உடனே வைத்தியர், அவனுடைய கைகளையும், கால்களையும் கட்டினர். "அவன் மிகவும் மெலிந்திருக்கிறான்; அவனைக் கொல்ல நான் தயாராயில்லை; அவனுக்கு நல்ல போஷணை அளிக்கவேண்டும்" என டாக்டர் கூறியதும், அவன் எழுந்திருந்து தனக்கு ஆகாரம் வேண்டுமெனக் கேட்டு சாப்பிட ஆரம்பித்தான் பின்னர் தினே தினே சாப்பிடவும் அவனுக்கு திரேகத்தில் சக்திவந்தது; முன்னிருந்த பிரம்மையும்தெளிந்து சுகமாகயிருந்தான்.

ஐரோப்பா தேசமானது அக்காலத்தில் மிகுந்த கேவலநிலைமையில் இருந்துவந்தது. அராபியர்கள் ஸ்பெயின் தேசத்திற்குச் சென்று ஜிப்ரால் டருக்குச் சென்றனர். கிரீஸ் தேசத்திலிருந்தும் அரேபியா தேசத்திலிருந்தும் தங்களுடன் வைத்திய சாஸ்திரமும் மற்றும் சகிப்புத்தன்மையும் கொண்டுவந்தனர் கார்டோவா, மலோகா, டோல்டோ, கானடா, சிவிலி, முதலிய இடங்களில் யூதர்கள் முஸ்லிம் மாணவர்கள் அரசாங்கத்தின் உதவியின்பேரில் கிரேக்கர், ரோமன் முதலிய நாகரீகங்களைக் கற்றுக்கொண்டனர்.

பதினுறு பதினைந்தாம் நூற்றாண்டுகளில் அவர்கள் அதிகமுன்னேற்ற மடைந்தனர் ஸ்பெயின்தேசமானது கிறிஸ்தவர்களால்பிடிபட்டவுடன் முஸ்லிம்களுக்கு இருந்த செளகர்யங்களெல்லாம் குறைந்துபோயின.

பத்தாவது நூற்றாண்டில் அராபியர்களுக்குள் இரணசிகிச்சையில் அப்துல் காசிம் என்பவர் மிகவும் பேர்பெற்று விளங்கிவந்தார் பன்னிரண்டு பதின்மூன்றாவது நூற்றாண்டுகளிலும் மிகவும் கியாதிவாய்ந்தவர்கள் தோன்றியிருந்தனர். இப்னுல்பதர் என்பவர் அரிய மேதாவி. அவர் ஆசியாமைனர், கிரீஸ்முதலிய தேசங்களைச் சுற்றிவந்தவர் அவர் பற்பல மூலிகைகளைக் கண்டுபிடித்திருக்கிறார். அவருடைய வைத்திய சாஸ்திரம் பிரஞ்சு பாஷையிலும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

ஆசிரியர் குறிப்பு.

உப்புச்சட்ட-மறுப்பும் முஸ்லிம்களும் :— காந்திஜீ உப்புச்சட்டத்தை மீறி நடக்கிறார், அங்ஙனம் நடக்கும் வண்ணம் பிறரையும் தூண்டுகிறார். உப்புச்சட்டத்தைமீற அவர் மார்ச்சுமீ 12உ யன்று சபர்மதி ஆசிரமத்திலிருந்து பல தொண்டர்களுடன் புறப்பட்டார். கால்நடையாகவே டாண்டிஎன்ற ஸ்தலத்திற்கு அவரும் தொண்டர்களும் சென்றார்கள். ஏப்ரல்மீ 6உ கடல் நீரைஎடுத்து அவர்கள் உப்புக்காய்ச்சினர். கரையோரத்தில் இயற்கையாகப் படிந்திருந்த உப்பையும் சேகரித்தனர், தவிர உப்புவிற்பனையும் செய்தனர். இவ்விதம் அவரும் தொண்டர்களும் சட்டத்தை மீறினர். இவரைப்பின்பற்றி குஜராத், பஞ்சாப், டில்லி, வங்காளம், ஐக்கியமாகாணம், ஆந்திரம், மகாராஷ்டிரம், தமிழ்நாடு முதலிய பலமாகாணங்களிலும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் உப்புச்சட்டத்தை மீறினர், மீறிக்கொண்டுமிருக்கின்றனர்.

அரசாங்கம் வாளாவிருக்கவில்லை தக்கநடவடிக்கை எடுத்துக்கொண்டு, நூற்றுக்கணக்கில் தொண்டர்களைக் கைதிசெய்து தண்டித்தது, தண்டித்துக்கொண்டும் இருக்கின்றது பம்பாயில் பிரபல வக்கீலாக இருந்த நரிமன், அகில இந்தியகாங்கிரஸ் கமிட்டி பொக்கிஷதாரும் லக்ஷாதிபதியுமான யமுனாலால் பஜாஜ், காந்திஜியின் மக்களான தேவதாஸ் காந்தி, ராமதாஸ் காந்தி, வங்கத்தலைவரான ஜெ. எம். சென்குப்தா, காங்கிரஸ்தலைவர் ஜவ்ஹர்லால்நேரு, நாகேஸ்வரராவ் பந்துலு, ஸ்ரீமான் பிரகாசம் முதலிய பிரபலஸ்தர்களும் கைதிசெய்யப்பட்டு தண்டிக்கப்பட்டுளர். மற்றும் பலதொண்டர்களும் சுமார் 800 பெயர்கள்வரை தண்டிக்கப்பட்டிருப்பதாகத்தெரிகிறது, காந்திஜி கைதி செய்யப்பட்டபின் அருடைய ஸ்தானத்தில் இருந்து சட்டமறுப்புப்போரை நடத்துவதற்கு பரோடாமாஜி ஹைகோர்ட் ஜட்ஜியும் ஷியாவகுப்பைச்சேர்ந்தவருமான அப்பாஸ் தயாப்ஜி என்றகனவான் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சிற்சில முஸ்லிம்கள் இச்சட்டமறுப்பில் சேர்ந்திருந்தாலும், ஒத்துழையாமை இயக்க காலத்தில் ஏராளமான முஸ்லிம்கள் தாராளமாக காங்கிரஸில் சேர்ந்துசிறைக்குச் சென்றதுபோல் இப்பொழுது செல்லவில்லை. அன்று காங்கிரஸ் கட்டளைக்குக் கீழ்படிந்து தியாகம்செய்ததுபோல் இப்பொழுது செய்யவில்லை. இச்சட்ட மறுப்பிலும் சேரவில்லை. அக்காலத்தில் காங்கிரஸ் கட்டளைக்குக் கட்டுப்பட்ட முஸ்லிம் தலைவர்களில் பெரும்பான்மையினர் இப்பொழுது கட்டுப்படாமலிருப்பதுடன், இவ்வியக்கத்தில் ஈடுபடலாகாது என்று முஸ்லிம் சமுகத்திச்கு எச்சரிக்கையும் செய்திருக்கின்றனர்.

சிறுபான்மையரான முஸ்லிம்கள் ஒத்துழையா இயக்ககாலத்தில் பெரும்பான்மையினராகத் தியாகம்செய்துவிட்டு காந்திஜியின் கடைசிப் போராகிய இச்சட்டமறுப்பில் அத்திபூத்ததுபோல் ஒன்றிருவர் மாத்திரம் தென்படுவதென்றால், அதற்குக் காரணம் யாது? ஒத்துழையாமைக் காலத்தில் காங்கிரஸ் மகாசபையும், காந்திஜீயும் தேசியப் பொதுக்கொள்கையைக் கடைப்பிடித்திருந்தனர். முஸ்லிம்களும் தந்நல மறுப்புடன் தியாகம்புரிந்தனர். அப்போது இந்துமுஸ்லிம் ஒற்றுமை நிலவியிருந்தது. முஸ்லிம் சமூகத்

தின் மதவுணர்ச்சியை மதித்து காங்கிரஸ் ஹிந்துக்களும் காங்கிரஸ் ஹிந்துக்களின் உனர்ச்சியைமதித்து முஸ்லிம்களும் சகிப்புத் தன்மையுடன் தாராள நோக்கமும் கொண்டு நடந்துவந்தனர்.

ஆனல், ஒத்துழையா இயக்கம் நிறுத்தப் பட்டதும், ஹிந்துக்களிலுள்ள சில சமய வாதிகள் சுத்தி இயக்கம் என ஓரியக்கத் தைத் தோற்றுவித்தனர். படிப்பும், பணமு மில்லாத முஸ்லிம்களிற் பலரைச் சுத்தி செய்து ஹிந்துக்களாக்கினர்; பலரை ஆக்க முயன்றனர்; இன்னும் முயன்று வருகின்ற னர்; முஸ்லிம்களின் மத உணர்ச்சியை மதி யாது, அவர்களைக் கோப மூட்டக்கூடிய விதமாகப் பல பூசல்கள் விளைத்தனர். வகுப் புச் சச்சரவுகளை உண்டாக்கினர். முஸ்லிம் கள் தங்கள் உயிரினும் அரிதாக மதிக்கும் திரு குர்ஆனை அவமதித்தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும், அவர்களின் பீவிமார்களான உம்மஹாத்துல் முமின்னீகளை ... மற்ற பெரியார்களையும் ஏசிப் பேசினர்; ...காசப் பான்மையில் பல புத்தகங்களை ...யற்றினர்; பத்திரிகைகளிலும் வியாச ...மெழுதி முஸ்லிம்களின் மனதைப் புண் ...டுத்தி விட்டனர். இத்துடன் நில்லாது முஸ்லிம்களை இந்தியாவைவிட்டுத் துரத்தி விடுவதாகவும் பயமுறுத்தினர். இறுதியாக சர்வ கக்ஷி மகாநாடு எனப் போலி மகா நாடு ஒன்றைக் கூட்டி, அதற்கு முஸ்லிம் கனவான் ஒருவரைத் தலைவராக நியமித்து, ஒரு திட்டத்தைத் தயார் செய்தனர். அத்திட்டத்திற்குத் தான் நேரு அரசியல் திட்டம் என்று பெயர். அத்திட்டத்தில் முஸ்லிம்களுக்குத் தக்க பாதுகாப்பில்லை. போதிய பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று முஸ்லிம் தலைவர்கள் கூறியதற்கு, காங்கிரஸ் தலைவர்கள் கவனிக்கவில்லை. காங்கிரஸ் ஹிந்துத்தலைவர்களும் ஏனைய ஹிந்துக்களும் ஏற்படுத்தி வைத்திருக்கும் அவர்கள் சமூகச் சங்கமாகிய ஹிந்து மகா சபை சொன்னதுபோல், அவர்கள் நடந்து முஸ்லிம் தலைவர்களை அவமதித்து, முஸ் லிம் சமூகத்தையே குழி தோண்டிப் புதைப் பதற்கான ஏற்பாடுகளையும் செய்தனர்.

இவைகளை எல்லாம் பார்த்துக்கொண்டு முஸ்லிம்கள் வாளா இருந்தனரா? அன்று! அன்று! அவர்களும் தங்களாலான மட்டும் தங்கள் சமூகத்தைக் காக்க முயன்றனர். சுத்தி இயக்கத்தில் மூர்த்தத்துகளானவர் களை மறுபடியும் முஸ்லிம்களாக்கினர். தன் ஸீம் இயக்கமென ஓரியக்கத்தைத் தோற்று வித்து சமூகப் புனருக்குத் தாரணம் செய் தனர். முஸ்லிம்களின் சர்வ கக்ஷி மகாநாடு ஒன்றை மேன்மை தங்கிய ஸர் ஆகாகான் அவர்களின் தலைமையின் கீழ் டில்லியில் கூட்டி அரசியல் திட்டமொன்றை ஏற்படுத் தினர்.

முஸ்லிம்களுக்கு எத்தகைய காப்பு வேண்டு மென்பதை ஹிந்துக்களுக்கும் ஆங்கிலேயர் களுக்கும் ஏனையோருக்கும் விபரமாக விளக் கினர். இதை ஹிந்துக்கள் சுயநல சமூகக் கொள்கை எனக்கூறி, உலகத்திலேயே இல் லாத விஷயம் என்று சொல்லினர். உல கத்தில் பல பாகங்களிலும் சிறுபான்மை யினருக்குப் பெரும்பான்மையினர் பாது காப்பளித்திருப்பதற்காகத் தக்க ஆதாரத் துடன் முஸ்லிம்கள் பதில் கொடுக்கத்தவற வில்லை. அத்துடன் காங்கிரஸிலிருந்த முஸ் லிம்களில் பெரும்பான்மையினர் அக்காங்கி ரஸ் சபையை பகிஷ்கரித்தனர். தலைவர்களில் இரண்டொருவர் நீங்கலாக ஏனைய எல்லா முஸ்லிம் தலைவர்களும் காங்கிரஸைவிட்டு வெளி வந்தனர். இந்நிலைமையை அறிந்த காந்திஜீ லாகூர் காங்கிரஸில் ஒரு யுக்தி செய்தார். பூரண சுயேச்சைத் தீர்மானம் என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதுடன் அதற்கு அனுசரணையாக நேரு திட்டத்தை யும் நிராகரிக்கச் செய்தார். காங்கிரஸ் பூரண சுயேச்சையை ஏற்றுக் கொண்ட தால், அதற்கு குடியேற்ற நாட்டு திட்ட மான நேரு அரசியல் திட்டம் தேவை யில்லை என்றே காங்கிரஸில் கூறப்பட்டது. அதன் பின்னும் முஸ்லிம்கள் காங்கிரஸில் சேரவில்லை. தேசியம் என்ற பெயரை வைத் துக்கொண்டு, பெரும்பான்மையினராகிய ஹிந்துக்கள் சுய நலங்கொண்டு, செய்யும் காரியத்தையும் சூழ்ச்சியையும் முஸ்லிம்கள் உணர்ந்து அதில் ஈடுபடாது போயினர். அதைக்கண்ட ஹிந்து காங்கிரஸ்வாதிகளில் சிலர், முஸ்லிம்களை தேசாபிமான மற்றவர் கள் என்று ஒருபக்கம் கூற, காந்திஜீயோ உலகத்திற்குப் புதிதாக வந்தவரே போல் பாசாங்கு செய்து, விஷயமறியா மக்கள் மருண்டுபோகும் விதமாக நடித்து வருகிறார்.

ப்பாஸ்தயாப்ஜீயின் மகள் மீது சார்ந்து கொள்ளுகிறார். மௌலானா ஷௌகத்அலீக்கும் மற்றவர்களுக்கும் பதில் கூறும்போது, கல்மனதும் கரையும் விதவாக பத்திரிகையில் எழுதுகிறார். சீக்கியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டிருக்கும் பிணக்குகளைத் தீர்த்துவைக்கும்படியாக அவரை அழைத்தால், "நீங்களிருவரும் வாள் கொண்டு யுத்தம் செய்யும் வல்லமையுள்ளவர்கள். ஆதலின் சண்டை போடுங்கள். எவர் ஜெயிக்கிறாரோ பார்க்கலாம்" எனக் கூறி இருவருக்கும் சண்டை மூட்டுகிறார். ஒத்துழையாமை இயக்க காலத்தில் இருந்த காந்திஜீயும் காங்கிரஸூம் இப்பொழுது இல்லை; அக்காலத்தில் தேசியவாதிகளாக இருந்த இவர்கள் இப்பொழுது ஹிந்து மகா சபைக்குக் கட்டுப்பட்ட சமூக வாதிகளாக மாறி, அவர்கள் நோக்கத்திற்கு இணங்கி நடப்பவர்களாக ஆகிவிட்டனர். ஆதலின், முஸ்லிம்களின் பாத்தியதைகள் காங்கிரஸில் ஒப்புக்கொள்ளப்படும் வரை. இவ்வியக்கத்தில் முஸ்லிம்கள் ஈடுபடுவார்கள் என்று அவர்கள் எதிர்ப்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. முஸ்லிம்களைப் பயங்காட்டி அவர்கள் எத்தனையோ விதமான சூழ்ச்சிகள் புரிந்துகொண்டு வருகிறார்கள். ஆனால் முஸ்லிம்கள் மாத்திரம் தங்கள் தலைவர்களின் உபதேசங்களைக் கேட்டு நடந்து கொள்ளின் சமூக வாதிகளாய ஹிந்துக்களால் முஸ்லிம்களுக்கு எத்தகைய கெடுதியும் வராது. நம்மவர் அவசரப்பட்டு, சுயராஜ்யம் ஹிந்துக்களுக்கு மாத்திரம் தானே கிடைத்துவிடும். நமக்குக் கிடைக்காதே; என்று பேதமையாக எண்ணி, பெரியோர்களின் பேச்சைத் தட்டி ஒற்மைமையையும் கட்டுப்பாட்டையும் முறித்து, காங்கிரஸில் சேர்ந்து உப்பு சட்ட மறுப்பில் ஈடுபடின் அப்பொழுது தான் முஸ்லிம்களுக்கு முஸீபத்துப் பிடித்தது என்பதை நேயர்கள் நன்றாக ஞாபகத்தில் வைக்கவேண்டும். இச்சட்ட மறுப்பு எவ்வாறாயினுஞ் சரி, முஸ்லிம்கள் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையையும் கடைபிடித்திருக்கும் வரை, அவர்களுக்கு எவ்விதக் கெடுதியும் எவராலும் வராது. ஆதலின் நம்மவர் ஆங்காங்கு ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் வளர்த்து சமூகப் புனருத்தாரணத்தில் ஈடுபடுவார்களாக.

கூத்தாநல்லூர் முஸ்லிம் லீக் ரிப்போர்ட்டு

மகுடத்தில் கண்ட சங்கத்தின் 1927, 1928, 1929 ஆகிய வருஷங்களின் வரவு செலவு கணக்கடங்கிய ரிப்போர்ட்டு வரப்பெற்றோம். இந்த ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருப்பதன் பிரகாரம் மதம், சமூகம், தேசம் ஆகியவைகளின் அபிவிருத்திக்கு உழைப்பதே இந்த சங்கத்தின் முக்கிய நோக்கங்களெனத் தெரியவருகிறது. இந்த சங்கம் தனது நோக்கத்திற்கேற்ப இஸ்லாமிய தேசிய ஸ்கூல் ஒன்றை ஏற்படுத்தி நடத்தி வந்திருப்பதுடன், இதை தஞ்சை ஜில்லா போர்டின் மேல் பார்வையின் கீழ் மிடில் ஸ்கூலாக ஆக்கி இருப்பதாகவும் தெரியவருகிறது. இவ்வாறு இதை மிடில் ஸ்கூலாக ஆக்கி தன்னுடைய நிர்வாகத்தில் எடுத்துக் சொள்வதற்காக ஜில்லா போர்டார் நன்கொடைரூ, 5000 கொடுக்க வேண்டுமெ[ன்]று விதித்த நிபந்தனைக்கேற்ப அப்பொழுதிரு[ந்த] லீக்கின் தலைவர் ஜனாப் ஹாஜி. ஐ. மு. முஹம்மது இஸ்மாயீல் ராவுத்தர் அவர்கள் பொது ஜன நன்மையை உத்தேசித்து நன்கொடை 5,000 ரூபா அளித்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

ஈதல்லாமல் கூத்தாநெல்லூருக்கு யூனியன் போர்டு ஏற்படுத்துதல், தந்தி தபால் ஆபீஸ் ஏற்படுத்துதல், சப்ரிஜிஸ்டர் ஆபீஸ் ஏற்படுத்துதல் ரஸ்தாவுக்கு கப்பி போடுதல் ஆகிய பல பொது நன்மையான காரியங்களில் இச்சங்கம் பெரிதும் ஈடுபட்டு உழைத்திருப்பது போற்றத்தக்கதாகும். மேலும் அவ்விடங்களில் நடைபெற்று வந்த கூடு கொடியேற்றம் முதலிய அனாசாரமான காரியங்களை அகற்றுவதில் இச்சங்கம் முழு முயற்சியுடன் ஈடுபட்டு உழைத்திருக்கின்றது.

இதுபோல் நமது தென்னாட்டிலுள்ள இதர முஸ்லிம் சங்கங்கள் பலவும் கல்வித் துறையிலும் பொது நன்மையான காரியங்களிலும் உழைக்க முன்வந்தால் மதத்திற்கும் சமூகத்திற்கும் தேசத்திற்கும் உபயோகமாக யிருக்குமென்று நம்புகிறோம்.

மதுரையி

ஹிபாஜத்துல் இஸ்லாம் கிளை

மதுரை தாசில்தார் பள்ளிவாசலில் சென்ற 18-4-30 தே
ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்குப் பின் ஜனுப் ஹாஜீ முஹம்மது
லாஞ சாகிப் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் முஸ்லிம்களின் பொதுக்
டம் கூடிற்று. அவ்வமயம் வேலூர் மௌலாஞ மௌல்வீ முகம்மது ஷர்
த்தீன் சாகிப், திண்டுக்கல் மௌலாஞ மௌல்வீ முகம்மது மியான் சாகிப்
க்கவீ) ஆகிய இருவரும் தாருல் இஸ்லாம்பத்திரிகையாலும், அதன் ஆசி
ர் பா. தாவூத்ஷா இயற்றிய நூல்களாலும், சுத்த சத்திய இஸ்லாம்மார்க்கத்
ின் உஸூலிய் யத்தான கொள்கைகளுக்கு விரோதமாய் பிரசாரம் செய்யப்படு
தை கண்டித்து உருக்கமாகப் பிரசங்கம் செய்யப்பட்டது. இத்தகைய தீங்கை
ட்டு முஸ்லிம் பொதுஜனங்களைக் காப்பாற்றவேண்டுமென்ற நோக்கத்துடன்
வே கூட்டத்தில் ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டு அதற்கு ஹிபாஜத்துல் இஸ்
ாம் கிளைச்சங்கமெனப் பெயர் வைக்கப்பட்டது. மேற்படி சங்கத்திற்கு மௌலாஞ மௌல்வீமுஹம்மதுகனீ ஆலிம் சாகிப் அவர்கள் தலைவராகவும், ஜனுப் ஹாஜீ முகம்மது மௌலாஞ சாஹிப் காரியதரிசி & பொக்கிஷதாராகவும், மௌலாஞமௌல்வீ முகம்மதுஹஸன் ஆலிம்சாகிப் ஜாயின்ட் செக்ரடரியாகவும் தெரிந்தெடுக்கப்பட்டதுடன் இன்னும் பத்து பெயர்களை நிர்வாக சபை அங்கத்தினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டது. இன்னும் தேவையானவர்களை நிர்வாக அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்க மேற்படி கமிட்டிக்கு அதிகாரமும் கொடுக்கப்பட்டது. மேற்படி மௌல்விகள் இருவரும் மதுரையில் இஸ்லாமிய பிரசாரம் செய்துகொண்டிருக்கின்றனர். தாருல் இஸ்லாம் ஆசிரியரைத் தருவிப்பதாகவும், அவருடன் நேருக்குநேர் வாதம் செய்யவேண்டுமென்றும், அவர்களைச் சிலர் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்கள் மதுரையில் தாமதித்திருக்கிருர்கள் என்றும் தாவூத்ஷா சாகிபும் அவரது துணைவரும் இன்னும் மதுரைக்கு வரவில்லை என ஒரு நிருபர் அறிவிக்கிருர்.

டைக்கு மிடங்கள்:—

துல்லாஹ் சாஹிப் & Co,
77, மார்கட் ஸ்டிரீட்.

முகம்மது சுல்த்தான் அவர்கள்,
91, மார்க்கட் ஸ்டிரீட்.

ஸ் பிரிட்டிஷ் & அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
18, பாட்டரி ரோடு.

மெஸர்ஸ் **M. M.** துல்பகீர் கம்பெனி,
34, நார்த் பிரிட்ஜ் ரோடு.

கோலாலம்பூர்

மெஸர்ஸ் **M. M.** துல்பகீர் கம்பெனி, மார்கட் ஸ்டிரீட்.

கிள்ளான்

ஜனுப் ஹாஜீ **K. O.** முகம்மது இப்ருஹீம் சாஹிப்,
31, ரப்பா ஸ்டிரீட்.

பினங்

ஜனுப் **V. O.** ஹஸன் முகம்மது அவர்கள்,
34, கிட்டாரோடு.

ரங்கூன்

ஜனுப் **V. M.** அப்துற்றஹ்மான் அம்பலம் அவர்கள்,
85, மொகல் ஸ்டிரீட்.

Messrs. **A. P. N.** அப்துல் ஜப்பார் & பிரதர்ஸ்,
77, எடுவர்டு ஸ்டிரீட்.

நவீன கதா புக் டிப்போ, மங்கமாரி வீதி.

கோழும்பு

ஜனுப் **A. M. K.** ஆலிம் சாஹிப்,
No. 220, **2nd** கராஸ் ஸ்டிரீட், பெட்டா.

மதராஸ்

மெஸர்ஸ் **A. M. K** ஹாஜி முகம்மது ஷரீப்,
மரைக்காயர் & பிரதர்ஸ்,
220, அங்கப்ப நாய்க்கன் தெரு.

M. A. காதர் பாவா & பிரதர்ஸ்,
206, அங்கப்ப நாய்க்கன் தெரு.

Printed at the Kesari Printing Works, & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb,
Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.